
கல்கி



KALKI 4.7.1965 35 காசு




வேலையை இழந்தது
என்னுடைய
தவறு என்றார்கள்!
நானாகத்தான் வேலையைப
போக்கிக் கொண்டேன்
என்றார்கள் வீட்டில எல்லோரும
எனக்கு உடலில் சோர்வு,
மனத்தில் தெம்பில்லை என்றால்
என் குற்றமா என்ன!
Horlicks
அவன் சொன்னது
முற்றிலும் உண்மை!
சில வாரங்களிலேயே
என்னுடைய அசதி போய்
விட்டது. என்னுடைய புது
வேலையில் உற்சாகத்துடன்
உழைப்பதற்கான சக்தியும்
வந்துள்ளது!
Horlicks
ஹார்லிக்ஸ்
அதிக சக்தி யளிக்கிறது!

கல்கி
பொருளடக்கம்

விசுவாவசு ஆனி 20 ★ ஜூலை 4

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.




பக்தவத்ஸலம்
தண்ணீரைக் கலக்க உனக்கு என்ன துணிச்சல்?
மொழிப் பிரச்னை
தி.மு.க



மலர் 24 ● இதழ் 49

இந்தியா – ஜப்பான் உடன்பாடு

ஆசியாவில் விஸ்தரித்து வரும் செஞ்சீன ஆட்சியை அடக்க நாஸர் அவர்களின் மூலமோ, வேறு தலைவர் மூலமோ 'தூது' விடுத்தால் போதாது. உலக சமாதானத்தைப் பற்றி உரையாற்றுவதும், அணு ஆயுதங்கள் பரவுவதன் பயங்கரத்தைப் பிரகடனம் செய்வதும் நல்லதே. ஆனால் இவை மூலம் சீனாவின் போக்கைத் தடுத்துவிட முடியாது. பிரத்தியட்ச நிலையைப் புரிந்துகொண்டு இப்போது ஸ்தூலமாக ஒரு நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும்.

இந்தோனேஷியா, மலேஷியா, பர்மா மற்றும் தென்கிழக்காசிய நாடுகள் இவற்றின் மக்கட் தொகையில் சீனர்களின் சத விகிதம் அதிகம், உயர்ந்து கொண்டும் வருகிறது; ஆசிய நாடுகள் பலவற்றிலும் பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் கம்யூனிஸ்ட் கட்சிகள் தமது நடவடிக்கையைத் தீவிரமாக்கி வருகின்றன. ஜனநாயக நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள இந்த ஆபத்தை எப்படித் தடுப்பது என்பதே கேள்வி.

சீனாவுக்கும் ருஷ்யாவுக்குமிடையே தற்போது நிலவும் முரண்பாடுகள் காரணமாக, சீனாவை எதிர்க்கும் ஒரு நாட்டுக்கு ருஷியாவின் சகாயம் கிடைக்கும் என நினைப்பதற்கு இடமில்லை. நிச்சயமற்ற சிநேகத்தின் மீது நம் கொள்கையை அமைத்துக் கொண்டால் அபாய காலத்தில் அவதியுறுவோம்.

சீனாவின் விஸ்தரிப்பைத் தடுப்பதற்கு எவ்வித ஐயப்பாடுமில்லாத ஒரு வழி கண்டாக வேண்டும். மேற்கத்திய வல்லரசுகளுடன் கெட்டியான உறவுபூண்டு அவற்றின் உதவியைப் பெறுவது அத்தியாவசியம். எனினும் ஆசியாவில் சீனாவின் சாம்ராஜ்யம் பரவாமல் தடுப்பதற்கு ஆசியாவுக்குள்ளேயே ஒரு திடமான ராணுவக் கூட்டினை உருவாக்கிக் கொள்வது மிகவும் அவசியம். இதன் பொருட்டு ஜப்பானும் இந்தியாவும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு ஆசியாவைச் சீனாவின் ஆதிக்க விஸ்தரிப்பிலிருந்து காப்பதற்காக முனைந்து செயல்பட வேண்டும் என்று ராஜாஜி யோசனை கூறுகிறார். ஜப்பானும் இந்தியாவும் பரஸ்பரம் ராணுவ உதவி செய்து கொள்வதுடன், இவ்விரு நாடுகளுமாக ஒன்று சேர்ந்து மேற்கத்திய வல்லரசுகளிடமிருந்து சகாயம் பெற்று, ஆசியாவில் சீன ஆதிக்கப் பரவலைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது அவரது கருத்து. இந்த யோசனைக்கு அமெரிக்கா, ஜப்பான் இரு நாட்டுப் பத்திரிகைகளும் இடமளித்து வெளியிட்டுள்ளன. இனி இந்திய சர்க்கார் மேற்கொண்டு இவ் விஷயத்தில் பிரவேசித்து, யோசனையைச் செயலாக்குவதில் ஈடுபாடு காட்டவேண்டும். பெருகி வரும் கம்யூனிஸ அபாயத்தைத் தடுத்து நிறுத்தும் ஒரு ராஜரீக அரணை விரைவில் எழுப்பவேண்டியதே இந்திய சர்க்காரின் கடமையும் பொறுப்புமாகும்.

ஸோவியத் ருஷியாவுடன் நாம் நட்புடன் இருப்பதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. சீன அபாயத்தைச் சமாளிக்குமளவுக்கு எந்த ஆசிய நாடும் தனிப்பட்ட முறையில் சக்தி பெருமலிருக்கும்போது, கம்யூனிஸத்தைத் தழுவாத இரு நாடுகள் ராணுவ கூட்டுச் சேருவது தவிர்க்க முடியாத தேவை. இதோடு கம்யூனிஸ

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி — பாப்பா
— பாரதியார்

சீனாவை எதிர்ப்பதில் அபாய காலத்தில் நாம் நிச்சயமாக நம்பக்கூடிய மேல் நாடுகளுடன் ராணுவ ரீதியில் நட்பு பெறுவதும் ஆசிய மக்களின் நலனுக்கு மிகவும் அவசியமான நடவடிக்கை. 'இதையே தில்லியில் உள்ள உயர்தர அரசாங்க வட்டத்தினரும் விரும்புகிறார்கள். எனினும், ஆளும் கட்சித் தலைவர்களின் பிடிவாதமான மனப்போக்குக்குப் பயந்தே அவர்கள் தங்கள் கருத்தை வெளியிடத் தயங்குகின்றனர்' என்று ராஜாஜி கூறுகிறார். சில தலைவர்களின் பிடிவாதத்துக்காகத் தேசத்துக்கும், ஆசியக் கண்டத்துக்கும் உற்பாதம் ஏற்பட அநுமதிக்கலாகுமா? ஆளும் கட்சித் தலைவர்கள் தமது மனச்சாட்சியை மதித்து இக்கேள்விக்கு விடை காண வேண்டும்.

நேரு அவர்கள் உலக சமாதானப் பிரியர். அடிமைத் தளையிலிருந்து விடுபட்ட நாடுகளுடனெல்லாம் நட்பு பூண விரும்பியவர் அவர். எனினும், சீன ஆக்கிரமிப்புக்குப்பின் நட்பு, சமாதானம் என்ற பெயர்களில் அபாயகரமான தொடர்புகள் கொள்ளாமல் ராஜநீதியைப் பின்பற்ற வேண்டிய அவசியம் அவர் உள்ளத்தில் இடம் பெற்றது. சர்வதேச ரீதியில் உதவி பெற்று, ஆசியாவில் ஒரு சக்தி வாய்ந்த ராணுவக் கூட்டை உண்டாக்கும் கருத்தும், அந்தஸ்தும் நேரு அவர்களுக்கு இருந்தது. ஆனால் துரதிருஷ்டவசமாக அவருக்குக் காலமில்லாமல் போய் விட்டது. அமெரிக்கா, பிரிட்டன் அல்லது வேறெந்த மேல்நாட்டிடமுமே பிரத்தியேக வெறுப்பு ஏதுமில்லாதிருந்த நேரு அவர்கள் சர்வதேச அரசியலில் நல்ல விஷய ஞானம் பெற்றிருந்ததால் சீனாவுக்கு எதிராக ருஷியாவை நம்பிப் பயனில்லை என்பதை உணர்ந்திருப்பார். இன்றுமட்டும் அவர் ஜீவியவந்தராக இருந்தால் ராஜாஜி கூறும் இந்திய—ஜப்பான் உடன்பாட்டு யோசனையை நிச்சயமாக ஏற்றுச் செயலாக்குவார். ஆனால் அவரை இழந்து விட்டோம். அவருக்குப்பின் அதிகாரத்துக்கு வந்திருப்பவர்களுக்கு அவரை வழிபடுவது தவிர, புத்திசாலித்தனமாக ஏதும் செய்யத் தெரியவில்லை. 'மறைந்து போனவர்களை வழிபடுவது நல்லதுதான்; ஒருவர் தம் பதவியைக் காத்துக் கொள்ளவும் அது உதவுகிறது. ஆனால் சக்தி வாய்ந்த ஓர் அண்டை நாடு ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பின்பற்றும் போது அது மட்டும் பயன் தராது' என்கிறார் ராஜாஜி.

அந்நியக் கடன் சுமை

கடனைத் திருப்பித் தருவது பற்றி முறையான திட்டமின்றியே அந்நிய நாடுகளிடமிருந்து கோடிக்கணக்கில் பிச்சை எடுத்து வரும் சர்க்காரின் மதியீனத்தைப் பல முறை எடுத்துக் காட்டியிருக்கிறோம். இப்போது, அந்நியக் கடன்களைத் திருப்ப வேண்டிய தவணை குறித்து வெளியாகியுள்ள செய்தி சர்க்காரின் அறிவீனத்தைப் பளிச்சென்று எடுத்துக் காட்டுகிறது. மூன்றாவது திட்டத்தின் கடைசி ஆண்டாகிய நடப்பு வருஷத்தில் இந்தியா 97 கோடி ரூபாய்களை அந்நியக் கடன்களுக்காகத் திருப்ப வேண்டும். இதையடுத்து நான்காம் திட்டத்தின் ஐந்தாண்டுகளில் ரூ. 1,119 கோடியைத் திருப்பியாக வேண்டும்; அதாவது ஆண்டொன்றுக்கு ரூ. 224 கோடி திருப்ப வேண்டும். அரசாங்கத்துக்கு எவ்வித வருமானமோ, மக்களுக்கு எவ்வித பலனோ அளிக்காத திட்டங்களுக்காக மேலும் இவ்வளவு பெரும் தொகைகளை வரி மூலம் வசூலித்தாக வேண்டும்!

கடனைத் திருப்ப வேண்டிய நெருக்கடி நிலை காரணமாக, நான்காம் திட்டத்தில் அதிகமாக எதிர்பார்க்கும் ராஜ்யங்கள் தாங்களே மேலும் வரிகள் விதித்து வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமேயன்றி, மத்திய அரசாங்கத்தை எதிர்பார்ப்பதற்கில்லை. 'மக்களுக்காகத் திட்டம் போட்டு நிறைவேற்றுகிறோம்' என்று பறைசாற்றிக் கொண்டு இதற்காகவே மக்களின் வாக்குகளைக் காங்கிரஸார் தங்கள் கட்சிக்குக் கேட்டு வந்தனர். ஆனால் தேர்தல்—வசிய மருந்தான இந்தத் திட்டங்களுக்காக ஏற்படும் செலவைப் புது வரிகள் மூலமாகவும் பண்டங்களின் விலையேற்றத்தின் மூலமாகவும் மக்களேதான் தருகிறார்கள் என்பதை இவ்வளவு காலமாக மூடிமறைத்து வந்தார்கள். மக்களும் ஏதோ அந்நிய உதவியிலேயே திட்டங்கள் நிறைவேறி வருவதாக மயங்கி இருந்தனர். இப்போது தான் அந்நிய உதவி என்பது வெறும் கடனே என்பதும், அந்தக் கடன் சுமையும் மக்களின் தலையில்தான் விழுகிறது என்பதும் வியக்தமாகத் தெரிகின்றன. உள்ளூர் அரசியல் விவகாரங்களும், தேர்தல் வெற்றியும் ஒரு பக்கம் இழுக்கப் பகுத்தறிவும் நேர்மையும் மறு பக்கம் இழுக்கின்றன. சமூகத்துக்கோ, அதில் ஒரு சாராருக்கோ சர்க்கார் செய்வதாகக் கூறப்படும் எந்த உதவிக்காகவும் மக்களேதான் திரவியம் தந்தாக வேண்டும் என்பதை வாக்காளர்கள் அறிய வேண்டும். மக்கள் பெறும் உதவிக்காக மட்டுமின்றி, அதை அமுல்படுத்தும் சர்க்கார் இயந்திரத்துக்காகவும் அதிலுள்ள ஊழல்களுக்காகவும் சேர்த்து அதே மக்கள்தான் நேரடி வரியும் மறைமுக வரியும் தர வேண்டும். கடன் தவணையைப் பற்றிப் புதிய செய்தியைப் படிக்கும்போது இதற்காக விதிக்கப்படும் புது வரிகளை மக்கள் எப்படித் தாங்கமுடியும் என்ற அச்சமும் விசனமும் உண்டாகின்றன.

பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காகத் தற்போது செய்யக் கூடியதெல்லாம் இறக்குமதிகளைக் குறைப்பதொன்றே என்று அரசாங்கம் எண்ணுகிறது. ஆனால் இதன் விளைவாக, உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்காக வெளிநாடுகளிலிருந்து உபகரணங்களைத் தருவிக்கும் வாய்ப்பு மிக

வும் குறையும். இதனால் உற்பத்தியும் பெரிதும் பாதிக்கப்படும். இறக்குமதி வெட்டு முதலிய கட்டுப்பாடுகளால் பொருளாதாரத்தைக் காக்க முடியாது. திட்டங்களை வெட்டுவதொன்றே நாட்டை அழிவிலிருந்து மீட்கும் ஒரே வழி.

முன் யோசனையில்லாமல் முன்பு சர்க்கார் செய்த தவறுகள் காரணமாக இப்போது நாடு எதிரிகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்வதில் அதிக அக்கறை செலுத்த நேரிட்டிருக்கிறது. பழைய தவறுகளைச் சொல்லிப் பயனில்லை. இன்றைய ஆபத்தை எப்படியும் சமாளித்தாக வேண்டும். போதிய அந்நிய ராணுவ உதவி பெறும் வரையில் நமது ராணுவச் செலவு பெருகியே தீரும். இதோடு பழங்கடன்களைத் திருப்பும் பாரத்தையும் தாங்குவதைத் தவிர்ப்பதற்கில்லை. ஆனால் இதெல்லாம் போதாது என்று இன்னமும் வெளிநாடுகளிடம் கடன் வாங்குவதும், மேன்மேலும் பெருந் திட்டங்களைப் போட்டு வருவதும் மடமையன்றி வேறென்ன? கடனைத் திருப்பித் தருவதற்காகப் புதுக் கடன் வாங்குவது பரிகாசத்துக்கும், பரிதாபத்துக்கும் உரியதாகும்.

ஆளும் கட்சிக்காரர் மட்டுமின்றி, வரி கொடுப்பவர்களாகிய மக்கள் அனைவருமே தேசத்தின் இன்றைய நிலை பற்றிக் கவலைப்பட வேண்டும். ஏனெனில் தற்போது இந் நாட்டில் ஒரு கடையின் படியேறிப் பொருள் வாங்கும் பரம ஏழையிலிருந்து மக்கள் அனைவருமே மறைமுக வரி செலுத்தி வருகிறார்கள். அவர்கள் யாவருக்கும் நாட்டு நடப்பில் பங்குண்டு. காரணங்களை நிதானமாக ஆராய்ந்து பார்க்கவும், பழைய தவறுகளைத் திருத்திக் கொண்டு, புது வழியில் செல்லவும் இதுவே தருணம்.

என்ன சேதி?

அடங்காத பசி!

நெருக்கடி நிலைமை என்ற பெயரில் தற்போது அமுலாகி வரும் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தைத் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று ராஜ்ய அரசாங்கங்கள் மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனவாம்! மதுவைப் போலச் சுவைக்கச் சுவைக்க மேன் மேலும் பசி வெறியூட்டுவதே அதிகாரம் என்பது இதனால் ஐயமற வெளியாகிறது.

நெருக்கடி நிலைமையைத் தீர்ப்பதற்கு ராணுவ ரீதியில் புத்திசாலித்தனமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. ஆனால் ஹிந்தித் திணிப்பை எதிர்ப்பது போன்ற நியாயமான ஜனநாயக உரிமைகளைத் தடை செய்வதற்கும், வியாபாரிகளை விசாரணையின்றிக் கைது செய்வதற்கும், மற்றும் போருக்குச் சற்றும் தொடர்பற்ற இனங்களில் பாதுகாப்புச் சட்டத்தைப் பிரயோகித்துக் காங்கிரஸின் பலத்தைப் பெருக்கிக் கொள்வதற்கும் 'நெருக்கடி' என்பது ஓர் அரிய வாய்ப்பாகி விட்டது. பாதுகாப்புச் சட்டத்தை நீடிப்பது இந்திய ஜனநாயகத்தின் மீது நிகழ்த்தியுள்ள மற்றொரு தாக்குதலாகும்.

விபரீத யோசனை

பார்லிமெண்ட், ராஜ்ய சட்டசபைகள், நகர சபைகள், பஞ்சாயத்துக்கள் இவை யாவுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்த வேண்டும் என்று அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் ஒரு தனி நபர் தீர்மானம் வரவிருக்கிறது.

'பார்லிமெண்டுக்குரிய பொறுப்புக்களும் பிரச்னைகளும் ராஜ்ய சட்டசபைகளுக்குரிய பொறுப்புக்களும் பிரச்னைகளும் வேறு வேறாகும்; ஒரே சமயத்தில் இவ்விரு சபைகளுக்கும் தேர்தல் நடப்பதால் அகில இந்திய ரீதியிலும், பிரதேச ரீதியிலும் பிரித்துப் பார்த்து ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டிய விஷயங்களில் மக்கள் குழம்பிப் போகிறார்கள். வெவ்வேறு அடிப்படையில் அமைந்த பார்லிமெண்ட் தேர்தலும், ராஜ்ய சட்டசபைத் தேர்தலும் வெவ்வேறு சமயங்களில் நடைபெற்றால்தான் சாமானிய மக்களின் மனத்தில் இத்தகைய குழப்பம் நேராது காக்கலாம்' என்பது ராஜாஜியின் கருத்து. இதற்கு முற்றிலும் முரணாக உள்ளூர்ப் பிரச்னையிலிருந்து தேசியப் பிரச்னை வரையில் எல்லாவற்றையும் குழப்பும் யோசனை காங்கிரஸில் தோன்றியிருக்கிறது! 'கட்சிச் சார்பற்றது' என்று சொல்லப்பட்ட போதிலும் காங்கிரஸின் கிளைகளாகவே இயங்கி வரும் பஞ்சாயத்துக்கள் உட்பட நாடெங்கிலும் காங்கிரஸ் ஆதிக்கமே பகிரங்கமாக ஏற்பட வேண்டுமென்பதே தீர்மானத்தின் உள் நோக்கம்.

இத்தீர்மானத்தைக் காங்கிரஸ் அக்கிராசனர் திரு காமராஜ் அவர்கள் ஆதரிக்கவில்லை என்று அறிகிறோம். அவர் எக்காரணத்துக்காக ஆதரிக்காவிடினும், அவரையே அவரது கட்சிக்காரர்கள் பின்பற்ற வேண்டுமென விரும்புகிறோம்.

டெலிவிஷன் திட்டம்

இந்தியாவில் டெலிவிஷனைப் பரப்புவதற்காகப் பெருத்த செலவு செய்ய உத்தேசித்திருக்கிறார்கள். 1967ம் ஆண்டுத் தேர்தலுக்கு ஆளும் கட்சிக்காகப் பிரசாரம் செய்வதே டெலிவிஷன் திட்டத்தின் நோக்கம் என்று பலர் நினைக்கிறார்கள். இது உண்மையாயின் இப்போது நாட்டின் நிதி நிலைமையில் இப்படிச் செய்வது சகிக்க முடியாத பெருங் குற்றமாகும். காங்கிரஸின் தேர்தல் பிரசாரம் இதன் உள் நோக்கமல்ல என்றே வைத்துக் கொண்டாலும், இப்போது இந்தியா தேசத்துக்கு அவசியமற்ற ஓர் ஆடம்பரத் திட்டமே டெலிவிஷன் அமைப்பது. இதற்குத் தேவைப்படும் தொகையை வேறு உபயோகமான துறைகளில் செலவிடுவதே நியாயம்.

ராஜாஜியின் கருத்துக்கள்

'தி. மு. க. தலைவர்களைத் தூண்டி ஆத்திர மூட்டி, அவர்கள் தீவிரமான நடவடிக்கையில் ஈடுபடுமாறு செய்ய வேண்டும்; அதன் பின் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு அவர்களைச் சிறைப்படுத்த வேண்டும்; 1967 தேர்தலுக்கான காங்கிரஸ் பிரசாரத்தை எதிர்ப்பாரின்றி அமோகமாகச் செய்ய இதுவே வழி' என்று தமிழ் நாட்டுக் காங்கிரஸ் சர்க்காரும், இந்திய தேசிய காங்கிரஸின் அக்கிராஸனரும் கருதுகிறார்கள்.

காங்கிரஸின் கொள்கைகளையும் வரிகளையும் கண்டு மக்கள் மிகவும் அதிருப்தி கொண்டிருப்பது உண்மை. என்றாலும், தேர்தல் சமயத்தில் காங்கிரஸ் தருகிற வாக்குறுதிகளைக் கண்டு மயங்கி விடுகிறார்கள். ஆனால் குறிப்பிட்ட தொழில்களுக்கு மட்டும் விசேஷ நன்மை செய்வதற்காகப் பற்றாக்குறை பட்ஜெட் தயாரித்து, ரூபாய் நோட்டுக்களை அச்சிடுவதைத் திட்டக் கமிஷன் ஒப்புக் கொள்ளுமா என்பதே கேள்வி. அரசியல் உள்நோக்கங்களுக்குத் திட்டக் கமிஷனும் இறுதியில் பணிந்துவிடும் என்று எதிர் பார்க்கலாம்.

அடுத்த தேர்தலிலேயே காங்கிரஸை அதிகார பீடத்திலிருந்து இறக்கி, வேறொரு கட்சியை அதனிடத்தில் தேர்ந்தெடுப்பது சாத்தியமல்ல வென்று வைத்துக் கொண்டாலும் அது அவசியமுமல்ல. பெர்மிட்—லைசென்ஸ் ராஜ்யத்தை எதிர்ப்போரைக் கணிசமான அளவு தேர்ந்தெடுத்து எதிர்க் கட்சியைப் பலப்படுத்தினாலே போதும். தன்னுடைய மந்திரஜால சக்தி வலுக் குன்றி விட்டது என்று காங்கிரஸ் உணரும்படி செய்தாலே போதும். எதிர்க்கட்சி பலம் பெற்றாலே காங்கிரஸ் தலைவர்களுக்கு அடக்கமும், ஓரளவு விவேகமும் உண்டாகும். அதிகார பலத்தாலும் பண பலத்தாலும் மீண்டும் காங்கிரஸ் கட்சியே அதிகாரத்தில் அமர்ந்தாலும், அது கட்டுப்பட்டு நடக்கும்; தேசத்துக்கும் நன்மை கிட்டும்.

ஃஃஃ

நிர்வாக ஊழல், பொருளாதாரச் சீர்குலைவு இவற்றுக்குக் காரணமான காங்கிரஸை இவ்விரு அடிப்படைகளிலேயே அடுத்த தேர்தலில் வெல்லவேண்டும். நிர்வாகத்திலும், தேசப் பொருளாதாரத்திலும் காங்கிரஸ் செய்துள்ள மகத்தான தவறுகளை அதனால் ஒரு போதும் மறைக்க முடியாது. ஊழலுக்கும், பொருளாதாரச் சீர்குலைவுக்கும், மற்றுமுள்ள எல்லாத் தீமைகளுக்கும் காங்கிரஸ் ஆட்சியின் சர்க்கார் சர்வாதிகாரக் கொள்கைதான் காரணம். இந்த அடிப்படையில் தேர்தலில் நின்றால் தனக்குத் தோல்விதான் ஏற்படும் என்று காங்கிரஸ் நினைப்பதாலேயே வேறொரு விஷயத்தைத் தேர்தல் பிரச்னையாக்கப் பார்க்கிறது. 'ஆட்சிமொழித் திட்டத்தை அடிப்படையாக வைத்தே அடுத்த தேர்தலை நடத்துவோம்; எங்கள் சவாலை எதிராளிகள் ஏற்கட்டும்' என்கிறார் அக்கிராசனர் திரு காமராஜ். ஆங்கிலத்தை 'அந்நிய' மொழி, படிப்பாளிகள் மொழி என்றெல்லாம் கூறி வர்க்க பேதம் செய்து, மக்களிடம் விரோத உணர்ச்சியை உண்டாக்கி, பொருளாதாரத் தோல்வியை மறைத்தும் மறக்கச் செய்தும் வோட்டு வேட்டையாடலாம் என்பதே காங்கிரஸின் மயக்குத் திட்டம்."

நாட்டின் சுபிட்சம் ஆட்சி மொழியைப் பொறுத்ததல்ல என்பதையும், சர்க்காரின் நிருவாக — பொருளாதாரக் கொள்கைகளையே பொறுத்தது என்பதையும் மக்கள் உணர்ந்தால் காங்கிரஸின் மாயச் சவாலுக்கு மயங்க மாட்டார்கள். நமக்குக் கடன் கொடுக்கக்கூடிய நாடுகளின் தயாளத்தை மட்டுமே நம்பி இன்று நம் நாடு மயிர்க் காலில் இற்றுத் தொங்குகிறது. இதனால் உண்டாகியுள்ள நெருக்கடி அபாயகரமானது மட்டுமல்ல; அவமானகரமுமாகும். இந்நிலைக்குக் காரணகர்த்தரானவர்கள் வாக்காளர் கவனத்தை வேறுபுறத்தில் திருப்பித் தப்பிக்கப் பார்ப்பதை ஒருகாலும் அநுமதிக்கக் கூடாது.

அகில இந்திய ரீதியில் காங்கிரஸ் கட்சி ஆட்சி மொழித் திட்டத்தைத் தேர்தல் பிரச்னையாக்கினால், எல்லா ஹிந்தியரின் ஆதரவையும் பெற்று அதுவே பெருவாரி ஸ்தானங்களைப் பெறும். தென் இந்தியா காங்கிரஸைக் கைவிட்டாலும் பரவாயில்லை என்கிற அளவுக்கு அது பார்லிமென்டில் கணிசமான ஸ்தானம் பெறும்.

ஹிந்தி பேசாத மக்கள் தங்களுக்காக விரிக்கப்படும் வலையைப் புரிந்து கொண்டு ஜாக்கிரதையாக வேண்டும்.

ஃஃஃ

ஆட்சிமொழி குறித்து மாணவர் சங்கங்கள் வெளியிடும் அறிக்கைகளைப் பிரசுரிக்கக் கூடாது என்று மதுரைப் பத்திரிகைகளுக்குச் சர்க்கார் சார்பில் எச்சரிக்கை செய்யப்பட்டிருப்பதாக பெங்களூர் ஸயன்ஸ் இன்ஸ்டிட்யூட் மாணவர்கள் சிலர் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

"இது நாட்டின் ஜனநாயகத்துக்கு நல்லதல்ல. பொது நன்மையை முன்னிட்டு ஏதேனும் ஒரு விஷயத்தைத் தாற்காலிகமாக இருட்டடிப்புச் செய்ய வேண்டுமென அரசாங்கம் கருதினாலும், குறிப்பிட்ட விஷயத்தில் இரு சாராரின் கருத்துக்களும் பிரசாரமாகாமல் தடுக்க வேண்டும். சர்க்காரின் அறிக்கைகளையும் கருத்துக்களையும் பிரசுரிக்க அநுமதித்து, ஆட்சி மொழிப் பிரச்னையில் சர்க்காரின் உண்மையான எதிராளிகளான மாணவர்களின் கருத்துக்களை மட்டும் தடை செய்வது ஜனநாயக விரோதமாகும்" என்று அந்த மாணவர்கள் நியாயமாக எழுதியிருக்கிறார்கள்.


ஜூலை
முதல்
சென்னை :
சித்ரா
மஹாராணி
சயானி
மற்றும்
தென்னாடெங்கும்
B.A.
கணேஷ் பிலிம்ஸ்
.....தயாரிப்பு.....
டைரக்ஷன்
யோகானந்த்
ELEGANT
G.H.RAO



அத்தியாயம் 14

ரகசியச் சந்திப்பு

செல்லம் அந்த வருஷம்தான் எஸ். எஸ். எல். ஸி. தேறியிருந்தாள். அத்தானை அவள் அந்நிய மனிதன் போல் கருதாமல் கூச்சமோ தயக்கமோ இன்றி ஆனால் அடக்கமாக அவனுடன் பழகுவாள், அளவாகப் பேசுவாள். பெற்றோர்கள் உடனிருக்கும்போது மட்டும் அவளது இயல்பான சுபாவம் முன்னுக்கு வந்து, தன் பள்ளித் தோழிகளுடன் அரட்டை அடிப்பது போலவே அவனிடமும் பேசச் சொல்லும். அவனுக்கே வாழ்க்கைப்படப் போகிறோம் என்ற நம்பிக்கை அளிக்கும் துணிவில் அவள் வம்பு வளர்ப்பாள். எனினும் அவளுக்கே புரியாத ஏதோ ஒரு தடை அவர்கள் தனித்திருக்கும்போது வந்து சேர்ந்து, அவள் வாய்க்குப் பூட்டுப் போட்டுவிடும்! துருதுருப்பான பார்வையும் படபடப்பான பேச்சும் நறுக்குத் தெறித்தாற் போன்ற கிண்டல் மொழிகளும் ஒடி ஒளிந்துகொள்ள ஒல்கி நின்று அவசியத் தேவையான வார்த்தைகளை மட்டும் அவள் உதிர்ப்பாள்.

ஆகவேதான் இன்று — சத்தியபுரிக்கு அவர்கள் வந்து நான்கைந்து தினங்களுக்குப் பிறகு, தங்கப்பன் அவளைத் தனிமையில் தான் சந்திக்க விரும்புவதாகத் தெரியப்படுத்தியபோது அவள் இருதயம் பக் பக்கென்று பெரிதாகச் சத்தமிட்டு அடித்துக் கொள்வது அவளுக்குக் கேட்டது. நெஞ்சம் விம்மிப் பூரித்தது மகிழ்ச்சியால். பயமும் உள்ளத்தைக் கவ்வி நிறைத்தது. ஒன்றுக்கொன்று முரண்பட்டதான இந்த உணர்ச்சிகளை ஒரே சமயத்தில் தாள முடியாமல் திணறினாள் அவள்.

அத்தான் விரும்பியது போல் பெருமாள் கோவிலை ஒட்டினாற்போல் வலப்புறத்தில் இருந்த சவுக்கைத் தோப்பைத் தாண்டி அப்பால் ஏகாந்தமான இடத்தில் அமைந்திருந்த அந்தப் பாழடைந்த ஐயனார் கோவிலுக்குப் போய் அவருடன் அங்கு பேசிக் கொண்டிருக்க அவளுக்குப் பயம். போகாமலே இருந்துவிட்டால் அத்தானுடைய அதிருப்தியைச் சம்பாதித்துக்கொள்வோமோ என்ற பெருங் கவலை! எப்படிப் போவது? என்ன சாக்குச் சொல்வது பெற்றோருக்கு? சத்தியபுரிக்கு அவள் பல வருஷங்களுக்குப் பிறகுதான் மீண்டும் இப்போது வந்திருக்கிறாள். குழந்தையாக இருந்தபோது அத்தானுடன் குதித்தோடிச் சென்று பார்த்துப் பழகிய இடங்கள் தாமென்றாலும் இன்று அங்கே சென்றடையும் வழி நன்கு நினைவில் இல்லை. ஆனால் நடந்து செல்லச் செல்ல எப்படிப் போக வேண்டும் என்பது அடிக்கு அடி ஞாபகம் வந்துவிடும் என்கிற நம்பிக்கை அவளுக்கு இருந்தது. 'கோயிலுக்குப் போய் வருகிறேன் அம்மா' என்று அம்மாவிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டாள்.

'ஒரு நிமிஷம் இரு. இதோ நானும் வருகிறேன்' என்று அவளும் பின்னோடு கிளம்பினால் என்ன செய்வது? சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டாலோ, 'ஐயோ! செல்லத்தைக் காணோமே!' என்று ஊர் முழுதும் சல்லடை போட்டுச் சலித்துத் தேட ஆரம்பித்துவிடுவார்கள். போலீஸில் தகவல் கொடுக்கிற அளவுக்குக் கூட நிலைமை விபரீதமாகிவிடலாம். 'அத்தான்! என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறீர்கள்?' என்று மானசிகமாகத் தங்கப்பனிடம் வருத்தத்துடன் பிணங்கினாள் செல்லம். 'எதற்காக என்னை அங்கே வரச் சொல்கிறீர்கள்? கேட்க வேண்டியதை அல்லது கூறவேண்டியதை இங்கேயே பேசிவிடக் கூடாதா?' சிற்சில கதைகளிலும் நாவல்களிலும் காதல் மொழிகளைத் தங்கு தடையின்றி ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்ட தலைவனும் தலைவியும் கூடக் கல்யாணத்துக்கு முன்னால் அதற்கு மனப்பூர்வமாகச் சம்மதம் தெரிவித்துப் பேசிக் கொள்வதாகச் சித்திரிக்கப்பட்டிருப்பதைப் படித்துச் சிரித்திருக்கிறாள் செல்லம். அத்தகைய — அவளைப் பொறுத்தவரை நகைப்புக்கிடமளிக்கக் கூடிய ஒரு நிலை — தனக்கே ஏற்படும் என்று அவள் கனவிலும் கருதியதில்லை. அவ்விதம் திருமணத்துக்குத் தன்னுடைய முழு மனத்துடன் கூடிய ஒப்புதலைத் தெரிந்து கொள்ளத்தான் அத்தான் அழைக்கிறார் என்பதிலும் அவளுக்குச் சந்தேகம் இருக்கவில்லை. வேறு என்ன காரணம் இருக்க முடியும்? ஆனந்த வெள்ளத்தில் ஆழ்ந்த செல்லம்

'ஐயோ அத்தான்!' என்று கொஞ்சலாக அலுத்துக் கொள்ளவும் செய்தாள், தன் மனத்துக்குள்ளாகவே. 'அதை இனிமேல்தானா, நான் வாய் விட்டுச் சொல்லித்தானா நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்? எத்தனையோ படித்துப் பட்டம் பெற்றிருக்கிற உங்களுக்கு என் இதயத்தைப் படிக்கிற திறமைதானா இல்லாதுபோய் விட்டது? கடந்த சில வருஷங்களாகவே என் நடை உடை பாவனைகளிலெல்லாம் உங்களைத் திருப்திப் படுத்த வேண்டும் என்கிற நோக்கமே மேலோங்கி இருந்து வந்திருப்பதை நீங்கள் காணவில்லையா? நீங்கள் அன்பாக ஒரு வார்த்தை சொன்னால் நான் புளகாங்கிதமடைவதையும் பராமுகமாக இருந்தால் எனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருவதையும் பரிவுடன் உங்கள் பாதம் பட்டால்கூட என் நெஞ்சம் வெடித்துவிடும்போல் விம்மிப் பூரிப்பதையும் புரிந்துகொள்கிற சாமர்த்தியம் உங்களுக்குத்தான் இல்லையா? அல்லது என் காதலை உங்களுக்கு உணர்த்துகிற ஆற்றல் எனக்குத்தான் இல்லாமல் போய் விட்டதா?....'

'அம்மாவிடம் உண்மையை உள்ளபடி சொல்லி விட்டேனானால் என்ன?' என்று ஒரு கணம் யோசித்தாள் செல்லம். உடனடியாக அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளவும் செய்தாள். 'ரகசியத்தைக் காக்கத் தெரியாதவள் அவள். நாளைக்கு அத்தானுக்கும் எனக்கும் திருமணமாக வேண்டும் என்கிற ஆசை, ஆவல், ஆர்வம் எல்லாம் அவளுக்குண்டு. அதனால் அத்தானை அவர் விருப்பப்படி நான் தனிமையில் சந்திக்கப்போவதை அவள் தடுக்க மாட்டாள். வரவேற்கக்கூடச் செய்யலாம். ஆனால் அது காரணமாகவே — திருமணம் இனி இனிதாகத் தீர்ந்துபோன விஷயம் என்ற அளவில் — அவளுக்கு சந்தோஷம் மிகுதியாகிவிடும். அந்த மகிழ்ச்சியில் நாலுபேர் எதிரில் எங்கள் ரகசியச் சந்திப்புக் குறித்து ஏதேனும் உளறி வைப்பாள். அப்புறம் அத்தானுக்கு என் பேரில் வெறுப்பே மிகுந்து விடும்...நம்புவதற்கில்லை அம்மாவை!'

அது மட்டுமல்ல!

அத்தானும் அவளும் ஒருவர் மற்றொருவரது இதயத்தை இனி புதிதாகப் பகிர்ந்து கொள்ளவோ, புரிந்து கொள்ளவோ ஏதுமில்லை என்று அவள் உறுதியாகக் கருதிய போதிலும் பெற்றோர்களது ஆசி பெற்ற கருத்தொருமித்த காதலர்கள்தான் தாங்கள் என்று அவள் முடிவு கட்டிவிட்ட போதிலும் யாருக்குமே தெரியாமல் கள்ளத்தனமாகத் தனிமையில் சந்திப்பதிலே ஓர் அலாதியான இன்பம் இருக்கத்தானே செய்கிறது? அதையும்தான் அனுபவித்து விட வேண்டாமா? போனால் வராது என்பார்களே அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பமல்லவா இது!

'எப்படியும் அத்தானின் வேண்டுகோளுக்கிணங்கி ஐயனார் கோயிலுக்குப் போயே தீர வேண்டும்.'

நாலு நாட்களாய் வீட்டிலேயே அடைந்து கிடந்து தனக்கு அலுத்து விட்டதாகவும் அதனால் காந்தி பூங்கா வரை காலாற நடந்துவிட்டு வரச்



செல்வதாகவும் ஒரு குறிப்பு எழுதி அதனை. உண்ட களைப்பில் பகலுறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் தன் தாயார் எழுந்ததும் அவள் கண்களில் படுகிற மாதிரியாக ஒரு மேஜை மேல் வைத்து, அது பறந்துபோய் விடாத மாதிரி புத்தகப் பளுவையும் அதன் மீது சுமத்தி விட்டுக் கிளம்பினாள் செல்லம்.

காந்திப் பூங்கா பெருமாள்கோயில் இருந்த திசைக்கு நேர் எதிர்ப் பக்கத்தில் தொலைவில் இருந்தது. தனித்துச் சென்றிருக்கிறானே மகன் என்ற கவலையில் தேடுவதானால் அங்கே போய்த் தேடட்டும் முதலில் அப்பாவும் அம்மாவும்.—அதற்குள் நாமும் திரும்பிவிடலாம். அப்புறம் கேட்டால் 'நீங்கள் கடைத் தெரு வழியாகப் பூங்காவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது நான் பிள்ளையார் கோயில் தெரு வழியாகத் திரும்பி வந்து கொண்டிருந்திருப்பேன்' என்று சொல்லி வைத்தால் போயிற்று!



❁ ❁ ❁ சிந்தனையில் ஆழ்ந்து இருந்த தங்கப்பன் மருதாணி இடம் பெற்ற விரல்கள் எட்டி தன் இமைகளை இலேசாகத் தொட்டு மூடுவதையும் கூடவே கரங்களின் வளையொலியையும் அதனிலும் இனிமையான நகைப்பொலியையும் உணர்ந்தும் கேட்டும் திடுக்கிட்டான் ❁ ❁ ❁ ❁ ❁

அத்தியாயம் 15

செல்லத்தின் துணிச்சல்

சென்னையில் ஹாஸ்டலில் தங்கிப் படித்து வந்த நாலு வருஷங்களிலும் தங்கப்பன் சனி, ஞாயிறு கிழமைகளில் மாமா சபாபதியின் வீட்டுக்குப் போய் வருவான். அவர்களுடனேயே இருந்து படிப்பதை அவனும் விரும்பவில்லை; அவர்களும் வற்புறுத்தவில்லை. தாமரையும் அதனை அவ்வளவாக வரவேற்கவில்லை என்பதைத் தங்கப்பன் உணர்ந்திருந்தான். மரியாதைக்கு ஒரு முறை சபாபதி சொல்லி வைத்தார், ''என்ன தம்பி இது? நம்ம வீடு இருக்கிறச்சே ஹாஸ்டல், ஹோட்டல்னு நீ போய்க்கிட்டிருந்தால் அது உனக்கே நல்லா இருக்கா?'' என்று. ''அடிக்கடி வந்து போய்க்கிட்டுத்தானிருப்பேன் மாமா!'' என்ற தங்கப்பனின் பதிலை மறு வார்த்தை பேசாமல் ஏற்றுக் கொண்டும் விட்டார். 'செல்லத்துக்கோ வயதாகிக் கொண்டு வருகிறது. இந்தச் சமயத்தில் நம் வீட்டோடு கொண்டு வந்து வைத்துக்கொள்ளாது அவனைத் தனித்திருக்க விடுவதே நல்லதுதான்' என்ற நினைப்பு தங்கள் தங்கள் சொந்த நலனையொட்டியும் ஊர் வாயை முன்னிட்டும் ஒவ்வொருவர் மனத்திலுமே இருந்த கருத்துத்தான். எனினும் அதனை வாய் விட்டுச் சொல்ல வேண்டிய அவசியமோ சந்தர்ப்பமோ ஏற்படாமல் நாசூக்காக எல்லோருமே அனுசரித்துப் போனார்கள். ரொம்பவும் அவர்களிடம் ஒட்டி விடாமலும், அதே சமயத்தில் உறவு முறை அளிக்கும் பாத்தியதைகளையும் விட்டுக் கொடுக்காமலும் சாமர்த்தியமாக நடந்து நல்ல பெயர் சம்பாதித்துக்கொண்டான் தங்கப்பன்.

ஆரம்ப நாட்களில் அவனைக் கண்டதும் செல்லத்துக்கு உண்டான வெட்கம் படிப்படியாக மறைந்து விட்டது. சில தினங்களுக்குள்ளாக. வாரந் தவறாமல் வீடு தேடி வரும் அவனிடம் வேற்று முகம் என்ற நினைப்பு நீங்கிச் சரளமாகப் பழகும் சுபாவம் வளர்ந்தது. கல்யாணப் பேச்சு என்று ஏதும் ஆரம்பமாகாவிட்டாலும் அப்போதே அவனுக்கு அவள் என்ற நினைப்பு சபாபதி தம்பதியரின் உள்ளங்களில் மட்டுமல்ல; செல்லத்தின் மனத்திலும் கூடத்தான் எப்படியோ திருட்டுத்தனமாகப் புகுந்து கொண்டிருந்தது.

அவள் மீண்டும் தன் அத்தான் எதிரே வெட்கப்பட்டது இரண்டே தருணங்களில்தான். ஒருசில தினங்களுக்கு முன் உதகைப் பூங்காவனத்தில் ஒரு தடவை. மற்றொரு சமயம், இன்றைக்குச் சுமார் ஒன்றரை வருஷங்களுக்கு முன்பாக அவளுக்கு மஞ்சள் நீராட்டு விழா நடைபெற்ற போது! சர்வாலங்கார பூஷிதையாக விளங்கிய அவள் அன்று அவனைக் கண்டதும் மென்னகை பூத்து நாணியபோதுதான் எத்தனை அழகாக இருந்தாள்!

ஐயனார் கோயிலை யொட்டி உடைந்தும் உடையாமலும் இருந்த குதிரைகள் யானைகள், வீரர்களின் மண் சிலைகளுக்கு இடையில் உட்கார்ந்திருந்த தங்கப்பனுக்கு இன்றும் மனக் கண் முன்னால் அன்னப் பட்சி போல அலங்கரிக்கப்பட்ட அழகிய மேடையில் பட்டு விரிக்கப்பட்ட ஒரு நாற்காலியில் செல்லம் அமர்ந்து நலங்கிட்டுக் கொண்ட காட்சி பசுமையாகத் தோன்றியது.

மஞ்சள் நீராட்டு விழாவை ஏக விமரிசையாகத்தான் நடத்தினார் சபாபதி. ஸ்டெனோ வேலை பார்த்து, வருமான வரி, உத்தியோக வரி, பிராவிடண்ட் பண்டு சேமிப்பு, ஆயுள் இன்ஷியூரன்ஸ் முதலானவற்றுக்கான பிடித்தங்களெல்லாம் போக இருநூற்றி ஐம்பத்தெட்டு ரூபாயைக் கையிலே வாங்கும் தன் மாமாவுக்கு இத்தனை டாம்பீகச் செலவுகள் கட்டி வருமா என்று சந்தேகித்தான் தங்கப்பன். எவ்வளவு கடன் யார் யாரிடம் வாங்கியிருப்பார் என்று யோசித்தான்.

''காலேஜுக்கு நாளை ஒரு நாள் லீவு போட்டுவிட்டுக் காலமே முதல் பஸ்ஸைப் புடிச்சு இங்கே வந்துடு'' என்று இவ்விழாவுக்காகவே சத்தியபுரியிலிருந்து கிளம்பி வந்து சபாபதி வீட்டில் தங்கியிருந்த தாமரை ஞாயிற்றுக் கிழமையன்று கூறினாள் தன் மகனிடம். ''அட, இதெல்லாம் பெண்பிள்ளைங்க விவகாரம்; என்னை எதுக்கு இழுக்கறே?'' என்று தங்கப்பன் கேட்டபோது, ''சரிதாண்டா! இந்தக் கூடபுடலெல்லாம் செல்லத்துக்காக இல்லை; உனக்காகவும் எனக்காகவும்தான் புரிஞ்சுக்க!'' என்று அதட்டலாகக் கூறினாள் தாமரை. அவள் அப்படிக் கூடமாகப் பேசியதிலிருந்து உள் நோக்கத்தோடுதான் தன் மாமா கடன் வாங்கியாவது இத்துணை ஆடம்பரமாக இவ்விழாவை நடத்த முற்பட்டிருக்கிறார் என்பது புரிந்தது தங்கப்பனுக்கு. தாமரையையும் அவள் மகன் தங்கப்பனையும் திருப்திப்படுத்தி, தங்கப்பனைத் தம் மாப்பிள்ளையாக வளைத்துப் போடத்தான் நடக்கிறது




உடைதாங்கி உருமாதிரி
உதவி, ஏயர் - இந்தியா

மலரின் இதழ்... மென்மையான மேனி எழிலுக்கு ...

லக்மே முகப் பவுடர் உங்கள் சரும நிறத்தோடு நேர்த்தியாக இணைந்து. மாசற்ற சரும இன்பத்தை அளிக்கிறது. சருமத்தோடு இணையும் 8 வித நிறங்களில் வரும் பூவிதழையொத்த லக்மே முகப் பவுடர் உங்களுக்கு அனுகுணமானது. மிருதுவான, மழமழப்பான சரும சுகம் பெற அதை உபயோகியுங்கள்.



லக்மே முகப் பவுடர்



இத்தனை ஆர்ப்பாட்டமும்! கண்ணுச்சாமி விட்டுப் போயிருக்கும் சொத்துக்களின் விவரம் சபாபதிக்குத் தெரியாதது அல்ல. தங்கப்பன் தம் மாப்பிள்ளை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டால் இப்போது வாங்கும் கடனைப் பிற்பாடு ஒரு நாள் அடைக்க முடியாமலா போய் விடப் போகிறது! தம்முடைய பொருளாதார நிலை தாமரைக்குத் தெரிந்த ஒன்றுதான் என்றாலும் தேவையான போது பணம் புரட்டக் கூடிய செல்வாக்குத் தமக்கு நிரம்ப உள்ளதை இப்படி ஊரைக் கூட்டி அமர்க்களப்படுத்துவதன் மூலம் காண்பித்து அவனைப் பிரமிக்க வைத்தால் தம் வழிக்கு வந்து விடுவான் என்கிற நப்பாசை சபாபதிக்கு. தங்கப்பன் உள்ளூறச் சிரித்துக்கொண்டான்: 'இது என்ன இவர் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வதுடன் நம்மையும் ஏமாற்றப் பார்க்கிறாரே! இந்த வெளித் தோற்றத்தைக் கண்டு மயங்கி அவர் செல்வத்தில் புரளுவதாகக் கணக்குப் போட்டு அது காரணமாகக் கல்யாணத்துக்குச் சம்மதித்து விடவும் போவதில்லை; பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவளல்ல என்பதற்காகவே ஒரு பெண்ணை நான் நிராகரித்துவிடவும் போவதில்லை' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். உண்மையில் கல்யாணம் குறித்து எந்தவிதமான தீர்மானத்துக்கும் வரமுடியாத நிலையில், அதனை ஒரு பிரச்னை என்றோ அது குறித்துத் தான் சிந்திக்க வேண்டுமென்றோ கூட எண்ணத் தோன்றாத நிலையில் அன்று இருந்தான் தங்கப்பன்.


ஆனால் அவன் தாயார் தாமரையோ சுற்றிலும் நடப்பனவற்றையெல்லாம் வெகுவாக ரசிப்பவளாகக் காணப்பட்டாள். தன்னை மகிழ்விக்க, திருப்திப்படுத்தவென்றே செல்லத்துக்கு நடத்தப்படும் விழா அது என்ற நினைவிலே பெருமிதமும் சந்தோஷமும் தாமரையின் முகத்தில் பிரதிபலித்தன. பொட்டிழந்தவள் என்ற காரணத்தால் ஒதுக்குப்புறமாகப் போய் ஒரு நாற்காலியில் அமர்ந்துதான் அவள் சுற்றுமுற்றும் கண்ணோட்டம் செலுத்தினாள். எனினும் சபாபதி அவள் இருந்த பக்கமே அடிக்கடி திரும்பிப் பார்த்து அவள் கண் ஜாடையாக இடும் கட்டளைகளைக்கூட நிறைவேற்றச் சித்தமாக இருந்தார். சொர்ணமோ தாமரையின் முகம் கோணாதிருக்க வேண்டும் என்கிற கவலையோடு பத்து நிமிஷங்களுக்கு ஒரு முறை அவள் அருகில் சென்று தாகத்துக்கு ஏதாவது வேண்டுமா என்று கேட்டாள். நிகழ்ச்சிகளை எப்படி வைத்துக் கொள்ளலாம், எவ்வாறு நடத்தலாம் என்பதற்கான ஆலோசனைகளைக் கோரிப் பெற்றாள். தாமரையும் தயக்கமின்றி 'இதைச் செய், இப்படிச் செய்' என்றதோடு புதிய பெரிய செலவுகளுக்கும் வழி வகுத்தாள்! ''இருப்பது ஒரே பெண். நன்றாகத்தான், தாராளமாகத்தான் செய்யட்டுமே'' என்று சுற்றிலுமிருந்தோரிடம் கூறினாள்.

நல்ல நாளும் வேளையும் பார்த்துக் கொடுத்த புரோகிதர் மங்கல நீராடலுக்கு அதிகாலை ஐந்தரை மணி உகந்ததென நேரம் குறித்திருந்தார். அச்சமயம் நெருங்கின உறவினர் மட்டுமே வந்திருந்தனர். நான்கு சுமங்கலிகளாகச் சல்லடையைத் தாங்க மஞ்சள் நீர் கொட்டப்பட்டபோது பட்டுப் புடவை அணிந்திருந்தும் செல்லத்தின் உடல் வெட வெடவென்று நடுங்கத்தான் செய்தது. அப்போது அவள் சிறு குழந்தையைப் போல் சிரித்துக் கொண்டே போட்ட கூச்சல், சுற்றிலுமிருந்த பெண்கள் கூடச் சேர்ந்து செய்த ஆர்ப்பாட்டம், பெரியவர்கள் அவர்களை அதட்டி அடக்கிய ஒலி எல்லா

அருமையான யோசனை!

ரோம் நகரத்துக் கார்டினலிடம் ஒருவன், "பிரபுவே! உங்களுக்காக அழகான வெள்ளைக்குதிரை ஒன்றை எங்கள் ஊரிலிருந்து கொண்டு வந்தேன். துரதிருஷ்டவசமாக வரும் வழியில் அதன் கால் முறிந்து நொண்டியாகி விட்டது" என்றான்.

அவனிடம் கார்டினல் கூறினார்: "நீ இப்போது என்ன செய்யவேண்டுமென்று சொல்கிறேன் கேள். நீ இன்னின்ன பெயர்களை உடைய இந்த ஆறு கார்டினல்களிடம் போ. அவர்களிடமும் என்னிடம் சொன்னதையே சொல். உன் குதிரை நன்றாக இருந்திருக்குமானால் என்னைமட்டும்தான் திருப்தி செய்திருக்க முடியும். இப்போதோ உன் நொண்டிக் குதிரையை வைத்துக்கொண்டு அரை டஜன் பேர்களைத் திருப்தி செய்ய முடியும்!"



பிரான்ஸிஸ் பேகன் கட்டுரையிலிருந்து

மாகக் கலந்து கேட்டு ஒரே ரகளையாக இருந்தது.

தங்கப்பனுக்கு மட்டும் நாளின் பெரும் பகுதிப் பொழுது போகவே இல்லை. ஏதோ ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு கடனே என்று மூலையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தான் அவன். ஏதாவது உதவியாக இருக்கலாம், கடைகண்ணிக்குப் போய் வர வேணுமானால் செய்யலாம் என்றாலோ அவனை வேலை வாங்க யாருமே முன்வரக் காணோம். மாறாக முணுக்கென்றால் அவன் தேவைகளைக் கவனிக்க மூன்றுபேர்கள் வந்தார்கள். ராஜோபசாரம்தான் அன்று அவனுக்கு! ''நமஸ்காரம் செய்கிறேன் அத்தான்!'' என்று கூறியவாறு செல்லம் அவனை நெருங்கி வந்தபோது எழுந்து நின்றது ஒன்றுதான் அவனுக்கு வேலை!

மாலையில் பாதித் தெருவை அடைத்துப் போட்ட பந்தலில் ஏகக் கூட்டம் கூடிவிட்டது. வந்தவர்கள் எல்லாம் தங்கள் தங்கள் வசதிக்கேற்பப் பூவும் பாலும் பழமும் கொண்டுவந்து குவித்தார்கள். டாய்லெட் செட், ஜாக்கெட் துணி என்று வேறு சில பரிசுப் பொருள்களும் காட்சிப் பொருள்கள் போல் ஒரு பக்கம் வைக்கப் பட்டிருந்தன. செல்லத்தை அவளது பள்ளித் தோழிகள் சுற்றிச் சூழ்ந்து மொய்த்தார்கள்.

சிங்கார மேடையில் தாமரையின் அன்பளிப்பான நீல நிறப் புடவையை அணிந்து செல்லம் அமர்ந்திருக்கச் சுமங்கலிகள் ஒவ்வொருவராக அவளுக்குப் புட்டுத்தட்டுச் சுற்றி, பின்னர் பன்னீர் தெளித்துக் கரங்களுக்குச் சந்தனம் பூசி, வெற்றிலை பாக்குப் பழம் பெற்றுக் கொண்டார்கள். இந்தச் சமயத்தில்தான் போட்டோ பிடிக்குமாறு தன் தாயார் வற்புறுத்தவே 'பிளாஷ்' பொருத்தப்பட்ட காமிராவுடன் அருகில் போய் நின்றான் தங்கப்பன். அப்போதுதான் அவள் தோழிகள் அவள் காதோடு காதாக ஏதோ சொல்லிக் கிண்டல் செய்ய இயல்பாகப் புன்னகை புரிந்து நாணினாள் செல்லம். அவளது அந்த அழகுத் தோற்றம் புகைப்படத்தில் பதிவானது மட்டுமல்ல, தங்கப்பனின் நினைவிலும் நீங்காமல் இடம் பெற்று விட்டது.

விருந்தும், சினிமாப் பாட்டுக்களைப் பாடும் ஒரு கோஷ்டியின் கச்சேரியும் முடிந்த பிறகு, கற்பூரம் ஏற்றி ஆரத்தி சுற்றியானதும் செல்லம் கழுத்திலும் தலையிலுமிருந்த ஆபரணங்களையும் பூச்சுமையையும் தாங்க முடியாமல் தாங்கி மெல்ல இடை ஒடிய நடந்து வந்து அன்றைய நிகழ்ச்சிகளுக்கு முத்தாய்ப்பு வைக்கிற மாதிரியாகத் தாமரையை நமஸ்காரம் செய்தாள்.

அவளை அப்படியே வாரி எடுத்துக் கட்டி அணைத்து உச்சி முகர்ந்தாள் தாமரை. அப்போதுகூட அதைப் பற்றித் தங்கப்பன் பெரிதாக நினைத்துப் பொருட்படுத்தவில்லை. ஆனால் நாலு தினங்களுக்கு முன் கோவையிலிருந்து பஸ் பிடித்துச் சத்தியபுரிக்கு வந்து சேர்ந்து, தன் வீட்டினுள் அம்மா சொல்லிக் கொடுத்தபடி ஞாபகமாக வலது காலை எடுத்து வைத்து நுழைந்த செல்லத்தை ஒன்றரை வருஷங்களுக்கு முன்பு எத்தனை ஆர்வத்துடன் அணைத்தாளோ அதற்குக் கொஞ்சமும் குறைவின்றி அதே வாத்சல்யத்துடன், தாமரை உச்சி முகர்ந்து மகிழ்வதைப் பார்த்தபோதுதான் தங்கப்பன் திணறிப்போனான். அந்த விநாடியில் தாமரையின் முகத்தில் தென்பட்ட பெருமிதமும் ஆனந்தமும் செல்லத்தை மருமகளாக அடைவதென ஒன்றரை வருஷங்களுக்கு முன்னமேயே அவள் முடிவு செய்துவிட்டாள் என்பதைத் தங்கப்பனுக்கு உணர்த்தின.


தன்னை எதிர்நோக்கியிருந்த ஒரு பெரிய சிக்கலை, அதனை விடுவிக்கும்போது தான் நடத்த வேண்டியிருக்கக் கூடிய போராட்டத்தை நினைத்தபோது அவனுக்கு இருதயத்தைக் கசக்கிப் பிழிவதுபோலிருந்தது. இரண்டு மூன்று நாட்கள் தீவிரமாக யோசித்து இந்தப் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்த்துவைக்கச் செல்லத்தின் உதவியையே நாடுவது என்று தீர்மானித்தான். அவளைத் தனிமையில் சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்து இடத்தையும் குறிப்பிட்டான்.

பிற்பகல் நேரத்தில், ஏகாந்தமான இந்தப் பகுதியில், ஐயனார் கோயில் பொம்மைகளுக்கு மத்தியில், மரங்கள் சூழ்ந்து நிழலும் ஒளியும் ஒன்றை ஒன்று துரத்திப் பிடித்து விளையாடி விநாடிக்கு ஒரு கோலம் வரையும் இவ்விடத்தில் அவளுக்காகக் காத்திருந்தான். அவளிடம் விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது, என்ன விதமாகச் சொல்வது என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்த தங்கப்பன், மருதாணி இடப்பெற்ற விரல்கள் எட்டு தன் இமைகளை இலேசாகத் தொட்டு மூடுவதையும், கூடவே கரங்களின் வளையொலியையும் அதனினும் இனிமையான நகைப்பொலியையும் உணர்ந்தும் கேட்டும் திடுக்கிட்டு எழுந்து நின்றான்.

'செல்லத்துக்கா இத்தனை துணிச்சல்?' என்பது போல் அவன் தன்னைப் பார்ப்பதைக் கண்டு கலங்கி நின்றான் அவன்.

(தொடரும்)

சேமிப்பு
சிறிதாயினும்
அதிசயமாகப்
பெருகுகிறது



மிகச் சிறிய சேமிப்புகூட ஒழுங்காக பாங்கியில் கட்டிவந்தால் அது மேலும் மேலும் வளர்கிறது. காரணம் தெரிந்ததே.

வீட்டிலே வைத்திருந்தால் பணம் எப்போதும் செலவாகிவிடுகிறது. அது தொலைந்துபோகலாம் அல்லது திருட்டுப்போகலாம்.

ஆனால் பாங்க் ஆஃப் பரோடாவில் அது பத்திரமாக இருக்கும். 4% வட்டி வேறு சேரும். உங்கள் தொகை பெருகிவருவதைக் காட்டும் கணக்குப்புத்தகம் உங்களை மேலும் மேலும் சேமிக்கத் தூண்டும்.

உங்களுக்கு தெரியுமா, பாங்க் ஆஃப் பரோடாவில் புதுக் கணக்கு ஒன்று தொடங்க ஒரே ஒரு ரூபாய் போதும். உங்கள் சேமிப்புக் கணக்கிலிருந்து வாரம் இருமுறை வரை பணம் எடுக்கலாம். அதற்கு வரையறையும், முன்னறிவிப்பும் தேவையில்லை.

மதராஸ் ராஜ்யத்தில் எங்களுக்கு கீழ்க்கண்ட இடங்களில் கிளைக்காரியாலயங்கள் உள்ளன:

கோயம்பத்தூர்
காரைக்குடி
மதராஸ் (நகரக் முக்கிய கிளைக்காரியாலயம்)
மவுண்ட் ரோடு, மைலாபூர், தியாகராயநகர்
அம்பத்தூர்
மணச்சநல்லூர்
தஞ்சாவூர்
திருச்சிராப்பள்ளி

ஆயிரங்களை சேமிக்கத் துணைசெய்கிறது

பாங்க் ஆஃப் பரோடா

(ஸ்தாபிதம்: 1908)

தலைமை ஆபீஸ்: பரோடா

"உங்கள் சேவை எங்கள் கடமை" என்ற தலைப்பில் எங்கள் பல்வேறுவகைப் பணிகளை விளக்கும் இலவச வெளியீட்டைக் கேட்டுப் பெறுங்கள்



கந்தன் கருணை

திருமுருக கிருபானந்த வாரியார்

35. மந்திராலோசனை

சூரன் செந்தில் மாநகருக்கு அனுப்பியிருந்த பகன், மயூரன் முதலிய ஒற்றர்கள் முருகப் பெருமானின் சேனைகளைக் கண்டு திரும்பி வந்தார்கள். அவர்கள் அக்ரபதியை வணங்கி, ''நாளையே இங்கு வந்து யுத்தம் செய்வது என்று முருகன் இப்பொழுது முடிவு செய்துள்ளான்'' என்று கூறினர்.

மந்திரிகளையும் சேனாதிபதிகளையும் தமது புதல்வர்களையும் அழைத்தான் சூரன். மந்திராலோசனை தொடங்கியது; மந்திராலோசனை நடக்கும் பொழுது வேறு யாரும் உள்ளே இருக்கக் கூடாது. வண்டு உருவத்தில் வந்துகூட தேவர்கள் ரகசியங்களை அறிந்து செல்வார்கள். ஆகவே, 'அழைத்தவர்களைத் தவிர ஈ, எறும்பு கூட அங்கிருக்கக் கூடாது' என ஆக்ஞை விட்டான் சூரபன்மாசுரன்.

தேவர்கள் வண்டு உருவம் எடுப்பார்கள் என்பதற்கு ஒரு கதை:

தமயந்தியின் சுயம்வரத்திற்கு இந்திரன், அக்கினி பகவான், இயமன், வாயுதேவன் ஆகிய நால்வரும் சென்றிருந்தார்கள். நள மகாராஜனிடம் தமயந்திக்கு ஆழுத காதல் என்றறிந்த தேவர்கள் நளனையே அடைந்தனர்.

தமயந்தி தங்களில் ஒருவருக்கே மாலையிட வேண்டுமெனவும், நளனே கூறினால்தான் இவ்வாறு செய்யத் தமயந்தி சம்மதிப்பாள் என்றும் அவர்கள் கூறினர். பிறர் கேட்டால் தன் காதலையும் தியாகம் செய்யக் கூடியவன் நளன் என்ற நம்பிக்கையிலேயே இப்படிக் கூறினர்.

அவர்களது நம்பிக்கை வீண் போகவில்லை. நளன் அக்கணமே தேவர்களுக்காகத் தன் காதலைத் தியாகம் செய்து தமயந்தியிடம் தூது போக முடிவு செய்து விட்டான். ஆனால் கன்னி மாடத்தில் காவலில் உள்ள கன்னிகையை எப்படிச் சந்திக்க இயலும் என்பது குறித்தே கவலைப்பட்டான்.

''கவலைப்படாதே! அஞ்சனமொன்று தருகிறோம். அதை இட்டுக்கொண்டால் யார் கண்ணுக்கும் நீ தென்பட மாட்டாய்'' என்று தேவர்கள் நளனிடம் கூறி அவனுக்கு மை கொடுத்தனர். அதை இட்டுக்கொண்டு, யார் கண்ணுக்கும் தெரியாமல் தமயந்தியின் கன்னிமாடத்தைச் சென்றடைந்தான் நளன்.

தான் தேவர்களுக்குத் தந்திருந்த வாக்கிலிருந்து சற்றும் பிறழாமல் தன் உள்ளம் கவர்ந்தவளிடம் கள்ளமின்றிப் பேசினான் அந்த உத்தமன்:

"தமயந்தி! என் உடல் அற்ப உடம்பு. எனக்கு நரை திரை மூப்பு உண்டு; மரணமும் உண்டு. ஆனால் முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் தலைவன் இந்திரன். அவனுக்கு அழியாத வாழ்வு உண்டு. ஐராவதம் உண்டு. சிந்தாமணி, அமிர்தம் எல்லாவற்றுக்கும் அவனே அதிபதி. இத்துணை பெருமை வாய்ந்த இந்திரனுக்கே மாலையிட்டு உன் மணாளனாக்கிக்கொள். அல்லது அக்கினி, வாயு, இயமன் ஆகிய அரும்பெரும் தேவரில் ஒருவருக்கு மாலையிடு. என்னை மணப்பதைவிட இவர்களில் ஒருவரை மணப்பதால் நீ அதிக நலன் பெறுவாய்" என்றான். மறுத்த தமயந்தியிடம் தேவர்களின் பெருமைகளை மீண்டும் மீண்டும் எடுத்துரைத்தான்.

நளனிடம் இவ்வளவு சத்தியமிருந்த போதிலும், அவனைத் தமயந்தியிடம் அனுப்பிய தேவர்களோ நளன் வாக்குத் தத்தம் செய்தபடி உண்மையாக நடப்பானா என்று சந்தேகித்தனர். எனவே, அவனைத் தூதாக அனுப்பிய பின் அவர்களும் வண்டு வடிவமாகவும், காற்று வடிவமாகவும் அவனைப் பின் தொடர்ந்து சென்று தமயந்தியிடம் அவன் பேசியதைக் கேட்டனர்.

இந்த ஆற்றல் தேவர்களுக்கு எப்போதும் உண்டு. இதனால்தான், "வண்டையும், காற்றையும் உள்ளே விடாதே" என்று உத்தரவிட்டான் மந்திராலோசனை நடத்திய சூரபன்மன்.

மந்திராலோசனை மண்டபத்தில் மன்னர் மன்னனாகிய சூரபன்மன் பேசலானான்: "துணைவர்களே! அமைச்சர்களே! நமது பகைவர்களாகிய தேவர்களை நீங்காத சிறையிலிட்டேன். தேவர்களின் சிறையை நீக்குவதற்காக சிவபெருமான் ஒரு குமாரனைப் பெற்று இங்கு அனுப்பி வைத்தார். பூவுலகம் வந்த அந்தக் குமரன் கிரவுஞ்ச மலையை அழித்தான்; தாரகனைக் கொன்றான். அதன்பின் கடற்கரையில் வந்திருந்து, ஒரு தூதனை என்னிடம் அனுப்பினான். அத் தூதன் இலங்கை மலையில் பாய்ந்து அதனை அழித்தான். அஞ்சாமல் வந்து என் அவைக்களத்தில் வீற்றிருந்து சில வார்த்தைகள் பேசினான். என் கண்முன்னே சில அசுரர்களைக் கொன்றான். இந்த நகரைப் பாதிக்கு மேல் அழித்துவிட்டான். என் அருமந்தப் புதல்வன் வச்சிரவாகுவைக் கொன்று விட்டான். தூதனும் வந்து இவ்வளவு அட்டூழியங்களைச் செய்த அவனைப் பிடித்துச் சிறையில் தள்ளினேன் இல்லை; கொன்றேன் இல்லை. பெரும் பழியைப் பெற்று விட்டேன். அது மட்டுமல்ல; அந்தத் தூதன் வீரமகேந்திரபுரியிலிருந்து திரும்பிச் சென்ற போது, நம் பெரும் காவலாள் யாளிமுகனையும் கொன்று விட்டான்.

"துணைவர்களே! கவனமாகக் கேளுங்கள். தூதனுப்பிய குமரன் கடலைத் தாண்டி இங்கு வந்து நம்மோடு போர் புரியவும் துணிந்திருக்கிறானாம். இந்தத் தகவலை ஒற்றர்கள் வந்து சொல்லுகிறார்கள். நானே சென்று இமைப் பொழுதில் சேனைகளையும், வீரர்களையும் அந்தக் குமரனையும் வென்று ஒழித்து விடலாமா என்றுகூட எண்ணினேன். ஆனால் சூரன் என்னும் பெயர் பெற்ற நான் — எண்ணற்ற படைபலம் பொருந்திய நான் — போயும் போயும் பூதர்களுடனும் ஒரு பாலகனுடனும் போர் செய்வதா என்று நினைத்து வாளாவிருந்து விட்டேன். எத்தகைய வீரமும் வலிமையும் செல்வமும் ஒருவர் பெற்றிருந்தாலும் தம் துணைவர்களுடன் ஆராய்ந்தே ஒரு செயலைச் செய்ய வேண்டும். ஆகவே தான் உங்கள் யாவரையும் இங்கு கூட்டியுள்ளேன். நாம் என்ன செய்வதென்று ஆராய்ந்து சொல்லுங்கள்."

சூரபன்மனின் அமைச்சர்களில் எருமைமுகம் அமைந்த மகிஷன் சூரபன்மனை வணங்கிக் கூறினான்: "அரசே, திருமாலையே வென்றவர் உங்கள் தம்பி தாரகாசுரன். அவரையும் கிரவுஞ்ச மலையையும் வென்ற வீரனைச் சிறுவன் என்று கூறுவது சரியாகுமா? கடலைத் தாண்டி வந்து நம் நகரத்தை அழித்ததோடு வச்சிரவாகுவையும் கொன்ற துஷ்டனை சாமானிய தூதன் என்று கருதுவது பொருத்தமானது தானா? உமது தம்பியும் கிரவுஞ்ச மலையும் அழிந்த அன்றே அந்தச் சிவகுமாரன் மீது போருக்குப் போயிருக்க வேண்டும். அப்படி செய்திருந்தால் அந்தத் தூதன் வந்து இங்கு அட்டூழியம் செய்திருக்க முடியுமா? போகட்டும். கடந்ததை எண்ணி வருத்தப்படாமல் இன்றே செயலில் இறங்குங்கள். நால்வகைச் சேனைகளோடும் சென்று போர் புரிவோம். முன்னைப் போல் அஜாக்கிரதையாக இருந்து காலந் தாழ்த்தி விடலாகாது."

மகிஷன் கூறி முடித்ததும் மற்றொரு அமைச்சனாகிய துர்க்குணன் எழுந்தான். "அரசே! தாங்கள் இதுவரை திருமாலோடும் மற்றைய தேவர்


செஞ்சுரியின்
ஃபேஷன் துணிரகங்களை
...தொட்டுப் பார்த்தால் தெரியலாம் அவைகள் அணிய எவ்வளவு சுகமளிப்பவை என்று.
சூப்பர்கோம்டு மற்றும் சூப்பர்ஃபைன் டாப்பி ஷர்ட்டிங்குகள், செக் ஷர்ட்டிங்குகள் புட்டா பாப்லின்கள், ப்ளீச்டு மற்றும் டைடு பாப்லின்கள், உடுப்புகளுக்கான துணிகள், சூப்பர்ஃபைன் ஸ்கிரீன் பிரிண்டெட் லான்கள், பிரிண்டெட் வாயில்கள், லெனோஸ்.

களோடும் போர் செய்வதற்கென்று சென்றதில்லை. உமது தம்பிமார்களைக் கொண்டே அவர்களை யெல்லாம் போரில் வென்றீர்கள். அப்படிப்பட்ட தாங்கள் இன்றைக்கு ஒரு சிறுவனை எதிர்த்துப் போருக்குச் செல்வதா? தவத்தைப் பெருக்கி அழியாத வளங்களையும், அளவற்ற ஆயுளையும், வீரத்தையும் பெற்றுக் கொண்டதெல்லாம் ஒரு சிறுவனோடு போர் புரிவதற்குத் தானா? சிறுவனுக்காக வந்த தூதனைத் தொடர்ந்து நீங்கள் போக வேண்டுமா? கொசுவைக் கொல்லச் சிம்மமா செல்வது? நமது படைத் தலைவர்களை அனுப்பி வைத்தால் அவர்களே அந்தப் பூதகணங்களையும் சிவ குமாரனையும் வென்று வருவார்கள்; இது திண்ணம்.''

தலைமை அமைச்சனாகிய தரும கோபன் எழுந்தான்: ''அரசர்க்கரசே! அச்சிறுவனுடன் சக்கரவர்த்தி போர் செய்வது புன்செய் நிலத்தை நவரத்தினங்கள் பதித்த பொற்கலப்பையால் உழுவது போலத்தான். அவன் உங்களைக் கண்டதும் புறமுதுகு காட்டி ஓடி விடுவான். அப்படி அவன் ஓடிவிட்டால், 'கேவலம் இந்தச் சிறுவனுடனா போர் புரிய வந்தோம்' என்று நீங்கள் எண்ணி அவனைத் தொடர்ந்து சென்று கொல்லாமல் மன்னித்து விட்டு வந்து விடுவீர்கள். அவனுக்கு அழிவு ஏற்படாது. தனக்குச் சமானமில்லாதவர்களுடன் அறிஞர்கள் போர் செய்ய மாட்டார்கள். உங்கள் குமாரர்களான அக்கினிமுகன், இரணியன் இருவரில் ஒருவரை அனுப்பினாலே போதும். நகத்தால் கிள்ளியெறியும் முளையை வாளால் வெட்டுவார்களா? சிவபெருமான் கொடுத்த வேலாயுதத்தை அச்சிறுவன் செலுத்தியதும் அதற்கு மாறான படையை விடுக்காததால் தாரகன் மாண்டான். இதை வைத்து அந்தச் சிறுவனை வீரன் என்று கருதுகிறீர்களா? கிரவுஞ்சமலை அழிந்தது என்று சொல்கிறார்கள். ஆனால் கிரவுஞ்ச மலைக்கு அகத்தியரின் சாபத்தினால்தான் அழிவு வந்தது என்பதை மறப்பதற்கில்லையல்லவா? அழியாத தேர், கவசம், வில் முதலியவற்றை வச்சிரவாகுவுக்குக் கொடுக்கவில்லை. அவைகள் இல்லாததால்தான் முருகனின் தூதன் வந்து தாக்கியபோது வச்சிரவாகு இறந்தான். இனி பலப் பல சொல்ல வேண்டாம். அந்தச் சிறுவனையும் அவனுடன் உள்ள மற்ற வீரர்களையும் இங்கிருந்தே பாணம் போட்டு நான் கொன்று விடுகிறேன். அல்லது ஒரு சேனாதிபதியை அனுப்பி வைத்தால் அவனே முருகனை வென்று விடுவான்'' என்று கூறினான்.

தர்மகோபன் சொல்லி முடித்ததும் உடல் குலுங்கச் சிரித்தான் காலசித்து என்ற அமைச்சன். சூரபன்மனை நோக்கி, ''அரசர்க்கரசே! இது என்ன பெரிய பிரமாதமான காரியம்? திருச்செந்தூரில் வந்திருக்கும் சிறு பாலனை அநாயசமாகத் துரத்துவதற்கு மந்திராலோசனையும் செய்ய வேண்டுமா? திருமாலோடும், இந்திரனோடும், சயந்தனோடும்சமர்செய்தபோதுகூடத் தாங்கள் இவ்வாறு மந்திராலோசனை செய்ததில்லையே! இதோ என்னை அனுப்புங்கள். நான் சென்று அந்தச் சிறுவனையும் அவனுடைய பூதப் படைகளையும் காலபாசத்தால் கட்டி இழுத்துக் கொண்டுவருகிறேன்'' என்று கூறினான்.

● காட் (Cod) என்னும் கடல் மீனிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள் அல்லவா? அந்த மீன் எண்ணெயை (Cod Liver Oil) புஷ்டிக்காகப் பலர் சாப்பிடுகிறார்கள். இந்த மீனுக்கு வைட்டமின் எல்லாம் சூரியனிடமிருந்து கிடைக்கிறதாம்! ஆனால் இந்த ஆழ்கடல் மீன் சூரியனைத் தன் வாழ்நாளில் ஒரு தடவைகூடப் பார்ப்பதே இல்லை!

உங்களுக்குத் தெரியுமா?

● நமக்கு சூரியனின் மொத்த உஷ்ண சக்தியில் $\frac{3}{10,000,000,000}$ பங்குதான் கிடைக்கிறது: அதாவது ஆயிரம் கோடியில் மூன்று பாகம்தான் கிடைக்கிறது. இதில் இன்னும் ஐந்து சதவிகிதம் குறைந்தால் என்னவாகும் தெரியுமா? ஒரு ஜீவராசியும் இவ்வுலகில் வாழவே முடியாது!

காலசித்து கூறியதைக் கேட்ட சண்டன் எழுந்து தன்னொருவனை அனுப்பி வைத்தாலே போதுமென்றான்.

அசுரர் படைத் தலைவனான அனலி கோபத்துடன் எழுந்தான். ''ஏதோ ஒரு முடிவு உடனேயே செய்வோம். அற்பச் சிறுவனை அழிப்பதற்காக இன்னமும் மந்திராலோசனை செய்வது அவமானம்'' என்று கூறினான்.

விழிகளில் தீப்பொறி பறக்க எழுந்தான் சிங்கன். ''அரசே! இந்த அண்டத்தில் உள்ளவர்கள் எல்லோரும் வந்து என்னுடன் போர் செய்தாலும், நான் ஒருவனே தனித்து நின்று யுத்தம் செய்து அவர்களை வெல்லுவேன். என்னைப் பற்றி நானே சொல்லிக் கொள்வது சரியல்ல. போருக்குச் செல்ல உத்தரவு கொடுங்கள். பகைவர்களைக் கண்டதுண்டமாக வெட்டி வீழ்த்தி வெற்றியுடன் வருகிறேன்'' என்றான்.

சூரபன்மனின் புதல்வர்களில் ஒருவனான இரணியன் எழுந்தான். ''தந்

தையே! முன்பே எனக்கு உத்தரவு கொடுத்திருந்தால் அந்தப் பகைவர்களை யெல்லாம் வென்று சரியான பாடம் புகட்டியிருப்பேன்'' என்ருன்.

இரணியனின் தம்பியான அக்கினி முகாசுரன் சூரபன்மனை நோக்கி, ''அப்பா! தாங்கள் போவானேன்? அல்லது நான்தான் போவானேன்? இதென்ன பெரிய காரியம்? என்னுடைய ஆட்களை அனுப்பினலே போதும். நம் பகைவர்கள் அவ்வளவு பேர்களையும் கொன்று விட்டு வருவார்கள்'' என்ருன்.

இப்படியாக அனைவரும் பலப் பல பேசுகையில் சூரபன்மனின் மூத்த மகனும் வீராதி வீரனுமான பானுகோபன் கம்பீரமாக எழுந்திருந்து பேசலானன்.

''தந்தையே! பெரியோர்களே! சகாக்களே! வணக்கம். சென்று போனதை யெல்லாம் பேசிப் பயனில்லை. இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். நம்முடைய எதிரிகளின் பலத்தை மிகையாகக் கூறுவது தவறு எனில், ஒரேயடியாக அலட்சியம் செய்வதும் தவறு. அந்தச் சிறுவனின் பலத்தையும், பூதர்களின் ஆற்றலையும் அறிய வேண்டுமானல், நானே போயாக வேண்டும். என்னை அனுப்பி வையுங்கள். சென்று மீளும்போது அவர்களைப் பாசத்தால் கட்டி இழுத்துக்கொண்டு வருகிறேன்'' என்ருன் வீராவேசத்தோடு.

இதுவரை பேசியவர்களிடையே முருகனுடன் போரிடத்தான் வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு இல்லை. போருக்கு யார் செல்வது என்பதில்தான் அபிப்பிராய பேதம். இப்போது அடிப்படையிலேயே அபிப்பிராயபேதம் கொண்ட சிங்கமுகாசுரன் எழுந்தான். சிம்மத்தின் தலை பெற்ற இவன் சூரபன்மனின் தம்பி; பெரிய விவேகி.

அண்ணன் சூரபன்மன் காலில் விழுந்து எழுந்து அதன்பின் சிங்கமுகாசுரன் பேசலானன்: ''மந்திராலோசனை கூறியவர்கள் எல்லோரும் அறிவுரை சொல்லவில்லை. அவ்வளவு பேரும் அறிவின்றி உளறினர்கள். பசி என்று துடித்தவனுக்குப் பாஷாணத்தை உணவு என்று கொடுப்பது போல் — தாகத்திற்குத் தண்ணீர் கேட்டவனுக்கு அக்கினித் திராவகம் கொடுப்பது போல் — இவர்கள் செய்து வருகிருர்கள். அடியேன் சொல்வதைத் தாங்கள் கவனமாகக் கேட்டு வாழ வேண்டும். அண்ணு! மயக்க உணர்வினுல் மீன்கள் தூண்டில் முள்ளை உணவு என்று எண்ணி அதனைக் கடித்து அதனில் அகப்பட்டு வருந்துதல் போல, தேவர்களுக்குத் தீமை செய்வதால் இப்போது பெருமைப் பட்டாலும் இறுதியில் இன்னலே அடைவோம். தேவர்களைச் சிறையினின்றும் இன்னும் விடுதலை செய்யாத காரணத்தாலேயே ஆறுமுகக் கடவுள் போர் செய்ய வந்துள்ளார்.

''அண்ணு! செந்தில்மாநகரம் வந்துள்ள கந்தக் கடவுள் எத்தகைய சக்தி பொருந்தியவர் என்பதைத் தாங்கள் ஏற்க மறுப்பது நமக்கு அபாயமாகவே முடியப் போகிறது.....''

இவ்வாறு தம்பி கூறி வருவதைக் கேட்ட சூரபன்மன் இடைமறித்துக் கோடையிடிபோல் சிரித்தான். சிங்கம் போல் கர்ஜித்தான். ''தம்பி! நன்ருயிருக்கிறது உன் பேச்சு. உனக்குப் புத்தி மயக்கம் ஏற்பட்டு விட்டதா? யாரிடம் யாரைப் பற்றி பேசுகிருய்?

''இளைய சகோதரா! எனக்குச் சிவபெருமான் கொடுத்த வரம் அறியாததன்ருே? 'நமது சக்தி ஒன்றே உன்னை வெல்லும். வேறு எவரும் உன்னை வெல்ல முடியாது' என்று சிவபெருமான் கூறியது பொய்யாகுமா? வரத்தைக் கொடுத்தவரே அழிப்பாரா? தாரகன் இறந்தான் என்ருல் அவன் என்னைப்போல் அரிய தவம் செய்து அழியா வரத்தைப் பெறவில்லை. வச்சிரவாகு சிறுவன். வலிமை குறைந்தவன். ஆதலால் இறந்தான். ஆயிரத்தெட்டு அண்டங்களை ஆட்சி புரிந்து தேவர்களை ஏவலர்களாக்கிக் கொண்ட என்னை யார் வந்து எதிர்த்தாலும் என்னிடம் தோற்றுவிடுவார்கள். அப்படியிருக்க, என்னிடம் வந்திருக்கும் சிறுபாலகன் என்னை வெல்ல முடியும் என்று நீ நினைப்பது 'கண்ணில்லாதவன் சூரியனைப் பழம் என்று காட்ட, கையில்லாதவன் அதனைப் பிடித்துக் கொண்டான்!' என்பதைப் போலிருக்கிறது'' என்ருன் சூரபன்மன்.

''எண்ணி லாததோர் பாலகன்
எனைவெல்வன் என்கை
விண்ணி லாதவன் தன்னையோர்
கனியென வெஃகிக்
கண்ணி லாதவன் காட்டிடக்
கையிலா தவன்போய்
உண்ணி லாதபேர் ஆசையால்
பற்றுமா(று) ஒக்கும்''

இவ்வாறு மூர்க்கத்தனத்தில் ஊறிப் போய்ப் பிடிவாதமாகப் பேசிய சூரனிடம் சகோதர வாஞ்சை கொண்ட சிங்கமுகாசுரன் மேலும் உண்மைகளையும், நீதிகளையும் எடுத்துரைக்கலானன். (தொடரும்)

நீகோ
ஜெர்மிஸைடல் சோப்
ஒரு பார்க்-டேவிஸ் தயாரிப்பு

உங்கள் சருமத்தைச் சுத்தமாகவும் ஆரோக்கியத்துடனும் வைத்துக் கொள்ளவும், பருக்கள், கருநிறப் படைகள், வேர்க்குரு மற்றும் இதர சாதாரண சரும நோய்களின்றி இருக்கவும் உதவுகிறது. தவறாமல் தலைமயிரைச் சுத்தம் செய்ய உபயோகித்து வரின், நெக்கோவின் கிருமிநாசக நுரை வழுக்கை ஏற்படாமலிருக்க ஒரு நல்ல பாதுகாப்பாக இருக்கும். நிரூபணமான மதிப்பையுடைய கிருமிநாசக சோப்பான நீகோ உங்களுக்கு மும்மடங்கு நன்மையளிக்கிறது—சுத்தமாக்க, நோய்கிருமிவராமல் தடுக்க, பாதுகாக்க, உதவுகிறது. தினமும் உங்கள் சருமத்திற்குத் தேவையான கவனத்தை செலுத்துங்கள்.



தினசரி உபயோகத்திற்கான அதி கிருமிநாசக சோப்


NATIONAL PD 9443



குமாரி கௌசல்யா உடுத்தி இருக்கும் இம்மாதிரிப் புடவைகள் சிங்கப்பூரிலிருந்து வருகின்றனவோ, இல்லையோ, பெயர் மட்டும் சிங்கப்பூர் நைலக்ஸ் என்று பெற்றுள்ளன. ஒரு விசேஷமான முறையில் பதிக்கப்பட்ட பூக்களுடன் கூடியவை இப் புடவைகள். வெல்வெட் துணியில் பூக்களின் உருவத்தில் கத்தரித்தும் புடவையில் ஆங்காங்கே ஒட்டி வைத்தது போல் தோன்றும். வெளிர்ப் பச்சை நிறத்தில் புடவை இருந்தால் பூக்கள் கரும் பச்சையாக அமைந்திருக்கலாம். அதே போல 'ரெட்' நிறங்களில் புடவையும் அதே நிறத்தில் ஆனால் டார்க் கலரில் பூக்களும் இருந்தால் சிறப்பாகத் தோன்றும். பார்டர்களிலும் பூக் கொத்துக்களுடன் கூடிய கிளைகளோ கொடிகளோ இடம் பெறலாம்.

படத்தில் குமாரி கௌசல்யா கருமையான பூக்களைக் கொண்ட வெள்ளை நிறப் புடவையும் அதற்கேற்பக் கை தூக்கலாகத் தைக்கப் பெற்ற கறுப்புநிற சோளியும் அணிந்துள்ளார். வெள்ளை மணிகளைக் கோத்துத் தயாரித்த நீண்ட மாலை நாகரிகமாகவும், அடக்கமாகவும் இருப்பதுடன் அது காரணமாகவே புடவையின் அழகினை எடுத்துக் காட்டுவதாகவும் உள்ளது.

இன்றைய நாகரிகம் இன்றைய நாகரிகம் இன்றைய நாகரிகம் இன்றைய



படம் :
ஸ்டில்லோகிராப் ஸ்டுடியோ



நாகரிகம் இன்றைய நாகரிகம்

இன்றைய நாகரிக



மர்மக் கதையைப் படமாக்க என்ன வேண்டும்?

கதை இருந்தாலும் இல்லாவிட்டாலும், பல பல பயங்கர ஒலிகள் வேண்டும். ஒளிப் பதிவு பல சந்தேகங்களை எழுப்புவதாக இருக்க வேண்டும். யார் குற்றவாளி என்று கடைசிவரை கண்டு பிடிக்காமல் இருக்கப் பாத்திரங்களின் முகத்திலே பாவ மாறுபாடுகள் வேண்டும். தலைகால் புரியாத பேய் உலாவும் பங்களாவாக இருக்க வேண்டும். திரும்பத் திரும்ப ஒரு பாட்டு ஒலிக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் நிரம்பப் படமாக்கிவிட்டால், அப்புறம் யாருமே கதையைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். மர்மம் மர்மமாகவே இருந்துவிடும். அல்லது வெளியானாலும் சப்பென்று போய்விடும். கிஷோர் சாஹு இதை நன்கு உணர்ந்திருக்கிறார். 'பௌர்ணமி இரவு' என்னும் பொருள் தரும் 'பூனம் கீ ராத்' என்னும் படத்தில், மர்மத்தைக் கடைசி வரையில் காப்பாற்றியிருக்கிறார். யார் கொலையாளி என்பதைத் தெரியவிடாமல் பலரைச் சந்தேகிக்கும்படி வைக்கிறார்.

சுருக்கமாகக் கதை இதுதான்: பௌர்ணமி இரவு அன்று ராணி என்பவள் கொலையுண்கிறாள். அவள் கணவரே கொலை செய்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. அவர் படுத்த படுக்கையாக இருக்கும்பொழுது டாக்டர், வக்கீல், மகன் எல்லோரும் வருகிறார்கள். மகனோடு அவன் நண்பனும் வருகிறான். நண்பன் அவனது இரு தங்கைகளின் மனத்திலும் இடம் பெறுகிறான். காதல் காட்சி நீளுகிறது. நடுவிலே நர்ஸ் கொலை நடைபெறுகிறது. கடைசியிலே கொலையுண்ட ராணியே தன்னைக் கொலை செய்து கொண்டவள் என்று ருசுவாகிறது. பௌர்ணமி அன்று சிலருக்குப் பைத்தியம் பிடித்துவிடும் என்றும் அந்த வேகத்தில் அவர்கள் என்ன செய்கிறோம், ஏது செய்கிறோம் என்று தெரியாமல் செயல் புரிந்து விடுவார்கள் என்றும், ராணியின் மகள் நந்தினியின் செய்கைகளைக் கொண்டு தீர்மானித்துக் கதையை முடித்துவிடுகிறார் கிஷோர் சாஹு.

கதை எப்படி இருந்தால் என்ன? மனோஜ் குமாரும், குமுத் சுகானியும் கண்களுக்கு ரம்மியமாக நடித்துக் கதைக்கு உயிரூட்டுகிறார்கள். ஒலிகள் மர்மமூட்டுகின்றன. படம் முடிந்து எழுந்து வரும்பொழுது 'நல்ல மர்மம் இது!' என்று புகழ்ந்து கொண்டு வருகிறோம். மெய்தானே? படம் பார்ப்பவர்களை எப்படி மயக்கலாம் என்னும் மர்மத்தைப் புரிந்து கொண்டிருக்கிறாரே கிஷோர் சாஹு.

காக்கும் கரங்கள்

அந்தஸ்தில் குறைந்தவனை ஒரு பணக்காரப் பெண் காதலிப்பதும், அவள் தந்தை அதற்காகச் சீறுவதும், பிறகு அவள் விருப்பப்படியே அவனுக்கு மணம் முடித்து வைத்துவிட்டுக் குமுறுவதும், பின்னர் ஒவ்வொருவரும் வருந்துவதும், கடைசியில், தமிழ்ப் படங்களுக்கே உரிய சிக்கல்களுக்குப் பிறகு ஒரு விபத்து நிகழ அதன் பின்னர் எல்லாரும் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியில் திளைப்பதும் நம் பட உலகில் புதியன அல்ல.

டாக்டர் சங்கரின் பாத்திரம் எஸ். எஸ். ராஜேந்திரனுக்கு மிகப் பொருத்தமாயிருக்கிறது. பாத்திரத்துக்கு ஏற்ற நல்ல நடிப்பு.

பெரிய மனிதர் ஸ்ரீ ரங்கநாதமாக வரும் எஸ். வி. சுப்பையா உணர்ச்சியோடு அந்தப் பாத்திரத்துக்கு உயிர் கொடுக்கிறார்.

விஜயகுமாரியின் நடிப்பு நன்றாயிருக்கிறது. ஆனால் படத்தின் பிற்பகுதியில் வரும், விவாகரத்து என்ற அர்த்தமற்ற ஒன்று அவர் நடிப்பையும் பாதித்துவிட்டது. ஒரு டாக்டர் நர்ஸோடு பழகுவதை அவர் மனைவி விபரீதமாகச் சந்தேகிப்பதும், அந்தச் சந்தேகத்தின் காரணமாகக் கட்டிய கணவனையே எதிர்த்துக்கொண்டு வீராங்கனையாக வீர வாசகங்கள் பேசுவதும், விவாகரத்துக்குத் தயாராவதும் — என்னவோ எல்லாம் ஒரே வேதனை! வக்கீலாக வரும் ராமாராவ் கொஞ்ச நேரமே வந்தாலும் மனத்தில்



பதிந்து விடுகிறார்! எஸ். விஜயலக்ஷ்மியும், நாகேஷும் ஆடும் பொம்மலாட்ட நடனம் நன்றாயிருக்கிறது. பொம்மை மாதிரியே சாய்ந்து சாய்ந்து அபிநயம் பிடிக்கும் நாகேஷ் எல்லோரையும் சிரிப்புக்கடலில் ஆழ்த்துகிறார். ஆனால் 'டாலி கே' கையாண்ட யுக்தி என்பதை நினைவுகூராமல் இருக்க முடியவில்லையே!

"அல்லித் தண்டுக் காலெடுத்து" என்ற பாட்டு நன்றாயிருக்கிறது. டாக்டர் சங்கர் - மகாலக்ஷ்மியின் முதல் இரவுக் காட்சி அளவுக்கு மீறிப் போயிருக்கிறது. வெட்டி இருக்கலாம்.

தான் நல்லவனாயிருந்தாலும் தீயவனாயிருந்தாலும் தன் தனயன் சிறந்து விளங்க வேண்டுமென்ற ஆசையில்லாத தகப்பனே உலகத்தில் இருக்க முடியாது. கதையில் வரும் குப்புசாமி கொள்ளையடிப்பதையும் கள்ளச் சாராயம் காய்ச்சுவதையும் தன் தொழிலாகக் கொண்டிருந்தபோதிலும் மகனின் நற்செய்கைகளை அறிந்து மகிழ்ச்சியுறுகிறார்; பிள்ளைப் பாசத்தைத் திறம் படப் படம் பிடித்துக் காட்டுகிறார். இந்தப் பாத்திரத்தை ஏற்றிருப்பவர் திரு டி. கே. சண்முகம்.



அப்பாவின் ஆசை



குழந்தைகளை எப்படி வளர்க்கவேண்டும் என்று எடுத்துக் காட்டும் அன்புத் தந்தையாக, கம்பீரமும் குண நலன்களும் கொண்ட போலீஸ் அதிகாரியாக வந்து ஜமாய்க்கிறார் திரு டி.கே. பகவதி.

சொல்லப் போனால் பெரியவர்களை மிஞ்சி விடுகிறார்கள் குழந்தைகள். கிரிஜாவாக வரும் பிருந்தா, போலீஸ் மாமாவாக வரும் சிவதாணுவின் குரலைக் காப்பியடித்து 'அப்ளாஸ்' மட்டுமா வாங்குகிறாள்? அழவேண்டிய இடத்தில் அழுது, சிரிக்க வேண்டிய இடத்தில் சிரித்து நடிப்பின் இலக்கணத்தை நன்குகப் புரிந்துகொண்டு அக்கலைக்கே ஒரு புது மெருகேற்றுகிறாள். கோபுவாக வரும் அண்ணாத்துரையோ ஆள் 'அழுக்கன்' என்பதை வெகு இயல்பாகச் சித்திரித்துக் காட்டுகிறான். பெரியசாமியாக வரும் காதர், ராமுவாக வரும் கண்ணப்பா, குமாராக வரும் கமலஹாசன் — எல்லோருமே ஜமாய்க்கிறார்கள். சுருங்கக் கூறப் போனால் சிறுவர்களின் நடிப்பு 'ஏ ஒன்!'. திருச்சி பாரதன் குழந்தைகளுக்கென்று எழுதியிருக்கும் இந்நாடகத்தை ஓரளவு உலக ஞானம் பெற்ற பத்துப் பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களே அதிகம் ரசிப்பார்கள். டி. கே. எஸ். சகோதரர்கள் சிறப்பாக மேடை ஏற்றி யிருப்பினும் சிறுவர்களுக்கான இந்நாடகத்தில் பெரியவர்கள் வரும் காட்சிகள் சற்று அதிகம்.


அவள் எங்கே?
பிரமுகருக்கு அணிவித்த எண்ணற்ற மாலைகளில் ஒன்றை அவரது கார் டிரைவரிடமிருந்து பெற முயலுகிறான் சந்துரு.
13
கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி.
தேடிய பொருள் கிடைத்து விட்டது.
சந்துரு தன் முடிவைத் தெரிவித்த போது.....


அப்படியானால் உன் முடிவிலே நீ உறுதியாகவே இருக்கிறாயா சந்துரு?
சிக்கலில் ஒரு முனை கிடைத்திருக்கிறது. அதைப் பிடித்துக் கொண்டு முன்னேறுவோம். முடிச்சு அவிழ்வதும் அவிழ்வது இறுகவும் செய்யலாம்.
நான் நினைத்தபடி இருக்குமானால் மாலதி நினைவுகள் தாழும்பிய நிலையில் அவனைத்தான் அணுகி இருக்கமுடியும். உயிரோடு அவனைத் தண்டபோது அவனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டு அவனை எங்காவது ஒளித்து வைத்திருக்கலாம். இந்த நிலையில் அவனது அந்தரங்கத்திலே ஒரு சலனத்தை உண்டாக்குவோமானால் அவன் ஏதாவது விபரீதமாகச் செய்வதற்கு முன்னால் சந்திப்பான.....
சலனத்தை எப்படி ஏற்படுத்துவது?
இதோ இந்த நம்பருக்கு 'டயல்' செய். 'மாலதியை மறுபடி சந்தித்தீர்களா?' என்று கேள். அது போதும். அவன் கூறும் பதிலை மட்டும் கேட்டுக் கொண்டு வேறு எதுவும் பேசாமல் போனை வைத்து விடு.
சந்துரு அந்த 'எக்ஸ்டென்ஷனை' எடுத்து அவன் கூறும் பதிலை நீயும் கேட்டுக் கொள்..
போனை எடுத்தவுடன் சிரிப்பும் கும்மாளமுமான பெண்களின் குரல் கேட்டது. அதன் பிறகு அந்தக் கட்டைக் குரல் தன் பெயரைக் கூறியது. அந்தக் கேள்விக்குப் பிறகு ஒரே மௌனமாக இருக்கிறது...
ஹலோ...ஸ்..அவர்தானா?...ம்..மாலதியை மறுபடி சந்தித்தீர்களா?
இது என்ன முட்டாள்தனமான கேள்வி? நீங்கள் பேசுவது யாரென்று அறிந்து கொள்ளலாமா?

தொடரும்...



படகர் மணாளன் தேர்தல்

பிலோ இருதயநாத்



"நாட்டில் நடக்கும் அரசியல் தேர்தல்கள் போதாது என்று பெண்கள் கணவன்மார்களுக்காகவே தேர்தல் நடத்த வேண்டுமா?" என்று கேட்டுவிட வேண்டாம்!

மணாளனைத் தேர்ந்தெடுக்கும் பழக்கம் சுமார் கி. மு. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இன்று வரையில் மனித சமுதாயத்தில் காணப்பட்டு வருகிறது. தற்காலத்தில் பெண் வீட்டார் மாப்பிள்ளை பார்ப்பதற்கு லட்சணமாகவும், படித்துப் பட்டம் வாங்கினவனாகவும், பெரிய உத்தியோகத்தில் இருப்பவனாகவும் தேர்ந்தெடுத்துத் தம் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கின்றனர். ஆனால் பண்டைக் காலத்தில் மனைவியையோ மணாளனையோ தேர்ந்தெடுக்கும் முறை எப்படி நடைபெற்றது? பணம் படைத்தவர் சீர்வரிசைப் பொருள்களை ஒட்டகங்களின் மேல் வைத்து ஓர் அடிமையையும் உடன் அனுப்புவார். அப்படி அனுப்பும்போது அவர், "நீ போகும்போது சூரியன் உதயமாகும் காலை நேரத்தில் எந்தப் பெண் உன் எதிரில் வருகிறாளோ அவளைத் திருமணத்துக்கென்று பேசி முடிவு செய்" என்று சொல்லி அனுப்புவார். மணாளனுக்குத் தகுந்த வயதுடைய பெண், ஆண்டவனுடைய சக்தியால் தகப்பனார் சொல்லி அனுப்பும் அடையாளங்களுடன் அடிமைக்குக் கிடைத்துக் கொண்டிருந்தாள் என்று விவிலிய நூல் கூறுகிறது.

இன்று சக்தியும் பக்தியும் குறையக் குறைய மணாளனைத் தேர்ந்தெடுக்கும் முறையும் மாற ஆரம்



"என்ன பொன்னு! பையன் ஏன் அழுறான் ?"

"ஒன்னுமில்லீங்கம்மா! கொளந்தைக்கு......ஒரு பல்லு ஒடைஞ்சு போச்சு அதனாலேதான்...."

பித்துள்ளது. பொள்ளாச்சியில் ஆனைமலைக் காடுகளில் வாழும் காடர்களின் இனத்தில் உள்ள பெரியவர்கள், வாலிபப் பையன்களை யும், பெண்களையும் வளர்பிறையில் ஒரு நல்ல நாளாகப் பார்த்து ஒரு மைதானத்தில் ஒன் ருகச் சேர்ப்பார்கள். பிறகு பருவப் பெண் களைச் சிறிது தூரத்தில் வரிசையாக நிற்க வைப்பார்கள். அவர்களுக்குப் பின்னுல் சிறிது தூரத்தில் வாலிபப் பையன்களையும் நிற்க வைப்பார்கள். பிறகு அந்தக் காட்டின் மூப்பன் தன் கையைத் தட்டிய தும், முன்னுல் நின்ற பெண்கள் மூலைக்கு ஒருத்தியாகச் சிதறி ஓடுவார்கள். முன்னுல் ஓடும் பெண்களை, பின்னுல் நிற்கும் வாலி பர்கள் தூரத்திச் சென்று பிடிப்பார்கள். பிடிப்பதற்கு முன் ஒவ்வொருவனும் தனக்கு வேண்டிய பெண் யாரோ அவளைப் பார்த்து வைத்துக் கொள்வான். ஒரே ஓட்டத்தில் அந்தப் பெண்ணை அவன் பிடிக்காவிட்டால், மற்றொரு பையன் அவளைப் பிடித்துக் கொண்டு விடுவான். பிறகு திருமணம்தான்.

நீலகிரியில் வாழும் தொதுவர்கள் தென், வட ஆர்க்காடுகளில் வாழும் ஆதிவாசிகள் ஆகியோர் இனத்தில் மணமாகாத பெண் தன் சிறு வயது முதல் ஒரு காளையை வளர்த்து வருவாள். அவளைத் திருமணம் செய்ய விரும்பும் மணுளன் அந்தப் பெண் வளர்க்கும் காளையை அடக்கிப் பிடித்து நிறுத்திப் பஞ்சாயத்தாரிடம் காட்ட வேண்டும். அப்படித் தான் வளர்க்கும் காளையை அடக்கிப் பிடித்து நிறுத்திய வாலி பனே ஒரு பெண் திருமணம் செய்யும் ஓர் உயர்ந்த பண்பு நம்முடைய இந்திய நாட் டில் சங்க காலம் வரையில் இருந்தது. ஆனுல் சில ஆண்டுகளுக்கு முன் வரைகூட நீலகிரியில் வாழும் தொதுவர்களிடம் இந்தப் பழக்கம் இருந்தது. இந்தப் பழக்கம் இந்திய நாடு முழுவதும் இருந்தது என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. அதில் ஒன்று இது:

" தகைவகை மிசைமிசை
பாயினர் ஆர்த்துடன்
எதிரெதிர் சென்ருர் பலர்.
கொலைமலி சிலைசெறி
செயிரயர் சினஞ்சிறந்து
உருத் தெழுந்தோடின்று
மேல் எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு கவிழ்ந்தன மருப்புக்
கலங்கினர் பலர்!"

என்கிறது கலித்தொகை.

ஆந்திர தேசத்தில் வாழும் 'ஏனுதியர்' என்ற ஆதிவாசிகள் திருமணத்துக்கு முன், உரலில் நெல்லைக் கொட்டி மணப் பெண், மணமகன் இருவரையும் மாற்றுலக்கை போடச் செய்கின்றனர். அப்படிச் செய்யும் போது மாற்றுலக்கையில் நல்ல பழக்கமுள்ள பெண்கள் சமுதாயமே ஜெயமடையும். ஆனுல் ஏனுதிப் பெண், தன்னுடன் மாற் றுலக்கை போட வரும் பையனைத் திரு மணம் செய்துகொள்ள விருப்பமுள்ளவளாக இருந்தால், தான் தோற்றுப் போனதைப் போல் உலக்கையைக் கீழே போட்டுவிடு வாள். அப்பொழுது வாலிபன் தான் ஜெய மடைந்ததைப் போல் மீசையின் மேல் கையைப் போடுவான், ஆனுல் பெண் தன் இரகசியத்தை வெளியே சொல்ல மாட்டாள். ஏனென்ருல் அவளுக்கு அவன் மேல் ஆசை அதிகம் அல்லவா ?

இன்னும் சில காடுகளில் யார் எண்ணிக் கையில் அதிகமாகப் புலியை வேட்டையாடி இருக்கிருனே, அவனைத் திருமணம் செய்து கொள்ளப் பெண்களே முந்துவார்கள். அப்பொழுது அந்த வாலிபன் கொள்ளும் பெருமையைப் பற்றிக் கேட்க வேண்டிய தில்லை! சேர்வராயன், ஜவ்வாது மலைகளில் வாழும் தமிழ் — மலையாளிகளில் திருமணம் செய்து கொள்ள விரும்புபவன் ஓடும் காளை யைத் தன் ஈட்டியால் குத்திக் கொலை செய்ய வேண்டும். அப்படி ஈட்டியால் குத்தும்போது காளைகள் சும்மா இருக்குமா?

நீலகிரியில் வாழும் படகர் சமுதாயத் தில் திருமணம் செய்துகொள்ளும் வாலி பனைப் பெண் வீட்டார் தங்கள் ஹட்டியில் இருக்கும் உருண்டை வடிவமான பெரிய பெரிய கற்பாறைகளைத் தூக்கச் சொல்லு கின்றனர். மணவாளன் அந்தப் பாறை உருண்டையைத் தூக்கிவிட்டால், அந்தப் பாறை உருண்டைகள் இருக்கும் ஹட்டியி லுள்ள பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற பழக்கம் படகரிடம் சில ஆண்டுகளுக்கு முன்வரையில் இருந்தது. இன்னும் அது சில இடங்களில் இருக்கிறது என்று கேள்விப்பட்ட நான், "அந்தப் பாறைகளைப் பார்த்துப் புகைப்படம் பிடிக்கலாமென்று கோத்தகிரியிலிருந்து பேர கணிக்குச் சென்றேன். அங்கே வரிசையாக அந்தப் பாறை உருண்டைகளைப் பாது காத்து வருவதைக் கண்டேன். அதை நீங் களும் படத்தில் காணலாம். மாற்று உலக்கை போடும் ஏனுதியரையும் மற்றொரு படத்தில் காணலாம்.



மதியைக் கெடுத்த மண் பானை

ஆர். விஜயலக்ஷ்மி

சன்னாசியும் சாம்பானும்
சாநதி ஆற்றங்கரையினிலே
மண்ணால் செய்த வீட்டினிலே
மானமாய் வாழ்ந்திருந்தனர்.

ஏழைகள் தான் என்றாலும்
ஏற்பன செய்திருந்தனர்
கோழைகள் அல்ல அவர்கள்
கோணல் புத்தியும் கிடையாது.

விடியு முன்னே எழுந்திருந்து
விரைந்திடுவர் வேலைக்கு
துடியாய்ப் படகைச் செலுத்திடுவான்
துடுப்பை சன்னாசி போட்டிடுவான்

அடுத்தவன் வலையினை அழகாக
ஆற்றில் வீசி எறிந்திடுவான்
'படக்'கெனப் பிடித்திழுத்திடுவான்
பல்வகை மீன்கள் வீழ்ந்திடும்.

இப்படி நன்றாய் வாழ்கையில்
இருவரும் ஒருநாள் சென்றனரே
தப்படி கூடச் செல்லவில்லை
தடுத்தது படகை எதுவோ.

குதித்தனர் நீரில் சாம்பானும்
குனிந்து பார்த்தனன் அதனை
மதிப்பாய்த் தோன்றும் பானை
யொன்றை
மண்ணில் கண்டனன் அவனும்.

நல்லவன் தான் என்றாலும்
நயவஞ்சகம் விளைந்தது
வல்லவனாய்த் தான் வாழ்ந்திட
வட்டில் உதவும் என்றெண்ணினான்

மேலே இருந்த சன்னாசியும்
மேலாக இதைப் பார்த்திட்டான்
'வேலை' வெட்டி செய்யாமே சொகுசாய்
வெளங்கும் வழியும் தோன்றியது.

மண்ணால் ஆன பானையொன்று
மதியைக் கெடுத்தது கண்டீரே
எண்ணம் நஞ்சாய் மாறிய பின்
எதிர்த்து நின்றனர் இருவருமே.

சண்டை இருவரும் போட்டனரே
சடுதியில் அன்பு மறைந்ததே
மண்டை போன்ற பானையும்
மண்ணில் உருண்டு விழுந்ததே.

விழுந்தது பானை உடைந்தே
விக்கித்தே நின்றனர் இருவருமே
பழுதில் பானையில் இருந்ததென்ன?
பாறையும் கல்லும் களிமண்ணும்.

நின்றனர் இருவரும் வெட்கித்தே
நிலைகொள்ளாமல் தவித்தனர்
தன்னிலை உணர்ந்த இருவருமே
தவறை எண்ணி வருந்தினரே!

முன்போல் அன்பாய் வாழ்ந்திடவே
முந்தி வந்தனர் இருவருமே
பின்பு நடந்தது என்னவென்று
பிறரும் கூறவேண்டுமோ?

உள்ளம் அன்பால் நிறைந்தாலே
உலகம் நன்கு இருந்திடும்
கள்ளம் அதனில் புகுந்தாலோ
கவலை என்றும் கண்டீரே!







ஆகஸ்டு
வெளியீடு
ராஜலக்ஷ்மி
புரொடக்ஷன்ஸ்
வீர
அபிமன்யு
டைரக்ஷன்
V. மதுசூதன்
சங்கீதம்
K.V.மஹாதேவன்
பாடல்கள்
கண்ணதாசன்
MOULIS

வட்ட மேஜை

★ ஆலயத் தொண்டும் அர்ச்சகர் நிலையும்

★ கோயிலா? அரசியல் மேடையா?

★ மேற்கத்திய உறவு

சில தேவாலயங்கள் மடாதிபதிகளின் பராமரிப்புக்கு உட்பட்டு நடப்பதால் காலக்கிரமமாகப் பூஜைகளும், அர்ச்சகர்களுக்குப் போதுமான வருவாயும் கிடைக்கின்றன. இது போலவே சில சமூகத்தாரால் நிர்வகிக்கப்பட்டு வரும் கோவில்களும் சுமாராக நடந்தேறி வருவதைக் காண்கிறோம்.

அரசாங்க மான்யம் பெறும் சில சின்ன தேவாலயங்களில் பணிபுரியும் அர்ச்சகர்களின் நிலைமை பரிதாபத்துக்கு உரியது.

உதாரணமாக, நான் பார்த்த அளவில் ஓர் ஊரில் சிவன், விஷ்ணு ஆக இரு ஆலயங்களுக்கும் சேர்ந்து சர்க்கார் மான்யமாக வழங்கும் தொகை ரூ. 900 ஆகும். இதில் ஆணையர் கமிஷன், ஆடிட்பீஸ் முதலிய செலவு 50 ரூபாய். மீதம் இருக்கும் ரூபாய் 850ல் வருடம் முழுவதும் கோவில்களுக்கு நித்திய பூஜைக்கு வேண்டிய எண்ணெய், கற்பூரம் முதலான செலவுகளுடன் கோவில் சிப்பந்திகளின் சம்பளமும் நடந்தேற வேண்டும். இத்தகைய கோவில்களில் அர்ச்சகருக்கு ஊதியமாகக் கொடுக்கப்படும் தொகை ரூ. 9 ஆகும். இதைத் தவிர இந்தக் கோவில் அர்ச்சகருக்கு வேறு வருமானம் கிடையாது.

பற்றாக்குறை காரணத்தால் சில அர்ச்சகர்கள் ஏதோ பரம்பரைத் தொழில் என்ற முறையில் கடமைக்காகப் பூஜை செய்து கொண்டு வேறு தொழிலில் ஈடுபடுகிறார்கள். இது தவறு. தெய்வத்துக்கு அடுத்தபடியாக அர்ச்சகரைத் தெய்வமெனப் போற்றி வந்துள்ளது நம் பாரத நாடு. எனவேதான், காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் ஆங்காங்கு சொற்பொழிவில் அர்ச்சகர்களைப் பொதுஜனங்கள் ஆதரிக்க வேண்டும் என்று உபதேசித்து வருவதோடு தாமும் அர்ச்சகர்களுக்காகப் பல தர்ம காரியங்கள் செய்து வருகிறார்கள்.

நம் சுதந்திர இந்தியாவில் ஆலயங்களையும் அர்ச்சகர்களையும் பேணிக்காப்பது அரசாங்கத்தின் கடமை. அர்ச்சகர்களுக்கு ஜில்லாவுக்கு ஓர் ஆகமப் பாடசாலை ஏற்படுத்தி நான்கு மறைகளிலும் வடமொழி பாண்டித்தியம் பெற்ற வித்துவான்களைக் கொண்டு சிறந்த முறையிலே அர்ச்சகர்களுக்குப் பயிற்சியளித்து, பயிற்சிக்கேற்ப அரசாங்க அனுமதி பெற்று ஆலயங்களில் பணி புரிய உதவ வேண்டும்.

அப்படிப் பயிற்சியில் தேர்வு பெற்ற அர்ச்சகர்களைச் சர்க்கார் கெஜட்டில் பதிவு செய்து குறைந்தபட்சம் என். ஜி. ஓ. உத்தியோகத்துக்குச் சமமான ஊதியம், சம்பள உயர்வு, பென்ஷன், சிறு சேமிப்பு முதலான எல்லாச் சலுகைகளும் செய்து தரச் சர்க்கார் முன்வரவேண்டும்.

அப்பொழுதுதான் ஆலயங்களில் ஒழுங்காகப் பணி புரியவும், மந்திரங்களை ஒழுங்காக உச்சரிக்கவும், காலாகாலத்தில் பூஜைகள் சரிவர நடந்து அர்ச்சகர்கள் சுக வாழ்வு வாழ்வதுடன் பிரஜைகளும் க்ஷேமமடைவார்கள். வாயில்லாப் பூச்சிகளாகிய அர்ச்சகர்களை ஆண்டவனே காப்பாற்றட்டும் என்று வாளாவிருந்தால் நிலைமை மோசமடைந்து, அவர்களின் வருங்கால சந்ததிகளுக்கு அநீதி இழைப்பதாகும்.

சின்னசேலம்
12—6—65 **வி. கண்ணன் பட்டாசாரி**

★

சமீபத்தில் திருவண்ணாமலை சென்றிருந்தேன். பெரிய கோயில் மைதானத்திலேயே, கோவில் மதில் சுவரிலேயே பந்தல் அமைத்து அரசியல் பிரசங்கம் நடத்துகின்றனர். ''பிரபஞ்சம் என்ற சேற்றைக் கழிய வழி விட்டவா'' என்று இறைவனை அருணகிரியார் அழைக்கிறார். அரசியலும் ஒரு சேறுதான். இறைவழிபாட்டுக்கு ஏற்பட்ட இடத்தில் அரசியல் கூட்டங்களுக்கு இடமில்லை. இறைவனைத் தாக்கும் கூட்டங்களும் கோவிலிலேயே நடைபெறுகின்றன. தேவார, திருவாய்மொழி பாடி வரவேற்கும் கோவில் இப்பொழுது இந்த அரசியல்காரர்களின் வாய்ச்சண்டைக்குப் பயனாகின்றது. ஹிந்து மதக் கோவில்களைத் தவிர, ஒரு மாதா கோவில் மைதானத்திலோ அல்லது ஒரு மசூதியின் மைதானத்திலோ இவர்கள் இவ்வாறு செய்வதில்லை; செய்யவும் முடியாது!

சென்னை
17—6—65 **எஸ். சேதுராமகிருஷ்ணன்**

★

கட்ச் ரன் விஷயத்தில் அமெரிக்க மௌனம் சில தீவிரவாதிகளுக்குக் கோபம் உண்டாக்கி, 'மேற்கத்திய உறவுகளையே மறுபரிசீலனை செய்யவேண்டும்' என்று கூக்குரலிடக் காரணமாக உள்ளது. அமெரிக்க ஆயுத, பொருளாதார உதவிகளை ஏராளமாகப் பெற்றுக் கொண்டு பகிரங்கமாக ஒரு நன்றிகூடச் செலுத்த இந்திய சர்க்கார் தயாராக இல்லாத போது, அமெரிக்கா பாகிஸ்தானைக் கண்டிக்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம். ஸீடோ (SEATO) போன்ற ராணுவக் கூட்டுகளில் அங்கம் வகிக்கும் தனது சீட நாட்டை அமெரிக்கா கண்டிக்கத் தயங்கவே செய்யும். இதற்காக அமெரிக்க உறவை மறுபரிசீலனை செய்யக் கோரும் கூக்குரல் மிக ஆபத்தானது. சோவியத் யூனியனை எக்காலத்தும் நாம் நம்ப முடியாது. 1962 அக்டோபரில் சீன ஆக்கிரமிப்பு நடந்தபோது ருஷ்யா கடைப்பிடித்த கொள்கையை அனைவரும் அறிவோம்.

அரங்கசமுத்திரம்
27—5—65 **கே. எஸ். மணிவண்ணன்**

ஜீவகீதம்

ஜெகசிற்பியன்



அத்தியாயம் இருபத்தேழு

சாமந்திப்பூ சிங்காரி

அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்த வாறே தான் நடந்துகொண்டிருப்பது போன்ற பிரமையே ஏற்பட்டது சபேசனுக்கு.

கால் போனபடியெல்லாம் தெருத் தெருவாக நடக்கிறான்; மனம்போன படியெல்லாம் சுற்றிச் சுற்றி வரு கிறான்; சோர்வும் களைப்புமாகச் சில இடங்களில் தள்ளாடுகிறான்; தடுக்கி விழுந்து எழுந்திருக்கிறான். கண்ணில் தென்படும் டீக்கடைகளில் உட் கார்ந்து டீ குடிக்கும் சாக்கில் கொஞ்ச நேரத்தைக் கழிக்கிறான். தூக்க மயக் கத்தைப் போக்கிக் கொள்ள ஒரு கட்டுப் பீடி வாங்கி ஒவ்வொன்றாகப் பற்றவைத்துக் குடிக்கிறான். புதிய அநுபவம். தலை சுற்றுகிறது. நெஞ்சு எரிகிறது. ஓயாத இருமல். வாயெல் லாம் கசக்கிறது. தண்ணீர் குடிக்கத் தெருக் குழாய் ஒன்றைத் திறக்கிறான். நல்ல பாம்பு சீறுவதுபோல் புஸ் ஸென்ற சப்தம்தான் வருகிறது. கீழே தேங்கியிருந்த தண்ணீரால் வாயை மட்டும் கழுவிக் கொள்கிறான்!

மணிக்கூண்டுகளிலும், ரயில் நிலை யங்களிலும் அவ்வப்போது மணி பார்த்துக் கொள்கிறான். எதற்கும் துணிந்த தெருச் சுற்றி விடலைகள் எதிர்ப்படும் போதெல்லாம் பயந்து நடுங்கித் தன் சட்டைப் பித்தான் பகுதியை இறுகப் பற்றிக்கொண்டு வேறுவழிகளில் திரும்பி விரைகிறான். போலீஸ்காரர்களைப் பார்த்துவிட் டாலோ அவனுக்குப் பீதியால் மயக்கமே போட்டுவிடும்போல் ஆகி றது. மரங்கள், பாலத்துச் சுவர் முதலானவற்றின் பின்னாலும், குப் பைத் தொட்டி, சாலையோரங்களில் போட்டுக் கிடக்கும் சாக்கடைக் குழாய் ஆகியவற்றில் புகுந்தும் மறைந்து கொள்கிறான். அப்படி ஒரு சாக்கடைக் குழாயின் உள்ளே மறைந்து கொள்ளப் புகுந்தபோது அங்கே நடைபாதை காதல் ஜோடி ஒன்று மயங்கிக் கிடந்ததைக் கண்டு பயந்தடித்துக்கொண்டு வெளியே ஓடி வந்து விடுகிறான். இன்னொரு பாலத் துச் சுவர்ப் பக்கம் பதுங்கப் போன போது அங்கே தெரு விளக்கின் வெளிச்சத்தில் சூதாடிக் கொண்டி ருந்த நான்கைந்து பேர்கள் அரண்டு மிரண்டு எழுந்து ஓடியதைக் கண்டு வெலவெலத்து விடுகிறான். குறுக லான இருண்ட சந்து ஒன்றில் நடந்து

சென்றபோது முகம் தெரியாத கரிய உருவம் ஒன்று வந்து தன் வளையணிந்த கையால் அவன் கையைப் பிடித்து இழுக்கிறது. 'ஐயோ, பிசாசு' என்று உளறிப் பதறிக் கொண்டு ஓடுகிறான். சில இடங்களில் தெரு நாய்களின் படையெடுப்பு அவனைக் குலை நடுங்க வைத்து விடுகிறது!...

ஓர் ஆஸ்பத்திரி வாசலில் நோயாளிப் பெண் ஒருத்தியை ரிக்ஷாவில் கிடத்தி வைத்துக் கொண்டு உள்ளே விடுமாறு வாயில் காப்போனிடம் கெஞ்சிக் கொண்டிருக்கிறாள் ஒரு கிழவி. அவன் ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லி அவளைத் தட்டிக் கழிக்க முயற்சி செய்கிறான். அவ்வழியே வரும் இவன் அதைக் கவனித்துவிட்டுத் தன் கைச் செலவுக்கு வைத்திருந்த எட்டணாவை எடுத்து வாயில் காப்போனிடம் கொடுத்து அவளை அநுமதிக்குமாறு வேண்டுகிறான். அதற்குள் அந்த நோயாளிப் பெண் இறந்து விடுகிறாள். கிழவி வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு கதறுகிறாள். அவன் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டு மேலே நடக்கிறான்!....

ஒரு சினிமாத் தியேட்டரில் கடைசிக் காட்சி பார்த்துவிட்டுத் தனியே வந்த இளம் பெண் ஒருத்தி டாக்ஸிக்காகக் காத்து நிற்கிறாள். அவ்வழியே காரில் வந்த பணக்கார வாலிபன் ஒருவன் அவளைத் தன்னோடு வருமாறு அழைக்க, அவள் மறுத்துக் கூச்சலிட, தெருவில் ஜனங்கள் கூடி அதையும் ஒரு சினிமாக் காட்சிபோல் பார்த்து ரசிக்க, அந்தக் கூட்டத்தில் ஒருவர் தம் பர்ஸைப் பறிகொடுத்து விட்டுக் 'ஐயோ முறையோ' என்று கூவ, அங்கு நின்றுகொண்டிருந்த இவன் பழைய கடற்கரைச் சம்பவத்தை நினைத்துத் திகிலடைந்தவனாய் அவ்விடத்தை விட்டு மெல்ல நழுவி, நடக்க ஆரம்பிக்கிறான்!...

விடியற்காலை மணி ஐந்தரை என்பதை ரிப்பன் மாளிகைக் கடிகாரம் அறிவித்து ஓய்கிறது. அந்தக் காலை நேரத்துப் பூஞ்சையான ஒளியில் ஐலண்டு மைதானத்துச் சாலை நடுவே மன்றோ சிலை கம்பீரமாகக் கண்ணுக்குப் புலனாகிறது. அதன் எதிரே



சாத்திக் கிடந்த மாதவன் நாயர் டீக் கடைக்குப் பின்னால் போய்த் தன்னை மறந்த நிலையில் படுத்து விடுகிறான்!—

இவ்வளவும் நேற்றிரவு ரோஸியின் வீட்டிலிருந்து வெளியே ஓடிவந்த சபேசன், வேறு போக்கிடமின்றி, நடந்து நடந்தே அன்றைய இரவுப் பொழுதைக் கடத்தி விடலாம் என்ற தீர்மானத்துடன், தருமமிகு திருநகராம் சென்னையம்பதியைச் சுற்றி வலம் வரும்போது கண்டு கேட்டு உணர்ந்து அநுபவித்த நிகழ்ச்சிகள்! இந்தக் கசப்பான நிகழ்ச்சிகள் அவனது நேற்றைய நனவோடு ஒழிந்து மறையாமல் இன்றைய பகல் தூக்கத்திலும் கனவாகத் தோன்றி நிகழ ஆரம்பிக்கவே, அந்தப் பயங்கர உள்ளுணர்வில் கண் விழித்து எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

அப்போது மாலை மணி ஐந்து. அன்று ஞாயிற்றுக் கிழமையானதால் மற்ற நாட்களைப்போல் ஜனங்கள் யந்திர கதியிலே இயக்கமிடாமல் உல்லாசமும் அமைதியுமாக நடமாடிக்கொண்டிருந்தனர். வாகனாதிகளின் போக்கு வரத்தும் குறைவாக இருந்தது.

சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்து போய் அந்த வேலியோரத்துக் குழாயில் முகம் கை கால்களைக் கழுவிக் கொண்டு திரும்பி வந்து, சாத்திக்கிடந்த டீக்கடையின் மேல் ஏறி உட்கார்ந்தான் சபேசன். அவ்வழியே 'கெட்டில் டீ' விற்பவனொருவன் வந்தான். அவனிடம் சிங்கிள் சாயாவும், இரண்டு பன்னும் வாங்கி உண்ட பிறகுதான் உடம்பில் கொஞ்சம் உற்சாகம் ஏறியது. துவண்டு கிடந்த மனத்திலும் சிறிது தெம்பு பிறந்தது. இதனால் எடுத்த எடுப்பிலேயே அவனுடைய சிந்தனை நேற்றைய சம்பவத்துக்குத் தாவியது.

'எவ்விதப் பிரதி பிரயோசனத்தையும் எதிர்பார்க்காமல் தனக்கு அந்த ஆங்கிலோ - இந்தியப் பெண் இடம் கொடுத்து உதவியிருக்க, அவளிடம் தான் அத்தனை முரட்டுத்தனமாக நடந்து கொண்டது சரிதானா' என்று எண்ணிப் பார்த்தான். எல்லா வகையிலும் அது நியாயம் என்றே அவனுக்குப் பட்டது. 'நாற்பத்து நான்கு கோடி மக்கள் கொண்ட ஒரு மாபெரும் தேசத்தின் புனிதமான உயிர்போன்ற கீதம் இசைக்கப்படும்போது, அந்த நாற்பத்து நான்கு கோடி மக்கள் தொகுதியில் ஓர் அங்கத்தினளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கும் ஒருத்தி, அதற்குப் போதிய மரியாதை கொடுப்பதில் அலட்சியம் காட்டுகிறாள் என்றால், அந்த மகத்தான நாற்பத்து நான்கு கோடி மக்களில் ஓர் அங்கத்தினனாக இருக்கும் நான் அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பதா? இதற்காக, அந்தக் கீதம் கேட்டு அவள் எழுந்து நிற்க வேண்டுமென்றோ கையெடுத்து வணக்கம் செலுத்த வேண்டும் என்றோ சொல்லவில்லை; நீட்டிப் போட்டிருந்த காலைக் கொஞ்சம் மடக்கியாவது இருக்கலாம் அல்லவா? கல்வியறிவும் நாகரிக முதிர்ச்சியும் கொண்ட ஒருத்தியிடமே இந்த அளவுகூடத் தேசிய உணர்ச்சி இல்லையென்றால் அதை எப்படிச் சகித்துக் கொள்வது? என்னுடைய அற்பமான சுயநலம் ஒன்றுக்காக, அவளின் அந்தச் செயலைப் பார்த்தும் பாராதவன்போல் பொறுத்துக்கொண்டால் அவளைக் காட்டிலும் நான் தேசிய உணர்ச்சி அற்றவனாக அல்லவா ஆவேன்? ஒரு தேசத்தின் பிரஜை அந்தத் தேசத்தின் அரசாங்கத்தை ஆதரிக்காமலோ, எதிர்க்கவோ செய்யலாம்; அல்லது ஓர் அரசியல் கட்சியின் எதிரியாகவும் இருக்கலாம்; அல்லது ஒரு மதத்தையோ மொழியையோ வெறுப்பவராகவும், விரோதிப்பவராகவும் இருக்கலாம்; ஆனால் இத்தகைய வெறுப்பு, எதிர்ப்பு, விரோத, குரோத, அலட்சிய உணர்ச்சிகள் அந்தப் பிரஜையின் சொந்தத் தேசத்தின் மீது மட்டும் எள்ளளவும் படரலாகாது; படரவிட அநுமதிக்கவும் கூடாது.'

இதற்குமேல் அந்தச் சம்பவம் பற்றிச் சிந்திக்க அவன் மனம் கசந்தது. ஆகவே அதை முழுவதுமாக மறந்துவிட்டு, 'இனி என்ன செய்வது?' என்ற தன் வழக்கமான — சிக்கலான — இலேசில் விடை காண முடியாத — 'பெரிய' கேள்விக்குள் சிந்தனையை நுழைத்துத் துழாவிப் பார்க்கலானான்.

என்ன ஆச்சரியம்! சில விநாடிகளுக்குள்ளாகவே அந்தக் கேள்விக்கு ஒரு திடமான முடிவைத் தேர்ந்தெடுத்துவிட்டான் அவன். ஆமாம்; தன் சொந்தக் கிராமத்துக்குப் புறப்பட்டுப் போய்விடுவது என்ற முடிவுதான் அது.

இந்த முடிவுக்கு வந்ததுமே அவன் முகத்தில் இந்நாள்வரை காணப்படாத ஒரு குறுகுறுப்பான கவர்ச்சியும் குதூகல சோபையும் பூத்துப் பரவின. இப்போதே புறப்பட்டு விடுகிறவனைப்போல் அவசரமாகக் கீழே இறங்கினான். ஆனால் மறு கணமே அந்த உற்சாகமும் மகிழ்ச்சியும் மறைந்து, முன்போல் முகம் கவலையால் கறுவடைந்து இருண்டது. 'ஆமாம்; பர்மாவிலிருந்து மூன்றாவது கப்பல் எப்போது வரும் என்று தெரியவில்லையே! இன்னும் பத்துப் பதினைந்து தினங்களாவது ஆகும் என்கிறார்கள். அந்தக் கப்பலில் என் தந்


தையார் வந்தாலும் வரலாம். அப்படி வந்தால் அவரை எங்கே சந்திப்பது? இத்தனை நாட்கள் இவ்வளவு கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு அவருக்காகக் காத்திருந்ததெல்லாம் பயனின்றிப் போய்விடுமே! என்னைப்போல் அவரும் இங்கு எனக்காகக் கஷ்டப்பட நேர்ந்தால்?'

சோர்வும் களைப்புமாக அப்படியே கூனிக்குறுகி உட்கார்ந்துவிட்ட சபேசன் நெடுநேர சிந்தனைக்குப் பின் மீண்டும் பழைய முடிவுக்கே வந்தான். 'இல்லை; இனி ஒரு நாள்கூட இந்த ஊரில் என்னால் தங்க முடியாது. சொந்தக் கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்துவிடவேண்டியதுதான். தந்தையாருக்காக நான் இங்கிருந்தால் என் தாயின் கதி என்னவது? அங்கே அவள் என்ன பாடு பட்டுக்கொண்டிருக்கிறாளோ?'


கலங்கிய கண்களைத் துடைத்துக்கொண்டு சிறிதே தெம்பு பெற்றவனாய் நிமிர்ந்து உட்கார்ந்த அவன், தன் சட்டைப் பித்தான் பகுதியைத் தொட்டுப் பார்த்துவிட்டுப் பிறகு தன்னையே ஒரு முறை ஏற இறங்க நோட்டமிட்டுக் கொண்டான்.

'கொச்சி எக்ஸ்பிரஸ் ரயிலில் ஏறிக் கோயமுத்தூரில் இறங்கிக்கொண்டு அங்கிருந்து கவுண்டன்பாளையத்துக்கு அருகிலிருக்கும் என்னுடைய கிராமத்துக்குப் பஸ்ஸிலோ வேறு வாகனங்களிலோ போய்விடலாம். ஆனால் அந்த ரயில் இங்கிருந்து எப்போது புறப்படுகிறது என்று தெரியவில்லை. சென்ட்ரல் ஸ்டேஷனுக்குச் சென்று விசாரிக்க வேண்டும். மேலும் பல ஆண்டுகளுக்குப் பிறகு என் சொந்த ஊருக்குப் போகும்போது இந்தப் பிச்சைக்காரக் கோலத்திலா போவது? ஊர் ஜனங்கள் பார்த்தால் கேவலமாக நினைப்பார்களே! கடல் கடந்து போய் வருகிறவர்களைப்பற்றி இங்குள்ளவர்களுக்கு மிகவும் மதிப்பான எண்ணம். பாவம், அவர்கள் அயல் தேசங்களிலே படும் அல்லல்களை இவர்களால் எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? ஆகவே, அந்தப் பொய்யான கௌரவத்தைக் காப்பதற்காகிலும், நான் ஒரு நல்ல பாண்ட்டும் சட்டையும் வாங்கிக்கொள்ள வேண்டும். இவை மட்டும் போதுமா? என் அருமை அன்னை இப்போது என்னைப் பற்றி என்னென்ன மனக்கோட்டைகள் கட்டிக் கொண்டிருக்கிறாளோ! தனது மைந்தன் திரைகடல் ஓடித் திரவியம் சேர்த்துச் செல்வச் செழிப்புடன் சீரும் சிறப்புமாக வாழ வேண்டும் என்ற பேராசை கொண்டு ஏழெட்டு வயதுப் பாலப் பருவத்திலேயே என்னைக் கப்பலேற்றி விடத் துணிந்த வீரத்தாய் அல்லவா அவள்? அப்படிப்பட்டவளின் எதிரே போய் வெறும் கையுடனா நிற்பது? அவளுக்கு ஒரு புடவையும் ஒரு ரவிக்கைத் துண்டும் வாங்க வேண்டும். தன் பிள்ளையின் சொந்தச் சம்பாத்தியத்தில் தனக்கென்று வாங்கிய அந்த முதல் புடவையை அவள் எவ்வளவு பெருமையோடு உடுத்திக் கொள்வாள்! அவற்றுடன் சுவையான பட்சணங்கள் கொஞ்சமும், கிராமத்தில் கிடைக்காத பழ வகைகள் சிலவும் அவளுக்கு வாங்கிக்கொண்டு போக வேண்டும். அதையெல்லாம் பார்த்து அவள் அப்படியே பூரித்துப் போவாள். அது சரி; அந்தப் பொருட்களை எதிலே வைத்து எப்படி எடுத்துச் செல்வது? நான் போட்டுக் கொண்டிருக்கும் இந்தப் பழைய சட்டையில் மூட்டையாகக் கட்டிக் கொள்ளலாமா? சே, என்ன பிச்சைக் காரப் புத்தி இது! ஒரு நல்ல கான்வாஸ் பை வாங்கிக் கொள்ளலாம். அது தான் கைக்கு அடக்கமாகவும் பொருட்

சென்னை, கிரௌன், கிருஷ்ணவேணி மற்றும் தென்னாடெங்கும்



ELEGANT



அமிர்தாஞ்சனம்

தடவி விரைவில் நிவாரணம் பெறுங்கள்

உடலில் ஒரு பகுதியை மட்டும் பாதிக்கும் வலிக்காக உள்ளுக்கு மருந்து சாப்பிடுவானேன்? வலிக்கும் இடத்தின் மேல் மட்டும் அமிர்தாஞ்சனம் தடவி விரைவாக வலி நிவாரணம் அடையுங்கள். பத்து மருந்துகள் கொண்டு விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள அமிர்தாஞ்சனம் தசைவலி, தலைவலி, சுளுக்கு மற்றும் மூட்டு வலிகளுக்கு சிறந்த வகையில் நல்ல நிவாரண மளிக்கும். மற்றும் மார்ப்புச்சளி, ஜலதோஷம் போன்றவைகளும் ஏற்ற மருந்து அமிர்தாஞ்சனம். ஒரு சமயத்தில் தேவையானதெல்லாம் மிகச் சிறு அளவே; ஆதலால், ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்திற்கு மாதக் கணக்கில் வரும்.

அமிர்தாஞ்சனம் 70 வருடங்களாகக் குடும்பங்களில் பயன்பட்டுவரும் கைகண்ட நிவாரணி.

பத்து மருந்துப பொருள் ஒருங்கே சேர்ந்த அமிர்தாஞ்சனம் வலிகளுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற சிறந்த நிவாரணி



அமிர்தாஞ்சன் லிமிடெட், மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி

களுக்குப் பாதுகாப்பாகவும் தூக்கிக் கொண்டு நடக்கச் சுலபமாகவும் அழகாகவும் இருக்கும். அடடே!... 'நடக்க' என்றதும் இன்னொரு ஞாபகம் வருகிறது: புதிதாகப் பாண்டும் ஸிலாக் சட்டையும் போட்டுக்கொண்டு வெறுங் காலுடனா நடப்பது? ஒரு ஜோடி செருப்பாவது வாங்கவேண்டுமே! நடைபாதைகளில் 'ஹவாய் சிலிப்பர்' என்று மலிவாக விற்கப்படுகிறது. இரண்டு ரூபாய் விலையில் கிடைக்கும். அது சீக்கிரம் அறுந்துபோய்விடும் என்றாலும் தற்சமயத்துக்கு அதையே வாங்கிப் போட்டுக் கொள்ளலாம். ஆமாம்... இத்தனை பொருட்களையும் வாங்க ஐம்பது அறுபது ரூபாய்க்கு மேல் ஆகிவிடும்போல் இருக்கிறதே! என்னிடம் இப்போது எவ்வளவு பணம் இருக்கும்? சட்டைப் பித்தான் மடிப்பைக் கிழித்துப் பார்த்தால்தான் அது தெரியும்!'

புன்னகையுடன் தலை யசைத்துக் கொண்ட அவன், 'எப்போது பயணமாவது?' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டான். 'எப்படியும் இன்று புறப்பட முடியாது. ஏனென்றால் இப்போதே மணி ஆறுக்கு மேலாகிவிட்டது. இனிமேல் கடைகளுக்குப் போய்த் தேவையான எல்லாப் பொருட்களையும் வாங்க முடியுமா? கொஞ்சம் அவகாசம் எடுத்துக்கொண்டு செய்யவேண்டிய காரியம் இது. அவசரப்பட்டு விலைகளில் ஏமாந்து பணத்தை நஷ்டப் படுத்திவிடக் கூடாது அல்லவா? அதைச் சேமிக்கக் கொஞ்சமான பாடா பட்டிருக்கிறது! எனவே, நாளைக்குப் பயணத்தை வைத்துக் கொள்வதுதான் நல்லது. அப்படியானால் இன்றிரவை இன்றைய ஒரே ஓர் இரவை — எங்கே படுத்துக் கழிப்பது?'

மீண்டும் சோர்ந்து துவண்டான் சபேசன். ஆயினும் நாளைக்கு இவ்வூரை விட்டுப் போய்விடப் போகிறோம் என்ற எண்ணம் இப்போதே அவன் மனத்தில் ஒரு துணிவை ஏற்படுத்தவே, 'இதென்ன பெரிய பிரச்னையா? அதோ, அந்த மன்றோ சிலையின் அடிவட்டத் தளத்திலேயே படுத்துக்கொண்டால் போகிறது! ஒரே ஓர் இரவுதானே? அப்படி யாராவது வந்து மிரட்டினால் ஒரு ரூபாயோ இரண்டு ரூபாயோ கொடுத்துச் சரிக்கட்டி விடலாம்!' என்று அலட்சியமாக முணுமுணுத்துக் கொண்டான்.

மாலைப் போது மெல்ல மெல்லக் கரைந்து இலேசான இருட் புகை படரத் தொடங்கியது. ஆனால் சாலை விளக்குகள் இன்னும் எரியவில்லை. எங்காவது ஒரு ஹோட்டலுக்குப்போய்ச் சாப்பிட்டு வரலாம் என்று எழுந்து நின்ற சபேசனின் மனத்தில் மின்னலைப் போல் ஓர் எண்ணம் நெளிந்து சுருண்டது. 'ஆகா, என் அன்பு நண்பன் நச்சியை மறந்தே விட்டேனே!... அவனைப் பார்க்காமலோ அவனிடம் சொல்லாமலோ ஊருக்குப் போகலாமா? அப்படிப் போவது மனிதத் தன்மையாகுமா? அவனுடைய தன்னலமற்ற ஆதரவும் உதவியும் இல்லையென்றால் இன்று நான் தெருவிலே நின்று பிச்சை எடுப்பவனாக அல்லவா இருந்திருப்பேன்! என்னை மானத்தோடு வயிறு பிழைக்க வைத்ததுடன் அல்லாமல் இப்போது ஓரளவு கௌரவத்தோடும் ஊர் போய்ச்

சிநேக வித்து

அன்றைய ஆட்சிக்கு நான் எதிரி. இருப்பினும் அந்த நாளில் ஏற்பட்ட சிறு சம்பவம் என்னையும் லார்டு வில்லிங்டனையும் அறிமுகப்படுத்தி வைத்தது. பிற்காலத்தில் எனக்கு அதுவே அவருடைய நெருங்கிய நீண்ட நட்பைத் தேடித் தந்தது.

அப்போது ஹோம்ரூல் இயக்கம் நடந்துகொண்டிருந்தது. நான் பம்பாயில் அந்த இயக்கம் பற்றிப் பேச ஏற்பாடாகி யிருந்தது. அப்போது பம்பாய் மாகாண கவர்னராக லார்டு வில்லிங்டன் இருந்தார். அப்போது பொதுக் கூட்டங்களில் பேசக்கூடாது என்று தடையுத்தரவு போடப்பட்டிருந்தது. அந்தத் தடையுத்தரவை மீறி நானும் டாக்டர் பெஸண்ட் அம்மையாரும் பேசவேண்டியது என்று முடிவு செய்தோம். என்னைப் பற்றி ஏற்கெனவே கேள்விப் பட்டிருந்த லார்ட் வில்லிங்டன் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். பிரசங்கம் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருந்தார். மீறினால் நடவடிக்கை எடுக்க நேரும் என்றும் கூறியிருந்தார். அவருடைய பரிவுக்கும் யோசனைக்கும் நன்றி சொல்லிவிட்டு ஆனால், அவர் யோசனையை ஏற்றுக்கொள்ள இயலாமையைக் குறித்து மரியாதையுடன் தெரிவித்தும் பதில் எழுதியிருந்தேன். அதற்கு அவர் தமது இயல்பான பெருந்தன்மையுடன் என்னைச் சிறைக்கு அனுப்பு முன் தம்முடன் தேநீர் அருந்த வரவேண்டும் என்று அழைத்திருந்தார். இப்படித்தான் முதன் முதலாக லார்டு வில்லிங்டன் தம்பதிகளை பம்பாய் அரசாங்க மாளிகையில் சந்தித்தேன். முடிவில் நான் பேச அனுமதிக்கப்பட்டேன். எங்கள் நட்பு வளர்ந்து வந்தது. அவர் வைஸ்ராய் பதவி ஏற்றபோது அவரது அந்தரங்க நண்பனாகவும் ஆலோசகர்களில் ஒருவனாகவும் பதவி ஏற்றேன்.



— ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் —

சேர எனக்கு வக்கு ஏற்படுத்திக் கொடுத்தவனாயிற்றே அவன்?'

நன்றிப் பெருக்கால் நெஞ்சம் நெகிழ்ந்து குழைந்த சபேசன் சட்டென்று முகத்தைச் சுளித்துக்கொண்டான். காரணம், நச்சியை அவன் பார்த்து ஒரு வாரத்துக்கு மேல் ஆகி விட்டது. அன்றொரு நாள் இரவு, ரோஸியின் வீட்டிலிருந்து போனானே, அதற்குப் பின் அவனை எங்குமே பார்க்க முடியவில்லை. இந்தப் பரந்து விரிந்த சென்னைப்பட்டணத்தில் அவனைத் தேடிக் கண்டுபிடிப்பது அத்தனை இலேசுப் பட்ட காரியமல்ல என்பதும் ஏற்கனவே பலமுறை அநுபவமாகிப் போன விஷயம் அல்லவா? ஆகவே, 'நாளைக்குள் நச்சியைச் சந்தித்துத் தான் ஊருக்குப் போகும் செய்தியைச் சொல்ல முடியாமல் போனால் என்ன செய்வது?' என்ற குழப்பத்தில் ஆழ்ந்தான். மறு கணமே மற்றோர் எண்ணம் அவன் மனத்தில் குறுக்கோட்டமிட்டது. 'ஆமாம்; இப்போது நச்சியைப் பார்க்காமல் பயணமாகிவிடுவதே நல்லதென்று தோன்றுகிறது. ஏனென்றால், எனது இந்த முடிவைக் குலைக்கும் விதத்தில் அவன் ஏதேனும் புதிய நைப்பாசை காட்டி இங்கேயே தங்கியிருக்கும்படி செய்தாலும் செய்துவிடுவான். அப்படிச் சொல்வதும் செய்வதும் அவனுக்குப் பழக்கப்பட்டுப் போன சாதாரண விஷயம். அந்தச் சமயத்துக்கு மனம் குளிரும்படி ஏதாவது பண்ணுவான்; அப்புறம் அதுவே பல துன்பங்களில் என்னைச் சிக்க வைத்துவிடும். அகதி முகாமில் இருந்தபோது அவனுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு வெளியில் வந்ததால்தானே இப்போது இத்தனை கஷ்டங்களுக்கும் ஆளாகி நடுத் தெருவிலே நிற்கிறேன்! வேண்டாம். இதுவரை பட்டதெல்லாம் போதும். பேசாமல் ஊர் போய்ச் சேர்ந்துவிடுவோம். அங்கு போன பின் அவனுக்கு நல்லவிதமாக ஒரு கடிதம் எழுதிவிட்டால் போகிறது.'

பலமாகத் தலையாட்டிக் கொண்டு ஹோட்டலுக்குப் போகக் கிளம்பிய சபேசன், "இன்னா நைனா! எங்கே வந்துட்டுப் போறே?" என்ற குரல் கேட்டுச் சட்டென்று பின்னால் திரும்பினான். அங்கே, அந்தச் சாமந்திப்பூ சிங்காரி — அன்றொரு நாள் இரவு அவன் குளிரில் நடுங்கிக்கொண்டு படுத்துக் கிடந்தபோது தன் சேலைத் தலைப்பைக் கிழித்து அவனுக்குத் தெரியாமலே போர்த்திவிட்டுப் போனாளே, அவள்— வாய் நிறைய வெற்றிலை போட்டுக் குதப்பிக்கொண்டு சிரித்தபடியே வந்து நின்றாள்.

அவளைச் சற்று நிதானித்துப் பார்த்து நினைவுபடுத்திக் கொண்ட சபேசன், "ஒன்றுமில்லை, அக்கா! சும்மா கொஞ்ச நேரம் இங்கே உட்கார வந்தேன்..." என்று அசட்டுச் சிரிப்புடன் இழுத்தான்.

அவள் அவனை வியப்போடு நோக்கி, "அப்படீன்னா, உன்னோட தோஸ்தைப் பார்க்க வரலையா?" என்று கேட்டாள்.

"யாரைச் சொல்றே, அக்கா?"

"நச்சியைத்தான்! அவரை நீ பார்க்கலியா?"

"இல்லையே!... இங்கு அவன் வந்தானா?"

"சரிதான்; உனக்கு விசயமே தெரியாது போலிருக்குது..." என்று அநுதாபக் குரலில் இழுத்து நீட்டிய அவள் வெற்றிலைக் கலவையைக் கடைவாயில் அடக்கிக்கொண்டு உதடுகளைக் குவித்து 'விசுக்'கென்று எச்சிலை உமிழ்ந்துவிட்டு, "என்கூட வர்றியா, நைனா! அவரைக் காட்டறேன்?" என்றாள்.


அவளது முகபாவத்தை ஊன்றிக் கவனித்த சபேசனுக்கு உள்ளூற ஒருவித அச்சம் மூண்டது. ஆயினும் நச்சியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் — சற்று முன் அவனைப்பற்றிச் செய்த தீர்மானத்தையும் மீறிக் கொண்டு — எழுந்து உந்தவே, தயக்கத்துடன் அவளைப் பின்தொடர்ந்தான். **(தொடரும்)**

செய்திப் படங்கள்

1. கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற வள்ளலார் விழாவில் கல்கத்தா மேயர் திரு பி. கே. ராய் செளத்ரி தொடக்க உரை நிகழ்த்துகிறார். 2. நிழுகாவில் சர்வ கலாசாலை விசேஷப் பட்டமளிப்பு விழாவில் பேராசிரியர் எஸ். சந்திரசேகருக்கு விஞ்ஞானத்தில் கௌரவப் பட்டம் நெதர்லாந்து கோமகள் வழங்கிக் கௌரவித்தார். 3. விண்வெளி வீரர் எட்வர்ட் ஒயிட் வானவெளியில் மிதக்கும் அபூர்வக் காட்சி. அவர் கையில் அவரை விண்வெளியில் இயக்கவைக்கும் சாதனமான 'துப்பாக்கி' இருப்பதைக் காணலாம். 4. சேலத்தில் மத்திய சர்க்கார் உதவி மந்திரி ஸ்ரீ வி. ஆர். பட்டாபிராமன் அவர்கள் தலைமையில் மகாராஜபுரம் விசுவநாதய்யருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள். 5. தில்லை திருப்புகழ் சபையின் ஆதரவில் சமீபத்தில் சிதம்பரத்தில் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் பெரிய புராணத் தொடர் விரிவுரைகள் அமோகமாக நிறைவேறின.


1


2


3


4


5



"நான் ஆசீர்வாதம் செய்தால் பலிக்கும் போலிருக்கிறது!" என்றாள் மாதங்கி, சிரித்துக் கொண்டே.

"அப்படியா? எதில் பலித்தது?" என்று விசாரித்தான் வசந்தன்.

"அன்றைக்கு 'சிசு வரிசை வாழ்க!' என்று சொன்னேன். இப்போது குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்கென்று புது சிசு வரிசை ஆரம்பித்திருக்கிறது. பார்த்தீர்களா ?" என்றாள்.

"ஆமாம். நீங்கள் இந்த வயசில் ஆசீர்வாதம் செய்வதே பலிக்கிறதே, போகப் போக இன்னும் நன்றாகப் பலிக்கும்!"

"இந்த வயசில் என்றால்....? என் வயசு என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?"

"சுமாராக, கிட்டத்தட்ட....ஏறத்தாழ... இருபத்திரண்டரை இருக்கும். தவறிப் போய் அதிகமாகச் சொல்லிவிட வில்லை என்று நினைக்கிறேன்" என்று வசந்தன் தயங்கிக் கொண்டே கூறினான்.

"சரியாகச் சொல்லி விட்டீர்கள். உங்கள் வயது இருபத்தைந்து...." என்றாள் மாதங்கி.

"இல்லை. இருபத்தெட்டு!" என்று வசந்தன் தெரிவித்தான்.

"பார்த்தால் அப்படித் தெரியவில்லையே !" என்றாள்.

அவர்கள் இருவரும் தங்களைப் பற்றி மனம் விட்டுப் பேசிக் கொண்டது இதுதான் முதல் முறை.

"இங்கே. 'சி. கு. ப. சே. சி. வ.'க்கு வந்திருக்கிறீர்களே, குழந்தை எங்கே?" என்று வசந்தன் கேட்டான்.

"அதென்னமோ சொன்னீர்களே, அதற்கு என்ன அர்த்தம்?" என்று மாதங்கி கேட்டாள்.

"சிறு குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் சிசு வரிசை என்று அர்த்தம். நீங்கள் எந்தக் குழந்தையை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?"

"நீங்கள் யாரை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறீர்களாம்? ஒருவரையும் காணோமே?"

"நான் சும்மா வேடிக்கை பார்க்க வந்தேன்" என்றான் வசந்தன்.

"நானுந்தான்!" என்றாள் மாதங்கி.

இருவரும் சிரித்தார்கள்.

தாங்கள் இருவரும் சிரித்தது, சாதாரணப் பழக்க வழக்கங்களுக்குச் சிறிது புறம்பானது என்று அவர்களுக்குப் பட்டது. உடனே மாதங்கி முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு, "அன்றைக்கு மாலினி என்ற ஒரு சின்னஞ்சிறு பெண், ஒரு சின்னஞ்சிறு அறைக்குள் அகப்பட்டுக் கொண்டிருந்தாள் என்று சொன்னேனா?" என்று கேட்டுக் கதையைத் தான் விட்ட இடத்திலிருந்து கூறலானாள் :


அவள் தாயார் மதுரம் வந்து, "மாலினி! கதவைத் திறந்து கொண்டு வாயேன் !" என்றாள் பதற்றக் குரலில்.

மாலினி, கதவண்டை போய்த் தாழ்ப்பாள் பக்கம் கையை நீட்டினாள். பிறகு சடக்கென்று கையை இழுத்துக் கொண்டு இப்பால் வந்து விட்டாள்.

"அங்கே ஏதாவது பூச்சி இருக்கிறதா?" என்று மதுரம் கேட்டு மறுபக்கத்துக் கம்பிகள்

கபாடம் திறமினே!

ஜமிலன்





வழியாக உட்பக்கம் எட்டிப் பார்த்தாள். குமாஸ்தா ஒரு டார்ச் லைட்டைக் கொண்டு வந்து வெளிச்சத்தைக் காட்டினான். தாழ்ப்பாளின்மீது ஒன்றையும் காணோம்.

''திற, கண்ணு! உனக்கு என்ன வேண்டுமானாலும் வாங்கிக் கொடுக்கிறேன்!'' என்று தாயார் கெஞ்சினாள்.

மாலினி, பதில் சொல்லாமல் தலையை ஆட்டினாள். தாயார் கதிகலங்கிவிட்டாள்.

''அப்பா, அடுத்த வாரம் டெல்லிக்கு ஒரு மீட்டிங்குக்குப் போகப் போகிறார். அப்போது உன்னை ஏரோப்ளேனில் அழைத்துக் கொண்டு போகச் சொல்கிறேன்'' என்றாள்.

பலமான தலையாட்டல்தான் பதில்.

''அடுத்த மாதம் அப்பா ரொம்ப ரொம்ப ஊருக்கெல்லாம் போகப் போகிறார். ரஷியா, அமெரிக்கா எல்லாம் உன்னை அழைத்துக் கொண்டு போகச் சொல்கிறேன்'' என்று ஆசை காட்டினாள் தாயார்.

தற்செயலாக அங்கே வந்த மந்திரியின் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் ஒருவர், ''குழந்தை! உனக்கு ஒரு வண்டி நிறைய சாக்லேட், பப்பிள் கம், பந்து எல்லாம் வாங்கிக் கொடுக்கிறேன்'' என்று கூறினார்.

மாலினி இதற்குத் தன் தலையைக்கூட ஆட்டவில்லை.

''பந்து வண்டி நிறைய வேண்டுமா?'' என்று கேட்டார் அவர்.

மாலினி கையை ஆட்டி வேண்டாமென்று தெரிவித்தாள். அவள் இலஞ்சம் வாங்கிக் கொண்டு காரியம் செய்யத் தயாராயில்லை.

மந்திரி மகள், மாடிப் படிக்குக் கீழுள்ள அறையினுள் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாள் என்ற செய்தி உத்தியோக வட்டாரங்களில் பரவி விட்டது. மந்திரியின் அந்தரங்கக் காரியதரிசி, சொந்தக் காரியதரிசி, உதவி மந்திரி, போலீஸ் அதிகாரி, ஸர்ஜன் ஜெனரல் முதலியவர்கள் வந்து விட்டார்கள். ஒரு தீயணைக்கும் எஞ்சினும் வந்திருந்தது. மாலினியின் தந்தை அரக்கோணத்தில் 'கக கஜவர பவனம்' என்ற புதிய நாவித மாளிகையைத் திறந்து வைக்கச் சென்றிருந்தார். அவருக்கு டிரங்கு டெலிபோன் செய்தி பறந்தது. மந்திரி திருத்தணியில் ஒரு நியாய எடைக் கடையைத் திறந்து வைக்கப் போனாரென்றும், போன இடத்தில் அவருக்குக் கோவில் அதிகாரிகள் பூரண கும்ப மரியாதைகளுடன் வரவேற்பு அளித்ததால் திரும்பி வரத் தாமதமாகி விட்டதென்றும், வந்ததும் அவரிடம் தகவல் தெரிவிப்பதாகவும், டெலிபோனில் பதில் கிடைத்தது.

மாலினியிருந்த அறைக்கு எதிரில் கூடியிருந்தவர்கள் அவளை எப்படி வெளியேற்றுவது என்பதைப் பற்றி யோசனை செய்து பார்த்தார்கள். கதவை உடைத்தால், கதவு தவறிப் போய்க் குழந்தைமீது விழுந்து விட்டால் என்ன செய்வதென்று பயந்தார்கள். ஒரு பக்கத்தில் மட்டும் இருந்த கம்பிகளைப் பெயர்த்தெடுக்கலாம் என்று ஓர் அதிகாரி கூறினார்.

அதைக் கடைசி முயற்சியாக வைத்துக் கொள்ளலாம் என்று மதுரம் கூறி விட்டாள். ஏனென்றால், இடிக்கும்போது குழந்தை கையை நீட்டினால் அதன் மீது பட்டுவிடலாமென்று பயந்தாள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சிறைச்சாலை அதிகாரிக்கு டெலிபோன் செய்து என்னமோ பேசினார். சில நிமிஷங்களுக்கெல்லாம் ஒரு போலீஸ் வானில் ஒரு கைதி வந்து இறங்கினான். அவன் பார்ப்பதற்குக் குச்சி போலிருந்தான். அவன் வெளியிலிருந்து கொண்டே எந்த வீட்டின் உட்தாழ்ப்பாளையும் திறப்பதில் நிபுணன். அவன். அப்படிச் செய்தே பல வீடுகளில் திருடியதற்காகப் பத்து தடவை ஜெயிலுக்குப் போயிருக்கிறான். அவன் ஒரு நீண்ட இரும்புக் கம்பியைக் கொண்டு வரச் சொல்லி அதை ஒரு ஹுக்காக வளைத்தான். இதை எல்லாம் மாலினி கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தாள். கைதி கம்பியைத் தாழ்ப்பாள் பக்கம் நீட்டிய போது அவள் பாய்ந்து சென்று தாழ்ப்பாளைத் தன் கைகளால் பொத்தினாள். அவள் கைகளில் காயம் படும் என்பதற்காக அந்த யோசனையைக் கைவிட்டார்கள்.

கைத்தொழில் பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயர் ஒருவர் வந்தார். அவர் கையில் ஒரு தாழ்ப்பாள் இருந்தது. அவர் ஜன்னலுக்கு முன் வந்து நின்று கொண்டு, "இப்போது குழந்தாய்!" என்று பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுப்பது போல் ஆரம்பித்தார். "இந்தத் தாழ்ப்பாளை இப்படியும் நகர்த்தலாம், அப்படியும் நகர்த்தலாம்" என்று தாழ்ப்பாளைத் தள்ளித் தள்ளிக் காண்பித்தார். 'நான் ஒன்று, இரண்டு, மூன்று சொல்வேன். மூன்று என்றதும் கதவில் இருக்கும் தாழ்ப்பாளை இப்படி 'டக்' என்று இழுத்து விடு. பார்க்கலாம். உனக்கு நூற்றுக்கு நூறு மார்க் கொடுக்கிறேன்" என்றார்.

"டிக், டிக்!" என்று மாலினி கூறி அந்த உபாத்தியாயருக்கு அழகு காட்டினாள்.

ஸர்ஜன் ஜெனரல் ஒரு யோசனை சொன்னார். "இலேசாக ஈதரைக் குழந்தை மூக்கில் படச் செய்தால் அவள் மயக்கமடைந்து விடுவாள். உடனே கம்பிகளை வளைத்து அவளை வெளியேற்றலாம்" என்றார். அதற்கு மந்திரி மனைவி ஒப்புக் கொள்ளவில்லை.

சட்ட சபையில் ராஜ்ய கவிஞராக நியமிக்கப்பட்டிருந்த வித்துவான் வந்தார். பண்டைய காலத்தில், இராணி இராஜா மீது கோபம் கொண்டால், பள்ளியறைக் கதவைச் சாத்திக் கொண்டு விடுவாள். உடனே ஆஸ்தானக் கவிஞர் வந்து ஒரு பாட்டுப் பாடுவார். மறுகணம் இராணி கதவைத் திறந்து விடுவாள். அதே போல் ஒரு பாட்டுப் பாடிக் குழந்தையைத் திறக்கச் செய்துவிடலாமென்று கூறினார். அவர் ஓர் அரசாங்க ஜீப்பில் வந்து கொண்டிருக்கும் போதே, 'இட்டுக் கட்டி'யிருந்த ஒரு பாட்டைப் பாடினார். "மந்திரி பெற்ற மாலினி மாணிக்கமே! கபாடத் திறவாயோ!" என்று முடித்தார்.

அதைக் கேட்டு மதுரம், "நான் பெற்ற மாணிக்கமல்லவா?" என்று தனக்குள் முனகிக்கொண்டாள்.

ராஜ்ய கவிஞர் பாடியதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த மாலினி சிரித்தாள். விழுந்து விழுந்து சிரித்தாள்: பிறகு சுவர் ஓரமாகப் போய் நின்று கொண்டாள்.

சின்னஞ் சிறு பள்ளியில் உனக்கொரு
சிங்காரப் பெஞ்சுமிட்டு
இன்னக் கனியளித்துப் பாலபாடம்
செப்புவேன் வா கிளியே.

என்று பாடினாள். அவளுக்கு இன்னும் நன்றாக மழலை மாறவில்லையாதலால் பாடுவதைக் கேட்க வேடிக்கையாயிருந்தது.

"ஒரு வேளை கிளி வேண்டுமென்று ஆசைப்படுகிறாளோ என்னவோ?" என்று மதுரம் சொன்னாள். மறு கணம் வண்டி மிருகக் காட்சிச் சாலைக்குச் சென்றது. கிளிகளைக் கொண்டு வருவதற்காகத்தான்.

'கனி என்கிறாளே ஒரு வேளை பசிக்கிறதோ என்னவோ?' என்று ஒருவர் சொல்லவே, வேலைக்காரப் பெண் ஓடிப்போய் ரிப்ரிஜிரேட்டரிலிருந்து ஐந்து ஆறு ஆப்பிள் பழங்களையும், பத்துப் பதினைந்து 'பிளம்' பழங்களையும் அறைக்குள் கொண்டுவந்து போட்டாள்.

மாலினி அவற்றைத் தன் குஞ்சுக் காலால் இப்படியும் அப்படியும் உதைத்துத் தள்ளிப் பந்தாட்டம் ஆடினாள்.

இதே சமயம் மாளிகைத் தோட்டத்துக்குள் ஒரு மோட்டார் கார் வேகமாக வந்து நின்றது. மந்திரி தாமே கதவைத் தம் கையாலேயே திறந்து கொண்டு வெளியே தாவிக் குதித்தார். அவர் வந்த அவசரத்தில் கழுத்தில் போட்டுக் கொண்டிருந்த மலைப் பாம்பு பருமனுள்ள மலர் மாலையைக் கழற்றவில்லை. ஒரு கையில் செண்டும் இருந்தது.

சுமார் ஆயிரம் திறப்பு விழாக்களில் எதை எதையோ திறந்து வைத்திருந்த மந்திரியின் கைகள் தன் பெண் அடைபட்டுக் கிடந்த அறைக் கதவைத் திறக்க முயற்சி செய்யவில்லை. "மாலினிக் குட்டி! அப்பா வந்திருக்கிறேன். கதவைத் திற!" என்றார்.

"அப்பாவா?" என்றாள் மாலினி.

"ஆமாண்டா, கண்ணு!" என்ற மந்திரி, "ஏன் கதவைத் திறக்க மாட்டேன் என்கிறாய்?" என்று கேட்டார்.

"எல்லாரையும் போகச் சொல்லுங்கள். ஒருத்தரும் வேண்டாம். அம்மாகூடத்தான். நீ மட்டும் இரு!" என்றாள்.

இதைக் கேட்டதும் எல்லோரும் தாங்களாகவே அப்பால் சென்றார்கள்.

மாலினி கம்பிகள் வழியாக யாராவது பக்கத்தில் இருக்கிறார்களா என்று பார்த்துக் கொண்டாள். பிறகு, "அப்பா, இங்கே வா!" என்றாள்.

மந்திரி பெண்ணிடம் வந்தார். "நான் விளையாடுவேனே, ராஜூவோடு!" என்று சொன்னதும் அவள் கண்களில் நீர் வழிந்தது.

"அவனுக்கு என்ன அம்மா, உடம்பு? ஜுரமா?" என்று மந்திரி கேட்டார்.

"இல்லை... ஒன்றுமில்லை. ஆனால்..." ஆனால்......" என்று கூறி விசித்து விசித்து அழுதாள்.

"அவனுக்கு என்ன பண்ணணும், சொல்லு! என்ன வேண்டுமானாலும் செய்கிறேன்." என்றார் மந்திரி.



சென்னை ஸ்ரீ டி. அருணாசல நீதைநர் குமாரர் சி. டி. ஏ. சுப்ரமணியன் B. Com., க்கும் சென்னை கோவினூர் கன்பெக்ஷனரி கம்பெனி மானேஜர் ஸ்ரீ விஸ்வநாதன் அவர்கள் குமாரி சௌ. சாந்தாவுக்கும் சமீபத்தில் சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. காலையில் நடைபெற்ற திருமணத்துக்கும், மாலையில் நடைபெற்ற வரவேற்பில் குமாரிகள் வசந்தா, விஜயலட்சுமியின் இன்னிசைக் கச்சேரிக்கும், உறவினர்களும் நண்பர்களும், நகரப் பிரமுகர்கள் பலரும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள் !

"சத்தியமாக!" என்று கேட்டாள்.

"சத்தியமாக!" என்று மந்திரி சொன்னார்.

"அன்னிக்கு ஒரு நாள் டெலிபோன் பண்ணினயே! ஒரு மாமா ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு வந்தாரே! அந்தப் பெண் உதட்டிலே ரொம்ப ரொம்பச் சிவப்பு தடவிக் கொண்டிருந்ததே!" என்றாள்.

மந்திரிக்கு ஞாபகம் வந்தது. அவள் ஒரு நண்பரின் பெண். அளவுக்கு மீறி உதட்டுச் சாயம் தடவிக் கொண்டிருந்ததை அவரும் கவனித்திருந்தார்.

"அந்தப் பெண்ணுக்கு வைத்தியக் கல்லூரியில் இடம் கொடுக்கும்படி யாருக்கோ சொல்லிக்கொண்டிருந்தாயே!"

"ஆமாம்!" என்றார்.

"அது மாதிரி ராஜுவையும் சேர்த்துக் கொள்ளச் சொல்லி டெலிபோன் பண்ணு!"

மந்திரி இதைக் கேட்டு விழித்தார்.

"நான் பல்டு ஸ்கூலில் சேர்த்திருக்கிறேன். அவனுக்கு இடமில்லையென்று மிஸ் சொல்லிவிட்டாள்" என்று கூறி அழுதாள்.

"அழாதே! நான் அவனை உன் பள்ளிக்கூடத்தில் உன் கிளாஸில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறியவர் பக்கத்தில் இருந்த டெலிபோனை எடுத்து யாரையோ கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னார்.

தன் அப்பா பேசுவதைக் கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்த மாலினியின் முகத்தில் சந்தோஷம் பொங்கியது.

"கதவைத் திற அம்மா!" என்றார்.

குழந்தை கதவைத் திறக்கச் சென்ற போது மந்திரி, "கொஞ்சம் இரு. எல்லாரையும் கூப்பிடுகிறேன்" என்றார். தன் பெண் செய்யும் திறப்பு விழாவுக்கு நல்ல கூட்டம் இருக்க வேண்டும் என்பது அவருக்கு. எல்லா அதிகாரிகளும் ஓடோடியும் வந்தார்கள்.

சின்னஞ் சிறு பள்ளியில் — உனக்கொரு
சிங்காரப் பெஞ்சுமிட்டு
இன்னக் கனியளித்துப் — பால பாடம்
செப்புவேன் வா ராஜு

என்று பாடிக் கொண்டே குழந்தை மாலினி கதவின் தாழ்ப்பாளைத் திறந்தாள். எல்லோரும் கரகோஷம் செய்தார்கள்.

மாதங்கி கதையைக் கூறி முடித்த சமயம் கியூ வரிசையில் ஒரு சலசலப்புச் சத்தம் கேட்டது. எல்லோரும் பள்ளிக்கூடத்தின் வராந்தாவில் வந்து நின்ற அந்த ஆரம்பப் பாடசாலை தலைமை உபாத்தியாயரை ஆச்சரியத்துடன் பார்த்தார்.

அவரது இடது தோளின் மீது ஒரு சிறுவனும் வலது தோளின் மீது ஒரு சிறுமியும் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். இடுப்பிலும் ஒவ்வொரு பக்கத்திலும் இரண்டு சிறுவர்கள் இருந்தார்கள். அவர் கியூ வரிசையில் இருந்தவர்களைப் பார்த்துப் பேசினார்:

"அன்பார்ந்த சிறுவர், சிறுமிகளின் பெற்றோர்களே! இந்தப் பள்ளிக்கூடத்தில் இடம் இருக்கும்வரை குழந்தைகளைச் சேர்த்துக் கொண்டிருக்கிறேன். என்மீதுள்ள நான்கு குழந்தைகளையும் இப்படியே தூக்கி வைத்துக் கொண்டுதான் பாடம் சொல்லிக் கொடுத்தாக வேண்டும். ஏனென்றால் வேறு இடம் கிடையாது. இன்னும் ஒரே ஒரு குழந்தையைத்தான் சேர்த்துக் கொள்ள முடியும். அதை என் தலையில் தூக்கி வைத்துக் கொள்வதற்காகக் கல்வி இலாகாவின் டைரக்டரை அனுமதி கேட்டிருக்கிறேன். அனுமதி வந்ததும் குழந்தைகளின் பெயரைச் சீட்டில் எழுதிப் போட்டுக் குலுக்கி எடுக்கச் சொல்கிறேன். எந்தக் குழந்தையின் பெயர் வருகிறதோ அதைச் சேர்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் பள்ளிக்கூடத்துக்குள் போய்விட்டார்.

மாதங்கியும், வசந்தனும், மிக அருகிலிருந்த பஸ் ஸ்டாண்டுக்குச் சென்றார்கள்.

"நீங்கள் ஏதாவது கதை சொல்லுங்களேன்" என்று மாதங்கி கேட்டுக்கொண்டாள். அவன் சொல்லலுற்றான்:

"ஒரே ஒரு ஊரில் குசேலசாமி என்று ஒருவர் இருந்தார். அவர் பிரம்மச்சாரி. அவர் தமக்குச் சொந்தமான வீட்டின் ஒரு சிறிய பகுதியில் வசித்துக் கொண்டிருந்தார். பாக்கி இடத்தை வாடகைக்கு விட்டிருந்தார். அவர் தாமே சமைத்துச் சாப்பிட்டுக்கொண்டு காலத்தைக் கழித்து வந்தார். ஒருநாள் ஒரு வாலிபன் வந்தான். குசேலசாமி அவனை "இவன் என் பிள்ளை பீஷ்மன்" என்று அறிமுகப்படுத்தி வீட்டில் குடியிருந்தவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்...."

வசந்தன் இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தபோது திடீரென்று எதிர்ப்பக்கத்திலிருந்து இரண்டு பஸ்கள் வந்து நின்றன. அவர்கள் தங்கள், தங்கள் பஸ்ஸில் ஏறிக் கொண்டார்கள்.

கல்லூரி மாணவர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

மாணவர்கள் அரசியலில் பங்குபற்றலாகாது என்னும்போது, நேரடி நடவடிக்கைகளில் இறங்கவேண்டியதில்லை என்றுதான் பொருள் கொள்ள வேண்டுமேயன்றி ஜீவாதாரமானதும் அதி முக்கியமானதுமான விஷயங்கள் குறித்து அவர்கள் யோசித்துப் பாராமலே இருக்க வேண்டுமென்பதல்ல அர்த்தம்.

நாட்டு மக்களை அறிஞர்கள்தான் நடாத்திச் செல்கிறார்கள் என்பது உண்மையானாலும், எதிர்காலத்தில், இன்று கல்லூரி களில் படித்துவரும் மாணவர்களே உயர் பதவிகளிலும் உத்தி யோகங்களிலும் அமர்ந்து தேச நலனுக்கு உழைக்கப் போகி றார்கள் என்றாகிறது. அப்படிப்பட்டவர்கள் பாரத நாட்டி னின் எதிர்காலத்தை வெகுவாகப் பாதிக்கும் அத்தியாவசியப் பிரச்னைகள் குறித்துச் சிந்திக்காமல் வாளாவிருப்பதற்கில்லை.

ஆங்கிலம் ஏன் வேண்டும் என்ற கேள்விக்கு, அயல் நாட்டுத் தொடர்புக்காக; விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்காக; ஆட்சி மொழி விஷயத்தில் சிக்கலையும், சர்ச்சைகளையும் தவிர்ப்பதற் காக; அம்மொழியின் சிறப்புக்காகவே என்றெல்லாம் பலதரப் பட்ட தலைப்புகளில் பதில்களைத் தரலாம்.

மேற் குறிப்பிட்டவைவற்றில் ஏதேனும் ஒன்றையோ அல்லது அவற்றைவிட அதிமுக்கியமான காரணமென உங்களுக்குத் தோன்றும் வேறு ஒரு தலைப்பையோ தேர்ந்தெடுத்துக் கொள் ளுங்கள். அதைக் குறித்துக் கல்வியில் ஒரு பக்கத்துக்குள் அடங்குகிற மாதிரி ரசமாக ஒரு கடிதம் எழுதி அனுப்புங்கள். தபால் உறையின் மீது **ஆங்கிலம் ஏன் வேண்டும்?** என்று குறிப்பிடுவது அவசியம்.

மேற்கோள் காட்டுவது, உங்கள் நண்பர்களுக்கிடையில் நடந்த சுவையான விவாதங்கள், ஆங்கில மொழி குறித்து உலக அறிஞர்களின் கருத்துக்கள், அம்மொழியின் சிறப்பை உணர்த்து வதே போல் நிகழ்ந்திருக்கக்கூடிய சம்பவங்கள் போன்றவை யெல்லாம் உங்கள் கடிதத்துக்கு மெருகேற்றும்.

கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கல்கி,

கீழ்ப்பாக்கம், சென்னை -10


பென் பெல்லா

இரண்டாவது உலக யுத்தம் தீவிர கட்டத்தை அடைந்திருந்த தருணம். பிரெஞ்சு சுதந்திரப் படை இத்தாலியில் போரிட்டுக் கொண்டிருந்தது. அக்காலத்தில் அல்ஜீரியா பிரெஞ்சு ஆதிக்கத்துக்குட்பட்டிருந்ததால் பிரெஞ்சு சுதந்திரப் படையில் பல அல்ஜீரியர்களும் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் பெல்லா. அசாதாரணமான துணிவும் திறமையும் காண்பித்த பெல்லா ஒரு சிறு பட்டாளத்தின் தலைவராக ஆனார். அவரது சாகசங்களை மெச்சி பிரெஞ்சு தளபதி சார்ல்ஸ் டிகால் அவருக்கு ஒரு மெடலை அளித்தார்.

எத்தனையோ வீரப் பதக்கங்களை இம்மாதிரியான பலப்பலருக்கு விநியோகம் செய்துள்ள அவர் இந்நிகழ்ச்சியையும் ஓர் அன்றாடச் சம்பவமாகக் கருதி மறந்துவிட்டார். இருபது வருஷங்களுக்குப் பிறகு அதே பெல்லா சுதந்திர அல்ஜீரியாவின் முடிசூடா மன்னன் என்கிற முறையில் பிரெஞ்சு ஜனாதிபதியான தம்முடன் சரிநிகர் சமானமாகப் பழகி இரு நாடுகளுக்கும் பொதுவான பிரச்னைகளை ஆராய முற்படுவார் என்று அவர் அன்று கனவுகூடக் கண்டிருக்க மாட்டார். எனினும் உண்மையில் அவ்வாறு தான் நடந்தது!

ஓர் ஏழைக் குடியானவர் குடும்பத்தில் பிறந்தவர் பென்பெல்லா. உலக யுத்தம் முடிந்த சிறிது காலத்தில் அவர் அல்ஜீரியா பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற உழைக்கத் தீர்மானித்தார். ரகசியத் திட்டங்களை வகுக்கத் தொடங்கினார். 1954ல் பொறுக்கி எடுக்கப்பட்ட சில நண்பர்களுடன் அல்ஜீரியாவின் தேசிய விடுதலை இயக்கத்தை (FLN) தோற்றுவித்தார். ஏராளமான ஆயுதங்களைக் கள்ளத்தனமாகத் தருவித்து மக்களிடையே விநியோகித்தார். கொள்ளையடிப்பதற்குக் கூட அஞ்சாமல் இயக்கத்துக்குப் பொருள் தேடினார். சிறைச் சாலையிலிருந்து தப்பி ஓடினார். புரட்சித் தலைவராக இருந்து வீர சாகஸங்கள் புரிந்த இந்தத் தினங்கள் அவரது வாழ்க்கைச் சரித்திரத்தின் ஒரு சுவையான பகுதி. அந்நாட்களில் ''ஒவ்வொரு அல்ஜீரியனும் ஒரு புரட்சியாளன் தான், அவனிடம் ஒரு துப்பாக்கி மட்டும் கிடைத்து விடுமேயானால்!'' என்பார் பென்பெல்லா. பிரெஞ்சு அரசினருக்கும் அல்ஜீரியப் புரட்சியாளருக்கும் இடையில் ஏழு வருஷங்களுக்குப் பயங்கரமான, கோரமான ரத்தக்களறியான யுத்தம் நடந்தது.

1962ல் ஆட்சிப் பொறுப்பை அல்ஜீரிய மக்களிடமே விட்டுவிட்டுப் பலதரப்பட்ட



● 1963 இறுதியில் டேலிக் பத்திரிகையொன்றில் வெளியான கார்ட்டூன். இன்றைய இந்தியாவுக்கு ஏற்ப இதே இன்னொரு சித்திரமும் சேர்த்துக் கொள்ளலாமல்லவா?

பிரெஞ்சு அதிகாரிகளும் கப்பலேறினர். அப்போது உள்நாட்டில் உண்டான தலைமைப் பதவிப் போட்டியில் பென்பெல்லாவுக்குப் பக்கபலமாக நின்று அவர் பிரதமராக உதவியவர் பௌமெடியின்.

புரட்சித் தலைவராக இருந்து போராடுவதற்கும் ஆட்சிப் பொறுப்பேற்று நிர்வாகம் செய்வதற்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருப்பதை வெகு விரைவில் உணர்ந்தார் பென்பெல்லா. நாடு விடுதலை பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் அவருடன் இணை சேர்ந்திருந்த பலர் இன்று பகைவரானார்கள். அல்ஜீரியப் புரட்சியின் போது அவரோடு தோளோடு தோள் நின்றவர்கள் இன்று எதிர்த்தார்கள். அன்று அவரால் தூண்டிவிடப்பட்ட பயங்கர சக்திகள் இன்று அவரையே விழுங்கிவிடும் போலிருந்தன. மூன்று நாள் உள்நாட்டுக் கலகத்தில் இரண்டாயிரம் பேர் உயிரிழந்தார்கள். பென்பெல்லா பிரெஞ்சு ஆட்சியைக் கவிழ்க்கக் கற்றுத் தந்த முறையையே இவர்கள் இன்று இவருக்கெதிராகவே கையாளத் தொடங்கினார்கள். மலைப் பகுதிகளில் ஒளிந்திருந்து கொரில்லாப் போர் முறையில் ஈடுபட்டனர். மலைவாசிகளான ஒரு முரட்டுப் பிரிவினர் எதற்கும் யாருக்கும் அஞ்சாமல் சுதந்திரமாக வாழ விரும்புபவர்கள். பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்துப் பென்பெல்லாவினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட இவர்களை இன்று அவராலேயே கட்டுப்படுத்த இயலவில்லை. திடீரென்று தாக்குவதும் திரும்பிப் பார்த்தால் மாயமாக மறைவதுமாக இருந்தார்கள். கொலைகளும் கொள்ளைகளும் தலை விரித்தாடின. இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதென்றால் அது பிரெஞ்சு அரசினரை எதிர்த்து நடத்திய புரட்சிப் போரைப் போலவே நீண்டுகொண்டே போகும் எனக் கண்டார் பென்பெல்லா.

இந்நிலையில் பென்பெல்லாவின் தலைமைப் பதவி ஆட்டம் கண்டு அவர் கவிழாதிருக்க உறுதுணையாக இருந்தவர் பௌமெடியின். அறுபது ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களைக் கொண்ட அல்ஜீரிய ராணுவத்தின் தலைவர், பாதுகாப்பு மந்திரி. இவரையும் இவரைப் பக்தி கலந்த மதிப்புடன் நோக்கும் இவரது ராணுவத்தையும் நம்பிக் கவலையற்று இருந்தார் பென் பெல்லா.

ஏராளமான பிரெஞ்சு மக்கள் தங்கள் தாய் நாட்டுக்குச் சுதந்திர அல்ஜீரியாவிலிருந்து தப்பி ஓடவே பென் பெல்லாவின் நாட்டில் டாக்டர்கள், அரசாங்க உயர்தர அதிகாரிகள், உபாத்தியாயர்கள், பொறி இயல் நிபுணர்கள் ஆகியோருக்குக் கடும் பஞ்சம் வந்து விட்டது. எல்லாச் சொத்துக்களையும் இயைந்த மட்டில் லாபம் என்று விற்றுவிட்டுச் சென்ற பிரெஞ்சு வியாபாரத் தொழில் அதிபர்களிடமிருந்து சல்லிசான விலைக்கு அல்ஜீரியர்களால் வாங்கப்பட்ட சினிமா, ஓட்டல்கள் முதலானவற்றைத் தேசிய மயமாக்கினார் பென்பெல்லா. இவ்விதமாக மக்களைத் தம் வயப்படுத்தப் பல யுக்திகளைக் கையாண்டார். பிரெஞ்சுக்காரர் விட்டுச் சென்ற பெரும் பண்ணைகளை அவர்களுக்குக் கீழ் ஊழியம் செய்த அல்ஜீரியக் குடியானவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டனர். குடிசைகளை விட்டுக் கிளம்பிப் பண்ணையார் காலிசெய்து போன மாளிகைகளில் குடியேறினர். பெல்லா இவர்கள்மீது நடவடிக்கை எடுக்காது சட்டப்படியே நிலத்தை அவர்களுடைய உடைமையாக்கினார். பண்ணை சிறு சிறு துண்டுகளாகப் பிளவுபடாமல் அனைவரும் கூட்டாகப் பயிர் செய்யச் சொன்னார். அங்கு நிர்வாகத்துக்கு அரசாங்க அதிகாரிகளை நியமித்தார். பத்திரிகைகளையும் இதர பிரெஞ்சு உடைமைகளையும் படிப்படியாகத் தேசியமயமாக்கினார். 1962ல் சுதந்திரம் பெறுவதற்கான ஒப்பந்தத்தின் அடிப்படையான ஷரத்துக்களின் கதி என்ன ஆவது என்று வினவப்பட்டபோது "அந்த உடன்படிக்கை என்ன குரானா?" என்று கேட்டார் பெல்லா.

இருப்பினும் நாளாவட்டத்தில் பிரெஞ்சு அரசாங்கம் மனச்சாட்சியால் உந்தப்பட்டுப் பழைய பகைமையை மறந்து அல்ஜீரியாவுக்குக் கடனும் பல்வேறு துறை நிபுணர்களையும் கொடுத்து உதவியது. அப்படிப் பெற்ற கடன் தொகையில் பெரும் பகுதியை பென்பெல்லா தேசிய மயமாக்கப்பட்ட பிரெஞ்சு உடைமைகளுக்கு நஷ்டஈட்டுத் தொகையாக உடனுக்குடன் திருப்பித் தர வேண்டியிருந்தது! அமெரிக்கரும், ரஷ்யரும் பொருளாதாரம், உணவு, தொழில் உற்பத்தி ஆகியவற்றுக்கு உதவினார்கள்.

அல்ஜீரியாவின் முதல் சுதந்திர தின விழாவின்போது, "நான் சொல்வதை நம்புங்கள்! ஆசை காட்டி வரவேற்கும் அதிகார பலம் என்னும் மோகினியை வெறுத்து ஒதுக்குவது என்பது எளிதான காரியமல்ல!" என்றார் பென்பெல்லா. அந்தக் கடினமான காரியத்தைத் தாம் செய்துகொண்டிருப்பதாக மக்களுக்கு அறிவுறுத்தும் வகையில். ஆனால் அந்த மாயக்கு மோகினிக்கு அவர் அடிமையாகிவிட்டது வெகு சீக்கிரம் தெளிவாயிற்று. "சர்வாதிகாரத்தை ஒப்புக்கொள்ளாத நாடுகளின் முன்னணியில் நிற்பது அல்ஜீரியா" என்று அழுத்தக் கூறிய படியே தம்மைத் தாமே ஜனாதிபதியாகப் பிரகடனப்படுத்திக் கொண்டு புதுப் புது அதிகாரங்களைத் தமக்குத் தாமே அளித்துக் கொண்டார் பென்பெல்லா. எதிர்ப்பில்லாத வகையில் தாம் ஜனாதிபதியாக 'ஏகமனதாக' மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வழி வகுத்துக் கொண்டார். மாற்று அபேட்சக



அனுபவ முத்துக்கள்



டாக் ஹாமர்ஷீல்ட்

பிரகாசமான வெள்ளைத் துணியில் சிறு கறைகூட கண்ணை உறுத்தும். உயர்நிலையிலிருக்குங்கால், ஒரு கறை ஆட்டம் கூடச் சாவாக முடியலாம்.

- ஒரு வெற்றிகரமான பொய் என்பது இரட்டைப் பொய்க்குச் சமம். திருத்தப்பட வேண்டிய தவறு உண்மையைக் காட்டிலும் அதிக பளுவானது.

நாம் தெய்வத்தை நம்ப மறுக்கும்போது தெய்வம் செத்துவிடுவதில்லை. ஆனால் காரண காரியத்துக்கு அப்பாற்பட்ட ஓர் உள்ளொளி நமது உணர்விலிருந்து நீங்கும்போதுதான் நாம் நிஜமாகச் செத்துவிடுகிறோம்.

ருக்கே இடம் கொடாதபோது எல்லா ஓட்டுக்களும் இவருக்குத்தானே கிடைக்கும்!

அல்ஜீரியாவின் சுதந்திர சரித்திரத்தில் இடம் பெறக் கூடிய, ஆனால் இன்று தமக்கு வேண்டாதவர்களான, போட்டியாகக் கிளம்பக்கூடியவர்களை யெல்லாம் ஒவ்வொருவராகச் சிறைப்படுத்தியோ, பதவி நீக்கம் செய்தோ அல்லது தாங்களாகவே ராஜிநாமாக் கொடுத்து விட்டுச் செல்லுமாறு செய்தோ ஒதுக்கித் தள்ளினார்.

இதற்கிடையில் 'சுதந்திரமா? அது தேசியக் கொடியைத் தவிர மக்களுக்கு வேறு என்னத்தைக் கொணர்ந்திருக்கிறது?' என்று சிலர் கேட்கத் தொடங்கினார்கள். சுதந்திரத்துக்கு முன் புரட்சியாளர்கள் பதுங்கி யிருந்த இடம் என்ற காரணத்தால் மலைகளுக்கிடையில் இருந்த பல கிராமங்கள் பிரெஞ்சு விமானங்களின் குண்டு வீச்சுக்கு இலக்காகி இருந்தன. அங்கு மக்கள் மலைக் குகைகளில் வாழ்ந்து வந்தார்கள். ஆடு மாடுகள் கூட இன்றிக் காய்கறிகளையும் சில சமயங்களில் புல்லையும் கூட உண்டு ஜீவித்தார்கள். சுதந்திரம் வந்தால் பாலாறு ஓடும் என்றெண்ணியவர்களின் நிலைகளில் கணிசமான மாறுதல் ஏதும் ஏற்படவில்லை. சோஷலிஸப் போக்கு காரணமாகத் தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் உற்பத்தி படிப்படியாகக் குறைந்து வந்தது. சென்ற வருஷம் பென்பெல்லாவைத் தீர்த்துக் கட்டக் கொலைமுயற்சிகூட நடந்தது.

பென்பெல்லா உள்நாட்டுக் குழப்பங்கள், பிரச்னைகள், துயரங்களிலிருந்து மக்களின் கவனத்தைத் திருப்ப மொராக்கோவுடன் நடந்த எல்லைப் போரைப் பயன்படுத்திக் கொண்டார். பிரெஞ்சுக் காலனிகளாக மொராக்கோ, அல்ஜீரியா இரண்டுமே இருந்த நாட்களில் அவற்றின் எல்லைகளைத் திட்டவட்டமாக வகுப்பதில் பிரெஞ்சு அரசினர் அக்கறை காட்டவில்லை; அதனை அவசியமென்றும் கருதவில்லை. '56ல் மொராக்கோவும் '62ல் அல்ஜீரியாவும் விடுதலை பெற்ற பின் 600 மைல் நீளமுள்ள எல்லை பற்றிச் சர்ச்சையும் யுத்தமும் நிகழ்ந்தன. இந்த எல்லைப் பகுதி பாலைவனம்தான் என்றாலும் அங்கு விலை மதிப்பற்ற இரும்பும், நிலக்கரியும், பிற கனிப் பொருள்களும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தனவே!

அல்ஜியர்ஸில் நடைபெறவிருந்த ஆசிய ஆப்பிரிக்க மகாநாடு காரணமாக உலக நோக்கில் தமது மதிப்பு மிகவும் உயர்வதை மிதவாதிகளான சில நாடுகள் விரும்பாதிருக்கலாம் என்று கருதினார் பென்பெல்லா. அந்நாடுகளை ஓரளவு திருப்திப் படுத்த சமீபத்தில் மொரோக்கோ சென்று பகைமையை மறப்பதுபோல் காட்டி அரசர் ஹஸனுடன் அளவளாவித் திரும்பினார். மொராக்கோ அரசர் ஹஸனுக்கு மிதவாத ஆசிய ஆப்பிரிக்க நாடுகளிடம் செல்வாக்கு உண்டு என்பதனை உணர்ந்திருந்தார் பென்பெல்லா. மகாநாடு தொடங்கவிருக்கும் தினத்துக்கு முன்னும் தாம் ஏதோ ஒரு புரட்சிக்காரன் மட்டுமல்ல, ஒரு ராஜதந்திரியும் கூட என்ற எண்ணம் பரவ வேண்டும் என்ற நோக்கமும் இருந்திருக்கலாம். எனினும் இந்தச் சமயோசிதமான நடவடிக்கையினால் கூடப் பலன் ஏதும் விளைந்து விடவில்லை.

இதுவரை மௌனமாக ஒரு நிழல்போல் பென்பெல்லாவுடன் இருந்து அவரது வலக் கரமாக விளங்கிய பௌமெடியன் சென்ற மாதம் 19ந் தேதி நம்பகமான தமது ராணுவத்தின் துணையுடன் ஆட்சியைக் கைப்பற்றினார். அரசியல் சச்சரவுகளில் அதிகம் ஈடுபடாமலும் 'வார்த்தைகளை உதிர விடாமலும் இருந்து வந்த பௌமெடியன் பற்றி உலகுக்கு அதிகமாக ஏதும் இன்னும் தெரியவரவில்லை. பெல்லாவின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்து ஆட்சியைக் கைப்பற்றியுள்ள அவர் பீகிங்கிலும் மாஸ்கோவிலும் பயிற்சி பெற்றவர் என்கிறார்கள் சிலர். கம்யூனிஸம் அவருக்குக் கட்டோடு பிடிக்காது என்கிறார்கள் வேறு சிலர்.

45 வயதான பிரம்மசாரி பென்பெல்லாவுக்குத் தூக்குத் தண்டனை வேண்டாம் என்று கோரிக்கைகளும், பென்பெல்லாவுக்கு ஜே என்ற கோஷங்களும் கூட இன்றும் அல்ஜியர்ஸ் வீதிகளிலேயே கேட்கின்றன.

''வாணலியிலிருந்து தப்பி நெருப்பில் விழுந்த கதையாக'' என்று ஆங்கிலப் பழமொழி உண்டு. அல்ஜீரியாவின் கதி அவ்விதம் ஆகாமல் ஆண்டவன் காத்தருள்வானாக!

அட்டைப்படக் கதை

விசிறித் தகட்டில் மோதுண்டு உயிர்த்தெழும் போதுகூட வெப்ப அலையாய்ச் சுடும் தன்மை மறந்து உல்லாசப் பிரயாணம் புறப்பட்டாற்போல் மரக் கிளைகளையும் பூங்கொடிகளையும் சேலைத் தலைப்புக்களையும் அசைத்து விளையாடுகிறது காற்று. கோடை வறட்சியில் ஏங்கித் தவிக்கும் ஆற்று மணலைக் குளிர்வித்து முழுக் காட்ட வரும் புதுவெள்ளத்துக்குக் கட்டியம் கூறுகிறதோ? கோவைக்குக் கிளம்ப விருக்கும் எக்ஸ்பிரஸ் பஸ்ஸின் ஓரத்து இருக்கையொன்றில் அமர்ந்திருக்கும் வசுமதிக்கு அந்தக் காற்று, எங்கிருந்தோ மலைச் சாரலின் பன்னீர்த் துளிகளைச் சுமந்து வந்து விசிறி அடிப்பது போல் பிரமையாகக்கூட இருக்கிறது.

மலையிலே வளர்ந்த மங்கை அவள். மலைச் சரிவுகளெல்லாம் திருமணக் கோலம் பூண்டு, புதுமை கொழிக்கும் அந்நாட்களில் வானம் பன்னீர் தெளிப்பது போல் இளம் வெய்யிலில் பூந்தூறல்களைச் சிதறவிடுமே?



''வசு, ஒரே யோசனையாக இருக்கிறாயே?''

எங்கோ மிதந்த பார்வையைத் திருப்பி அவன் முகத்துக்கு நேராகக் கீழே நிற்கும் கணவனை — பிரபாகரனைப் பார்க்கிறாள் அவள்.

''.....ஒன்றுமில்லையே?''

''.....பின்னே, வசு, நீ எதற்காகவோ கவலைப்படுகிறாயே?''

''அதோ, அந்த 'முறுக்குக் காரனைக் கூப்பிடுங்கள்.''


அத்தகைய பண்டங்களைக் காணவே பிடிக்காது என்பதைப் பிஞ்சு வயதிலேயே அறிந்திருந்தவள் வசுமதி. மலைகள் சூழ்ந்த அந்தப் பசிய சோலை-தோட்டங்களிடையே வளர்ந்த காலையில் விமானம் போன்ற காரில் சென்று பழகிய அவள் அந்தத் தந்தையின் விருப்பத்துக்கு மாறாக ஒருநாளும் நடந்து கொண்டதில்லை. பிரபாகரன் பத்து முறுக்குகளை வாங்கிப் பொட்டலம் கட்டிக் கொண்டு வந்து அவளிடம் கொடுக்கிறான். அவள் அதை வாங்கிக் காலடியில் உள்ள துணிப் பையில் வைத்துக் கொள்கிறாள்.

''வெட்டிவிட்டுச் சாப்பிடாமல் வைத்துக் கொள்கிறாயே? ஊருக்குக் கொண்டு போகவா?'' வசு மறுமொழி கூறாமல் எட்டி நிற்கும் வேறு பஸ்ஸைப் பார்க்கிறாள்.

''....பழைய நாட்களில் உன்னைப் பார்த்தவர்களால் இப்போது உன்னை அடையாளம் கண்டு கொள்ளக்கூட முடியாமல் வெளுத்து அரை உடலாகிவிட்டாய் வசு...''

''நீங்களும் கூடத்தான்'' என்று முணுமுணுக்கின்றன அவள் இதழ்கள். குண்டு முகமும் சுருள் முடியும் அவன் தோற்றத்தை இன்னமும் கவர்ச்சியாகவே வைத்திருந்தாலும், பழைய பிரபாகரனா அவன்? அவர்கள் வீட்டில்

ராஜம் கிருஷ்ணன்



ஏதோ ஒரு பாரத்தை இறக்கி வைக்கப் போகும் உணர்வுடன் அவன் முறுக்கு வியாபாரம் செய்யும் பையனிடம் போகிறான். பிசறிய என் தெரியும் அரிசி மா முறுக்கு. 'புரபுரவென்றிருப்பேன்' என்று பார்க்கையிலேயே நாவில் நீரூறச் செய்கிறது. அந்த நாட்களில் குழந்தைப் பருவத்தில், சாலை முக்கடைகளிலோ, உதகைச் சந்தைப் பக்கமோ இந்தத் தின்பண்டத்தைக் காணும் போது, வாங்கித் தின்ன ஆசை ஊறியதுண்டு. ஆனால் தேயிலைத் தோட்டத்துக்கும் கிழங்கு வயல்களுக்கும் அதிபராக இருந்த தந்தைக்கு

ஸ்நோடென்ஸ் பங்களாக் காரோட்டியாக இருந்த போது இப்படியா இருந்தான்? கழுத்துக்கு மேல் மடக்கி விடப்பட்ட சாக்லெட்வண்ண முழுக் கம்பளிச் சட்டையும், பழுப்பு வண்ண நிஜாருமாக அவனைக் கண்டிருந்தவர்களும் இப்போது அடையாளம் கண்டு கொள்ள முடியாது. ஒரு வெள்ளைச் சட்டை, வெள்ளை மல்லிட்ட வேட்டி, செருப்புக்கூட இல்லை. சென்ற வாரம் எங்கோ தவற விட்டு விட்டான். புதியது வாங்கவில்லை.

''பஸ் ஸ்டாப்பில் கண்டிப்பாக மாமன் வந்திருப்பார், அல்லது கோபியேனும்.

திரும்பி வரும்போது இப்போதைய அடையாளம் இல்லாத பழைய வகையாக...'' ஜன்னல் சட்டத்தில் நெருங்கி முகத்தோடு முகம் நெருங்கி இரகசியமாகச் சொல்லுகிறான்.

பஸ்ஸில் யார் யாரோ இடம் பிடித்துக் கொள்கின்றனர். காதறுந்ததொரு கித்தான் பையைப் பிடித்துக் கொண்டு இரண்டு சிறுமிகள் அவளைக் கடந்து பின்புறம் செல்கின்றனர்.

''அங்கேதான் உட்காருங்க!'' என்று கண்டக்டர் வெளியேயிருந்து கூவுகையில், அந்த அரங்கில் ஒரு கார் வந்து நிற்கிறது. ஒரு இளைஞனும் யுவதியும் இறங்குகின்றனர். தோல் பெட்டி, படுக்கை, கைப்பை முதலியவற்றை அதே பஸ்ஸுக்குத்தான் வண்டியோட்டி எடுத்து வருகிறான். நாகரிகமான உடையும் கறுப்புக் கண்ணாடியுமாகக் காட்சியளிக்கும் அந்த இளைஞன் கண்டக்டரிடம் இடத்துக்குச் சொல்லிவிட்டு ஹோட்டலுக்குள் அவசரமாக நுழைகையில் வசு அவனைப் பார்த்துவிடுகிறாள். தூக்கி வாரிப் போடுவது போல் இருக்கிறது. 'உன்னைக் கண்டுகொள்ள முடியாது' என்று பிரபாகரன் சற்று முன்புகூடக் கூறியிருக்கிறான். என்றாலும் நெஞ்சிலே ஒரு துடிப்பு. கண்டக்டர் உள்ளே வந்து ஆசனங்களையும் ஆட்களையும் நோட்டமிடுகிறார். பின்புறமிருந்த சோதரச் சிறுமிகளில் ஒருத்தியைப்

மருந்துக் கம்பெனிப் பிரதிநிதியான அவன் படிச் செலவை மிச்சம் செய்வதன் நோக்கமாகவே, எந்தக் காலத்திலோ அவன் தந்தை தலைமுறை நட்பை அறிவுறுத்திக் கொண்டு அவர்கள் வீட்டில் வந்து தங்குவான்.

இப்போது....

கண்டக்டர் குழலை அழுத்திவிடுகிறார். புகை பிடிப்பவர்கள் கரகரவென்று பஸ்ஸுக்குள் ஏறுகின்றனர். வண்டி கிளம்புகிறது.

வசு பிரபாகரனைப் பார்க்கிறாள். கனிவும் ஏக்கமும் நிறைந்ததொரு பார்வையுடன் அங்கிருந்தபடியே விடை கொடுக்கிறான். அறிமுகமானவர்களுக்கு முன்பு அவள் தன் மனைவி என்று பாராட்டத் துணியவில்லையோ?

பஸ் ஆடாமல் அசையாமல் நிதானமாகவே செல்கிறது. நகரின் எல்லையை விட்டால் கண்களுக்கினிய காட்சிகள். பசிய நெடு வயல்கள்; இரண்டு செறிந்த தென்னந் தோப்புகள். அகண்ட காவிரித் தாயை இரவும் பகலுமாய்க் கண் விழித்துக் காவல் புரியும் பணியில் காலம் காலமாய் ஈடுபட்டிருக்கும் உயர்ந்த கரை மேட்டை அணைந்தாற்போல் செல்லும் சாலையில் கண்ணுக்கினிய காட்சிகளுக்குப் பஞ்சமேது?

முன் ஆசனத்தில் உள்ள பிரசன்னா தம்பதியின் தலைகூடத் தெரியவில்லை. ஆனால் பேச்சொலியில் சிந்திய பதங்கள் செவிகளில் விழுகின்றன. அவர்கள் ..... புதுத் தம்பதியாய்...

திகிவின் திரை

பிரித்துப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, வசுமதியிடம் ''எழுந்திருந்து பின்னே உட்காரம்மா!'' என்று பணிக்கிறார்.

அந்த இளைஞன், பிரசன்னாதான், யுவதியுடன் இழைய நடந்து வருகிறான். கண்ணாடிச் சட்டைக்குள் கோல்டுப்ளேக் சிகரெட் தெரிகிறது. யுவதியின் கழுத்துக் கொள்ளாத தங்கச் சங்கிலிகள்; கல்லிழைத்த கண்டசரம் — தாலிச் சரடு புதுமை மாறாமல் பளிச்சென்று அரக்கும் மஞ்சளும் கலந்ததொரு வண்ணத்தில் படிந்திருக்கிறது. முழங்கை வரையிலும் தங்கமும், பச்சை, சிவப்பு மற்றும் பின்னும் கற்களுமாய் இழைக்கப் பெற்ற வளையல்கள் — பழைமையையும் விடமனமில்லை; புதுமையையும் தழுவிக் கொண்டிருக்கிறாள். இரட்டைப் பின்னல்கள்; குதியுயர்ந்த காலணிகள்.

அவள் காலிசெய்த ஓரத்தில் — அவளுக்கு முன் வரிசையில் அந்தத் தம்பதி இடம் பெறுகின்றனர்.

வசு கவனித்திருக்கவில்லை. பிரபாகரன் எட்டிப்போய் அலுவலகத்தின் வராந்தாக் கம்பத்தை ஒட்டி நிற்கிறான்.

பிரசன்னாவைப் பார்த்துவிட்டுத்தான் அப்படிப் போனாரோ? அவர்களை முன்பு அறிந்தவர்களுக்கெல்லாம் தற்போதைய நிலை எவ்வளவு அதிர்ச்சிகரமானது!

பிரசன்னா, எத்தனை நாட்கள் ஸ்நோ-டௌன் இல்லத்தில் வந்து தங்கியிருக்கிறான்.

மலைவாசத்துக்குச் செல்கின்றனரோ? அவன் மலையேறும் வழியையும், 'ஸ்நோடௌன்' செல்லும் பாதையையும் அல்லவோ அவளுக்கு விவரிக்கிறான்?

''தங்கச்சி!'' என்ற குரல் பின்புறமிருந்து வருகிறது.

''பத்திரமாக இருக்கிறேனக்கா!'' என்று அருகிலிருக்கும் சிறுமி பதில் கொடுக்கிறாள்.

''ஓரத்திலிருந்து கை நீட்டாதே.''

அந்தச் சிறுமியின் குரலில் மூப்பது வயதுத் தாய்க்குரிய பரிவு தொனிக்கிறது.

வசுவுக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

''நீங்கள் இரண்டு பேரும் தனியாகப் போகிறீர்களா?''

''ஆமாம்'' என்று தலையை ஆட்டுகிறாள் சிறுமி.

மஞ்சள் முரட்டுத் துணியில் பெரிய பெரிய பூக்கள் அச்சிட்ட பாவாடை, அதே துணியில் சட்டை. இரட்டைப் பின்னல் பின்னிக் காதுகளுக்கு மேல் பூவாகச் சிவப்பு ரிப்பன் தெரிய முடித்திருக்கிறாள். செவிகளில் பித்தளை என்று பறையடிக்கும் மலிவு வளையங்கள். செழுமையில்லாத செம்பட்டை முடியும், தேய்ந்த கன்னங்களும் மேல் சட்டைக்குக் கீழ் குச்சியாகத் தெரியும் கைகளும் ஊட்டமான உணவுக்கே பஞ்சமான இடத்திலே வளரும் குழந்தை என்பதை அறிவிக்கின்றன.

''உன் பேரென்ன?''

நாணம் குழைய, கூனிக்கொண்டு மறுமொழி கூறுகிறாள்சிறுமி: ''வெற்றிச்செல்வி!''

குரலின் இரக்கமும் அதிகமாகப் புழக்கத்திலில்லாத பெயரும் வசுவுக்குச் சட்டென்று தெளிவாகவில்லை.

''என்ன?''

சற்றே நிமிர்ந்து உரத்த குரலில் பெயரை மறுமுறை கூறுகிறாள் வெற்றிச் செல்வி.

அந்தப் பனிச்சென்ற கண்களில் இனம் புரியாததொரு ஏக்கத்தின் நிழல் பிரதிபலிப்பதாக வசுவுக்குத் தோற்றுவது பிரமையோ?

''திருச்சியிலிருந்துதானே வருகிறீர்கள்? யார் இருக்கிறார்கள் திருச்சியில்?''

''அம்மா செத்திட்டாங்க. அங்கேதான் நாங்க குடியிருக்கிறது...'' என்று பகருகிறாள் சிறுமி.

''தின...தின...அடடா...! கோயமுத்தூருக்கா போறீங்க. இப்ப? அங்கே யார் இருக்கிறார்கள்?''

''மாமன்.''

''தங்கச்சி!'' என்ற குரல் இடையே பாய்கிறது. செல்வி உடனே எழுந்து எம்பி, ''என்னக்கா?'' என்று கேட்கிறாள்.

''ஒண்ணுமில்லே. குறும்பு பண்ணாமலிரு''

யாரிடமும் பேசாதே என்று அந்தத் துளி உண்டு அக்காள் சங்கேதமாக அறிவிக்கிறாளா என்ன?

''உங்கக்கா பேரென்ன?''

''கலையரசி!''

''படிக்கிறீர்களா?''

ஆமாம் என்று தலையாட்டல்.

''எத்தனாவது?''

''அக்கா நாலாவது, நான் இரண்டாவது''

வசுவுக்குச் சட்டென்று முறுக்கு நினைவு வருகிறது. கூட்டையை அவிழ்த்து ஒரு முறுக்கை எடுத்து நீட்டுகிறாள்.

உலகத்துக் கூச்சமெல்லாம் அந்தச் சிறு உடலில் சரணடைந்துவிடுகிறது. ''வேண்டாங்க, வேண்டாங்க...'' என்று மறுக்கிறாள். ''பரவாயில்லே'' என்று அவள் கையைப் பலவந்தமாகப் பிடித்து அதைத் திணிக்கிறாள் வசு.

வசு ஒரு கணம் இன்னொரு முறுக்கை எடுத்துக் கலையரசியிடம் கொடுக்கலாமோ என்று தயங்குகிறாள். ஆனாலும் கொடுக்கவில்லை. அவர்கள் இருவரும் அந்தக் குறுகிய நேரத்துக்குள் மிகவும் கம்பீரமான, பெருந்தன்மையான நோக்கை உடையவர்களாக, தங்களை அவளுக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறார்களோ? தான் ஏழையாக இருப்பதில் உள்ள குறையைக் காட்டிலும் பிறர் தன் மீது அநுதாபம் காட்டும்போது ஏற்படும் மன வேதனையும் துன்பமும் அதிகம் என்பதை வசுவைவிட யாரே தெளிவாக உணர்ந்திருக்க முடியும்?

பஸ் ஓடுகிறது; ஓட்டத்தில் கடந்து செல்லும் வண்ணங்கள், வாசனைகள், எண்ணங்கள் பிரச்னைகள் எத்தனையோ?

பிரபாகரன் வெறும் பிரபாவாக வண்டியோட்டியாக இருந்த அந்த நாட்களில், ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு, அவள் அப்பாவோடு மலையைச் சுற்றியிருக்கிறாள் காரில். ஆனால் சமவெளிக்கு வந்ததில்லை. அப்போதெல்லாம் வேகத்திலேதான் அவளுக்கு உற்சாகம். காட்சிகள் பறப்பதைக் காணத்தான் ஆனந்தம். கீழே சுற்றுப் பயணம் செய்ய வேண்டும் என்ற ஆசை கொள்ளாமல் உண்டு. ஆனால் அப்பாவும் அவளறிந்து மலையிறங்கவில்லை. சிறையிருப்பது போல் மலையிலே வாசம் செய்தாரோ?

வேகத்துக்கு ஆசைப்பட்ட அவள், முன் பின் எதிர்பாராததொரு வேகத் தாக்குதலில் மலையுச்சியை விட்டுக் கீழே சரிந்துவிட்டாள். அந்த வினாடி வரையிலும் அடுத்த வினாடியின் மகத்தான மாறுதலைப் புரிந்து கொண்டிருக்கவில்லை.

''வசு, நீ உட்கார்ந்திருக்க வேண்டிய இடத்தில் யாரோ எஜமானராக இருக்க நான் வண்டி ஓட்டுகிறேன். நீ எப்படி இந்தத் தாழ்வை ஏற்றுக் கொண்டாய்? வசு!'' என்று பிரபாகரன் சில நாட்களில் மனமுடைந்த நிலையில் அரற்றும்போது அவள் கரங்கள் அவன் வாயை அடைத்துவிடும்.

''தனிப்பட்ட முறையில் எனக்கு என்ன தகுதி இருக்கிறது? நீங்கள் இப்படியெல்லாம் குறைத்துக் கொள்வதாக இருந்தால்...''

அவள் பேச்சைத் தொடர அவன் விட்டதில்லை.

வெறும் பள்ளிப் படிப்புத் தவிர உயர் கல்விகூட இல்லாதவள். உடல் வளைந்து வேலை செய்து பழக்கமில்லை. நினைவு தெரிந்து அவள் தன் தாயை — தாயென்று பிறர் குறிப்பிடுபவளை அவள் பார்த்ததில்லை. வெள்ளைப் புடவையும், கட்டுக் கூந்தலுமாக அந்த அம்மையைக் கனவில் கண்டாற் போன்ற நினைவுதான். செம்பம்மா, சமையல்கார நாயர், திம்மன் ஆகியோரெல்லாம் குழந்தைப் பருவத்திலிருந்தே நிலையாக அவளுக்கு ஒட்டியிருந்தவர்கள். பிரபாகரன் வருவதற்கு முன்பு 'ரிச்சி' என்று ஓர் ஆங்கிலோ இந்திய டிரைவர் இருந்தான். பிரபா வண்டியோட்ட வரும்போது, வசு ஆறு மைல் ஊருக்கப்பால் உள்ள உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதில் படித்துக் கொண்டிருந்தாள். அப்பா ஊட்டிக்குப் போகும் நாட்களில் மாலையில் அவளை அழைக்கக் கார் வந்ததில்லை. திம்மையன் துணையுடன் ஜிங்ஜிங்கென்று ஆறு மைல் நடந்தே வந்துவிடுவாள். அப்போதெல்லாம் வெளியுலகைப் பற்றிய நினைவு அவளுக்குக் காரிருளாகத் தோன்றியதில்லை. 'ஸில்வர் ஓக்' மர நிழலை நம்பிப் பூரித்துக் குளிர்க்கும் தேயிலைச் செடிக்கு, தலைநீட்டும் கொழுந்தைக் கிள்ளி வறுக்கப் போகிறார்கள் என்று தெரியுமோ?

வண்டி நிற்கிறது.

''காபி டிபன் சாப்பிட்டு வரலாம். பதினைந்து நிமிஷம் நிற்கும்'' என்று கண்டக்டர் அறிவிக்கிறான். ஹோட்டலுக்குள்ளிருந்து வெங்காயமும் எண்ணெயும் மணக்கும் வாசனை வருகிறது. இளம் தம்பதியையும், அவளையும் சிறுமிகளையும் தவிர எல்லோரும் இறங்கிவிட்டார்கள்.

முன் ஆசனத்தில் ஆரஞ்சு உரிக்கும் மணம்.


வீட்டுச் சலவையின்
பெருமை:
ஸர்ப் சலவையின்
அருமை
Surf
AMAZING BLUE POWDER
FOR THE WHITEST WASH!

வெற்றிச் செல்வி அவிழ்த்துவிட்ட கன்று போல் பின் இருக்கைக்குச் செல்கிறாள்.

''ஆரஞ்சு சப்பென்று இருக்கிறது. நன்றாக இல்லை.'' — புது மனைவியின் குரல்.

''ஸ்நோடௌன் ஆரஞ்சுதான் ஆரஞ்சு. கல்கண்டு தோற்றுப் போகும்....'' பிரசன்னாவின் பாராட்டு.

''உங்களுக்கு அவர்களை வெகு நாட்களாகப் பழக்கமோ?''

''பழக்கமா? கிழவர் யாரோ ஒரு மலையாளத்தையோ, குடகுக்காரியையோ காலம் கெட்ட காலத்தில் வீட்டோடு வைத்துக் கொண்டிருந்ததற்காகப் பதினைந்து வருஷ காலம் என்ன, அதற்கும் மேலே, சொந்த மக்கள் அவரைத் தள்ளி வைத்திருந்தார்கள். ஆனால் நான் ஒரு 'ஸீஸன்' தப்பாமல் போவேன். அவர் எப்படி இருந்தால் எனக்கென்ன? என்ன சாந்தி?''

''அவள்தான் அப்போதே செத்துப் போய் விட்டாளாமே?''

''அவளுக்காகவா? ஒரு பெண் இருந்தாளே? அவளைக் கிழவர் எனக்கு முடி போடக்கூட நினைத்தாராக்கும்....''

''ஓ.....? அவள் மிகவும் அழகாயிருப்பாளாக்கும்! நீங்கள் வருஷந் தவறாமல்....''

''ஷ்..... சாந்தி, முழுதும் கேள். அப்படி ஒன்றும் மூளை மங்கியவனல்ல நான். இனம் குலம் தெரியாத பெண்ணைக் கூட்டி வந்தால் இங்கேயும் அப்பா வெளியில் நிறுத்தி விடுவார், அங்கும் ஒரு காசு பெயராது என்று தெரியும். ஜாதகம் கேட்டாரோ இல்லையோ, புரிந்து கொண்டு தலை காட்டவில்லை. பர்மாவில் அந்தக் காலத்தில் புடவை வியாபாரம் செய்து சேர்த்த பணத்தைக் கொண்டு வந்து இங்கே கொட்டினாராம். அறுபது வயசுக்கு மேல் புத்தி கெட்டுப் போய் வளர்ந்த பையன்கள், பெண் எல்லோருடைய விரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டார். சாகும் போது, அந்த அநாமதேயப் பெண்கூடப் பக்கத்தில் இல்லையாம். இரவு படுத்தவர், காலையில் தூங்கினாற் போலவே கிடந்தாராம்......''

வசுவுக்குப் பாய்ந்து சென்று அவன் கழுத்தைப் பிடிக்க வேண்டும் போல் இருக்கிறது. அவள் பிறந்து அநுபவித்த வீட்டில் உரிமை என்று இன்று ஆள வந்தவர்களையும் உறவு கூறிக் கொண்டு அவன் உல்லாசம் கொண்டாடப் போகட்டும். அதைப் பற்றிப் பறையடிக்க வேண்டுமா? பின்னே உட்கார்ந்திருப்பவள் அவள் என்று தெரிந்துதான் நொந்த புண்ணில் கோலிடுகிறானோ?

''கடைசியில் அந்தப் பெண்ணுக்கு ஒன்றுமே கொடுக்க வில்லை?''

''உயில்கூட அவர்தான் எழுதவில்லையே? அவள் சொந்த மகளே அல்ல; ஊரார் அபவாதத்தைப் பொருட்படுத்தாமல் அப்பா அவள் தாயைக் கர்ப்பிணியாகத் தற்கொலை செய்து கொள்ளும் போது தடுத்துவிட்டார் என்று ராமு என்ற மகன் முன்பே சொன்னான். அப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது. அதுவும் உயர்ந்ததில்லை என்ற சாயம் வெளுத்து விட்டது. டிரைவர் ஒருவன் பிரபாகரன் என்று. அந்த நடத்தை வெளியானாற்போல் இருக்கிறது. ராமுவே ஆயிரம் ரூபாயைக் கொடுத்து அனுப்பிவிட்டதாகச் சொன்னான். இங்கே ஷோலர்மில்லில் ஜீப் டிரைவராக எங்கோ இருப்பதாகக் கேள்விப்பட்டேன். இப்போது பஸ் ஏறும்போது பார்த்தேன்......''

''பார்த்தீர்களா?''

''ஆமாமாம். அந்த நாளில் என்ன இபிர் தெரியுமா அவனுக்கு? கிழவர் கண் முன்பே, அந்தப் பெண்ணைக் கையில் போட்டுக் கொண்டு ஒரு 'லக்' அடிக்கலாம் என்று கனவு கண்டிருப்பானாக இருக்கும். கடவுளுக்கே பொறுக்கவில்லை.....''

''போய், போய்.....'' என்ற விம்மல் வெடித்து வருகிறது வசுவுக்கு. குனிந்து கண்களைத் துடைப்பவளாக மௌனமாக அதை வெளியாக்குகிறாள். இந்தப் பிரசன்னாவுக்கு அவள் அந்த வீட்டில் என்ன தீங்கு செய்தாள்? அந்த எண்ணம் அவனுக்குள்ளேயோ இருந்தது? தனிமையில் இகழ்ச்சியாக நடந்து கொள்ள முயன்றதும், அப்பா கண்டித்து வெருட்டியதும்....

தட்டைத் திருப்பிப் போட்டு, அவளுக்கு அடுத்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டு வேதனை நெருப்பைக் கவியவிடுவதில் ஒரு ஆனந்தமா? என்ன கேவலம்?

அவர்கள் பேச்சு, செவியில் விழாத தொலைவுக்கு எட்டிப் போகவும் வழியில்லை. நல்ல வேளையாக, பஸ் மீண்டும் பயணத்தைத் தொடர்கிறது.

வெற்றிச் செல்வி அவள் இருக்கைக்கு வருகிறாள். அந்த விநாடியில் வசுவுக்கு அந்தச் சிறுமியின் மீது கூடப் பொறாமை ஏற்படுகிறது. தாயற்ற குழந்தைகளானாலும், முறையான பந்தத்தில் பிறந்ததால், உறவும் சுற்றமும் செல்வம் கொடுக்கக் கூடிய உறுதியான ஆதரவுக்கப்பால் தெம்பு தரும் உறவுகளாகின்றன. அக்காளும் தங்கையுமாக ஒட்டியுள்ள உறவே போதுமே?

அடுத்த இதழில்

சங்கரி பேசுகிறாள்!

சிறப்புச் சிறுகதை

தாய் தந்தை என்ற உறுதியான பரம்பரைக்கு இன்னமும் அழகும் வலுவும் நிழலும் தரும் விழுதுகளாக மற்ற உறவுகள் சார்ந்து விடுகின்றன. அந்தப் பரம்பரை அந்தப் பிரதானமான ஆதாரமே இல்லாத போது மற்ற உறவுகளும் உளுத்த பந்தற் கால்கள்போல்தாம். எத்தனையோ பள்ளித் தோழிகள், நண்பர்கள், அவளுக்கும் இருந்திருக்கின்றனர். ஆனால் அவர்களும்கூட, அவளை அடையாளம் கண்டு கொண்டாலே இகழ்ச்சிக்குறி தோன்ற நகைப்பார்களாக இருக்கும்! இந்தத் தாழ்வுக்கு அறிந்து அவள் என்ன தவறு செய்தாள்? நினைவறியாப் பருவத்திலிருந்து ஒரே உறவாக அவள் மீது அன்பு பாராட்டிய தந்தையிடம், ''நீங்களே என் தந்தை என்று எல்லோருக்கும் அறிவுறுத்துங்கள், என் பகுதிக்குச் சொத்தை உறுதியாக்குங்கள்'' என்று கேட்டிருக்க வேண்டுமோ? அப்படி ஒரு மகள் கேட்க முடியுமோ? நா எழுமோ? அவர் உயிரோடு இருக்கையில் ஒழுக்கம் தவறியவரென்று சீர்தூக்கிப் பாராமலேயே அவரை விலக்கி வைத்த மக்கள், உயிர் போனபின் அவர் ஒழுக்கம் தவறாத உத்தமர் என்றும், அவளே அந்த வீட்டின் தூய்மையைக் குலைத்தவள் என்றும் ஒன்றுமறியாத அவளைப் பிரபாகரனுடன் இணைந்து அவதூறு சுமத்தி வெளியேற்றிய செயலுக்கு யாரிடம் அவள் போய் நியாயம் கேட்பாள்? தந்தை, ஆண்டவன், குரு என்றெல்லாம் ஒருவரையே சார்ந்திருந்த அவளிடம் இரத்த பந்தத்தைப் பற்றிய சந்தேகமோ, கவலையோ அவள் கொண்டிருக்கவில்லையே? சொத்துரிமை என்ற பிரச்னை, அந்த உறவின் நுண்ணிய பிரிவுகளிடையே பூதாகாரமாக முளைக்கும் என்பதைக் கனவில் கூட நினைக்கத் தெரியாத குழந்தையாக அல்லவோ அவள் இருந்தாள்? ஊரின் ஒதுக்குப்புறத்தில், சமூகத்தின் சில அன்றாட வரையறைகளெல்லாம்கூடத் தலைகாட்ட முடியாததொரு தனி உலகில், ஒழுக்க வேலிக்கப்பால் உதிர்ந்த மலரவள் என்ற உணர்வைத் தோற்றுவிக்கக்கூட எவரும் இருந்திருக்கவில்லை. ஏதோ ஓர் வகை இழையாக மண்ணுக்குள்ளே மறைந்து கிடந்தவோர், திடீரென்று சப்பாத்திப் புதராக ஒரே நாளில் மண்டி விடும் என்பதை அவள் எப்படி எதிர்பார்த்து இருந்திருப்பாள்?

மூதியவர் ஏதோ உயில் எழுதியிருக்கிறார் என்பது பிரபாகரனின் கட்சி. ''நமக்கு அந்தச் சொத்து வேண்டாம்'' என்று அவள் தீர்த்தாலும் அவர்கள் இருவருக்கும் அந்த ஒரே விஷயத்தில் மட்டும் கருத்து வேற்றுமை மாம்பழத்து நாராகச் சிக்குகிறது. ஆலை அதிபருக்கு வண்டி ஓட்டிக் கொண்டு கோவை செல்லும் சாக்காக அவன் இருமுறைகள் சென்ற போதும் வழக்குத் தொடர்வது சம்பந்தமாக விசாரித்து வந்திருக்கிறான் என்பதை அறிந்திருக்கிறாள்.

குறைப் பேற்றின் இழப்பை மறந்து, உடலையும் உள்ளத்தையும் தேற்றிக் கொள்ளச் செல்ல, அவனுடைய ஒன்றுவிட்ட தமக்கை என்ற உறவைத்தான் இப்போது பயன்படுத்திக் கொள்கிறான். அந்தத் தமக்கை கணவருக்கு ஏதோ பஞ்சாலையில் ஃபோர்மன் உத்தியோகம். வசதியில்லாத வாழ்வல்ல. பேருக்கு கல்யாணம் என்ற முக்கியமான சடங்குக்கு வந்த ஒரே உறவு மனிதர்கள் அவர்களே. பிறகு இரண்டு நாட்கள் அந்த வீட்டில் தங்கியிருக்கிறான். பிரபாகரன் வற்புறுத்தி இப்போது அனுப்பி வைப்பதன் காரணம்...... வேறு ஏதேனும் இருக்குமோ? சொத்து, வழக்கு என்ற ஆசையை அவளுள் தோற்றி வைக்க ஏதேனும் சூழ்ச்சி செய்வானோ? பிரசன்னாவின் சொல்லிலே விளைந்த சந்தேகம் பீதியாகக் கவிகிறது. சொத்தின் ஆசையில்தான் பிரபா அவளைக் கைப்பற்றினானோ? மேகக் கன்னி போல் உலவிய அவள், சிகரத்திலே மோதி உருத் தெரியா மனச் சிதைவை அடைந்திருந்த நாளில், அவதூறு கேட்டபின் ஷெட்டில் வந்து நின்று பொங்கிப் பொங்கி அழுதாள்.

''வசு...... நீ அழக் கூடாது, இந்தா.... இதோ பார், வசு!''

''எனக்கு யாருமே இல்லாதவர்களாகி விட்டார்களே பிரபா!''

''ஏ.... ஏன், யாருமில்லே? நானில்லே? வசு? அழக் கூடாது....''

அடாப் பழியின் ரோசத்தில் அவள் வாயிலிருந்துதான் சிதறின சொற்கள்: ''பிரபா, நீ என்னைக் கல்யாணம் செய்து கொள்வாயோ?''

அவள் சிதற விட்டதை அவன் பொறுக்கிக் கொண்டான். ராமு அவளுக்கு ஆயிரம் ரூபாய் பிச்சைக் காக கொடுத்ததைக்கூட அவள் பார்க்கவில்லை. 'தான் அவர்கள் இகழ்ச்சிக்குரியவளல்ல' என்ற வீராப்புடன் தலை நிமிர்ந்து பங்களாவை விட்டு வெளியேறினாள்.

நேரம் செல்லச் செல்ல, வண்டி ஓட ஓட, ஓராண்டுக்கு மேல் மனைவியாக வாழ்ந்திருக்கும் அவளுக்கு, கணவனின் மீது அது வரையிலும் இல்லாத அவநம்பிக்கை வலுக்கிறது. அவன் அவளைச் சொத்தில்லாதவள் என்று கழித்துக் கட்டி விடுவானோ? அல்லது துரோகமிழைப்பானோ? ஒரு வேளை கோவை பஸ் நிறுத்தத்தில் யாரும் வந்திராதபோனால்? ஒன்றுவிட்ட தமக்கை. அவர்களுக்கென்ன அக்கறை? பிரபா காட்டும் அன்பு உண்மையாக இருக்குமோ?

சிறகுகள் பிய்ந்த நிலையில் நோக்கம் தெரியாத பாதையில் செல்வதுபோல் அவளுக்குத் திகில் இருளாய் மண்டுகிறது. அந்த ஆயிரம் ரூபாயைப் பற்றி அவள் கேட்டதில்லை. அவன் இந்தப் பக்கம் வந்ததும் அவன் பணத்துடன் ஓடி விடுவானோ? அந்தத் தமக்கை உறவுகூட உண்மை என்பதற்கு என்ன அத்தாட்சி? எங்கு நோக்கினாலும் பற்றுக்கோல் இல்லை.

ஆலைகளும் தொழிற்சாலைகளும் அணி செய்யும் தொழில் நகரத்துள் வண்டி நுழைந்தது தெரியவில்லை. ஸ்டேஷன் நிறுத்தத்திலேயே பஸ் முக்காலும் காலியாகிறது. பிரசன்னாவும் இளமங்கையும் தோளோடு தோளாய் நின்று மூன்று மாடி ஹோட்டலுக்குப் போக வண்டிக் கூலி பேசுகின்றனர். தற்செயலாகப் பிரசன்னா வசுவைச் சந்தித்து விடுகிறான். இதழ்கள் அகலுவது போன்ற

பாவனைதான். குரலே எழும்ப வில்லை. வசுவுக்கு உள்ளத்து நினைவுகள் வெந்துபோயிருந்தாற்போல் ஒரு நிமிஷப் புழுக்கத்தின் குரலில் குலுக்கலில் விரைவைத் துளிகள் பூக்கின்றன. இறுதி நிறுத்தத்தில், வசுவையும் சிறுமிகளையும் தவிர, பஸ்ஸிலிருந்து இறங்கக் கூடிய பிரயாணி எவருமே இல்லை!

''வா, தங்கச்சி!''

காதறுந்த பையைக் கையில் பிடித்துக் கொண்டு, ஏற்றத் தாழ்வில்லாத உடையணிந்த சிறுமிகள் வெளியே இறங்குகின்றனர். திகிலின் திரைக்கப்பால் எட்டிப் பார்க்க இயலாத வசு, பையைக் கையில் வைத்துக் கொண்டு அக்குழந்தைகளையேதான் பார்க்கிறாள். தலைத் துண்டைக் கட்டிக் கொண்டு இறங்கும் டிரைவர், ''ஆட்டோவிலே ஏத்தி விடறேன். விலாசம் இருக்குதில்ல? போறீங்களா?'' என்று கேட்கிறான். பெரியவள் தலையை ஆட்டுகிறாள்.

''காசு எவ்வளவு இருக்கு?''

''ஒரு ரூவா.......''

''நீயே ஏத்தி விடுறியா, தம்பி?'' என்று கேட்கிறார் கண்டக்டர். ''போ, போ, அப்பன்காரன் தான் ரெண்டாந்தார ராட்சசிக்கு அஞ்சி அம்போன்னு இதுங்களை மூஞ்சி தெரியாதவங்க வூட்டுக்கு ஏத்தி விட்டுட்டான். யார் வூடோ போய்ச்சேரட்டும். அதுங்க அதிர்ஷ்டம்.''

போகிற போக்கில் கூறிவிட்டு, தங்கும் அறைக்குள் நுழைகிறார் கண்டக்டர்.

காதறுந்த பையில் ஒற்றை ஒற்றைப் பாவாடை சட்டையுடன் தங்கச்சி என்ற இணைப்பிஞ்சின் மேல் ஆதரவாகக் கைபோட்டுக் கொண்டு அந்தக் குழந்தை, உலகையே எதிர்த்துப் போராடச் செல்லும் துணிவான நம்பிக்கையுடன் செல்கிறாள். குடியிருக்கிறோம். மாமன் வீடு என்ற தெளிவில்லாப் பதிலிலும்கூட என்ன பொருத்தமோ! பிரயாணத்தின் ஆறு மணி நேரத்தில் பல முறைகள் எல்லாரும் காப்பியருந்தி, புகை குடித்து, தீனி மென்றார்கள். வசு பெரியவள். ஆனால் அந்தக் குழந்தை அவள் கொடுத்த முறுக்கைக்கூட இன்னமும் விள்ளவில்லை.

''அக்கா!'' என்ற குரலும், ''தங்கச்சி!'' என்ற எதிரொலியும் ஒன்றுக்கு மற்றொன்றாய், தாயாய், மகவாய், இருளாய், ஒளிக் கீற்றாய், அஞ்சும் முகமும் அபயகரமுமாய் அவள் மனசில் விளக்கம் காட்டுவதைப் போல் ஒலிக்கின்றன. சொல்லுக்கும் குரலுக்கும் உயிரூட்டுவது வெறும் பதங்களல்ல — உள்ளத்தின் உணர்வுகளோ ?

அச்சம் அறியாக் கன்றுகள் அவர்கள். பிரசன்னனின் சொல்லில் பரவிய திகிலின் திரை படீரென அறுந்து விழ, அந்த ஆட்டோவில் அவர்களுக்குத் துணையாய்த் தானும் ஏறிக் கொள்ள வேண்டுமென்ற உந்தலுடன் வசு விரைந்து செல்கிறாள்.

அவளை எதிர்பார்த்து வந்து நிற்கும் தமக்கை மகன் கோபி, அவள் தன்னைப் பார்க்காமல் விரைவது கண்டு, ''அக்கா, அக்கா! இங்கே?'' என்று அழைத்துக் கொண்டு அவள் பின்னே ஓடுகிறான்.

தலைவரைப் பற்றிச் சில நினைவுகள்

★

அதிசய வேட்பாளர்!

● நம் பொதுத் தேர்தல்கள் கட்சிகளின் கொள்கை அடிப்படையில் நடைபெறுவதில்லை. சாதி, மதம், பணம், மொழி, ராஜ்யம் ஆகிய குறுகிய அடிப்படையிலேயேதான் பெரும்பாலும் வேட்பாளர்களின் தகுதி எடை போடப்படுகிறது.

ஆனால் இதற்கு விதிவிலக்காக 1962ல் ஒரு தேர்தல் நடைபெற்றது.

தமிழ் மாநிலத்தைச் சார்ந்த - தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயில் ஸாஹிப் கேரள மாநிலத்தில் மஞ்சேரி பாராளு மன்றத் தொகுதியில் மலையாளம் பேசும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவ்வளவுக்கும் அத்தேர்தல் முடிவடையும்வரை காயிதே மில்லத் அந்தத் தொகுதிக்குச் சென்றது மில்லை; எந்தக் கூட்டத்திலும் சொற்பொழிவு நிகழ்த்தியதுமில்லை!

பட்டுமில்லை ; பகட்டுமில்லை !

● இளம் வயதிலேயே ஆடம்பர வாழ்க்கையை வெறுத்தவர் காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயில் ஸாஹிப். பகட்டான துணிகளை அவர் அணிவதேயில்லை. திருமணத்தின்போது கண்ணைப் பறிக்கும் வண்ண உடையில் மாப்பிள்ளை காட்சி தருவது வழக்கம். ஆனால் அக்காலத்தில் தீவிர காங்கிரஸ்வாதியாக இருந்த அவர் தம் திருமணத்தின்போதுகூடக் கரடு முரடான, எளிய கதராடையே அணிந்திருந்தாராம்.

வெளிநாட்டினரும் நாமும் !

● ஆங்கிலத்துக்கு எதிராகக் கிளம்பும் கோஷத்தை வன்மையாகக் கண்டிப்பவர் காயிதே மில்லத்.

''ஆங்கிலம் அடிமைத்தனத்தின் அடையாளம் என்கிறார்கள். எடுத்ததற்கெல்லாம் இப்படிச் சொல்வது தாழ்வு மனப்பான்மையாகும். (Inferiority Complex) நாம் சுதந்திர மக்களாக இருக்கும்போது யுக்திப்படி ஓர் அந்நிய நாட்டிலுள்ள நல்லதை எடுத்துக்கொள்வது அடிமைத்தனத்தின் அடையாளமாகாது. அப்படியென்றால் இது எல்லாத் துறைகளிலும் கவனிக்கப்பட வேண்டும். பெனிசிலின் அந்நியர் கண்டுபிடித்ததுதான். அதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லையா? இதுமட்டும் அடிமைப் புத்தி இல்லையா? அப்படிப் பார்த்தால் இன்றுள்ள நவீன விஞ்ஞான சாதனங்கள் எதையும் பயன்படுத்த முடியாது'' என்று தர்க்கரீதியாக எடுத்துக் கூறுகிறார் இஸ்மாயில் ஸாஹிப்.

—''உமைபதி''

அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவர் இஸ்மாயில் ஸாஹிப் அவர்களின் எழுபதாவது பிறந்ததின விழாவில் அறிஞர் அண்ணாதுரை அவருக்குப் பொன்னாடை போர்த்துகிறார்.



சித்திரக் களஞ்சியம்

" உனக்கு பிஸ்கட்டு பெப்பர் மெண்ட் எல்லாம் கொடுத்தாரே, அந்த மாமாவுக்கு நீ என்ன சொன்னே ?"

" இன்னும் கொஞ்சம் கொடுங் கோன்னு சொன்னேன் ! அவர் கொடுத்தார் !"

" அப்பவானும் அவருக்குத் 'தாங்ஸ்' சொன்னியா !"

" தாங்ஸ் சொன்னு அப்புறம் அவரிடம் இன்னும் கொஞ்சம்ன்னு கேட்க முடியாதேம்மா! இது புரியல்லியே உனக்கு?" என்றான் பையன்.



" இன்னு வாத்தியாரே ! நீயும் என்னோடே வெளியே வர்றியா இல்லியா ?"



" மாமா ! ஜில்னு இருக்கு மாமா !"
" ஆமாம்டா ஆமா!"

கொர்....ர்...ர் !

" தூக்கம் வரும் மாத்திரை வியாபாரம் எப்படி இருக்குது சார் ?"

" வியாபாரம் தூங்கறது சார் !"

" உங்க மாத்திரைகளைச் சாப்பிட்டு விட்டதா ?"



உபகாரி



"ஆப்பிளும், ஆரஞ்சும் போட்டு இந்த புரூட் ஸாலட் நமக்குக் கட்டுப்படி ஆகாது. நாளையிலிருந்து ஜனதா புரூட் ஸாலட் போதும்! பலாச்சுளை, கொய்யாப் பழம், நாவல் பழம், இலந்தைப் பழம், வெள்ளரிப் பழம் இவைகளைப் போட்டு ஸாலட் தயார் பண்ணும்! ஜனதா புரூட் ஸாலட்!"



"எதற்காக என்னை ஸ்கூலுக்கு வரச் சொல்கிறீர்கள்?"

"மாணவர்களுக்கு, பந்துக் கிண்ண மூட்டு, கீல் மூட்டு, மார்புக் கூடு, முதுகெலும்பு பற்றி ஒரு பாடம் வருகிறது. அதை விளக்கத்தான்."

ஒற்றுமை

ஒருவரின் கரத்திலுள்ள ஐந்து விரல்களில் இரண்டு விரல்கள் பேசும் சக்தி பெற்றன!

ஐயா, ஐயாவின் பெரியவரே! நீங்கள் சௌக்கியமா? — என்றது ஆள்காட்டி விரல் பெருவிரலைப் பார்த்து.

என்னடா, என்னைப் பார்த்துக் கேலியா செய்கிறாய்? எத்தனை பேரை இன்றைக்குக் காட்டி கொடுத்தாய்- என்றது பெருவிரல்.

என்னண்ணே அப்படிக் கோபப்படுகிறீர்? பெரியவர்களென்றால் எதற்கெடுத்தாலும் கோபப்படலாம் என்ற நீதியோ? — என்று மனத்தாங்கல் பட்டது ஆள்காட்டி விரல்.

அதைக் கேட்ட பிறகுதான் சுரீர் என்றது பெரு விரலுக்கு. சிறியவர்களுடைய உதவியும் ஒற்றுமையும் பெரியவர்களுக்குத் தேவைதான் — என்றது பெரு விரல். அப்பொழுதுதான் ஆள்காட்டி விரலின் மனம் குளிர்ந்தது. தன் எஜமானரின் பொடி டப்பாவுக்குள் நுழைந்து ஒரு சிட்டிகைப் பொடியை எடுத்தன இரண்டும்.

— கோ, கந்தசாமி





கல்லூரி திறந்தது!

ராஜேந்திரகுமார்

"அடேடே!"

வராந்தா வழியே எட்டிப் பார்த்த சாந்தி வியப்புடன் கூவினாள். "டியேய்! இவள்களே, இங்கே ஓடி வாங்களேன்! இதென்ன அதிசயம்?"

கெமிஸ்ட்ரி ஹாலில் குசலம் விசாரித்துக் கொண்டும், அரட்டை அடித்துக் கொண்டும், சண்டை போட்டுக் கொண்டுமிருந்த அத்தனை பெண்களும் வராந்தாவுக்கு ஓடி வந்து எட்டிப் பார்த்து வியந்தார்கள். "அடேடே! இதென்ன ஆச்சரியம்?"

அப்படி என்ன ஆச்சரியம் தோட்டத்தில் நடக்கிறது?

சாதாரணமாகக் காலைக் கொஞ்சம் விந்தி விந்தி நடக்கும் லெக்சரர் ரோஸி தாமஸ் ராக் – அண்ட் – ரோல் ஆடுகிறாரா? அல்லது வாழை மரத்தின் புதிய குலையிலிருந்து பிரின்ஸிபால் வாழைப்பழம் திருடித் தின்று கிறாரா? இல்லை... இல்லவே இல்லை.

ஒரு பெண் நடந்து வந்து கொண்டிருந்தாள்! அவள் வருவதில் ஆச்சரியம் என்ன இருக்க முடியும்?

இருக்கிறது!

இடுப்பையும் இளமையின் இனிமையையும் எடுப்பாக்கி, இறக்கிக் காட்டும் 'கவுன்' தவிர வேறு எதையும் அணியாத அழகி அந்தப் பெண்! குதிரை வால் கொண்டையைத் தவிர வேறு எந்தக் கொண்டையையும் பின்னலையும் போட்டுக்கொள்ளத் தெரியாத அந்த ஆங்கிலோ இந்தியப் பெண் ஹெலன் இன்று வரும் விதமே வேறு.

ரிப்பன் கட்டிய குட்டையான ரெட்டைப் பின்னல்கள் மார்பில் தவழ, ரோஜா நிறத் தாவணியும், கறுப்புப் பாவாடையும் காற்



நில் பறக்க, காலில் 'ஹை ஹீல்' செருப்புகள் சப்திக்க, டாக் டாக்கென்று நிமிர்ந்த நடையுடன் வந்து கொண்டிருந்தாள்.

"ஏய்.....ய்! ஜேனுங்கடி!" திரும்பினாள் சாந்தி. "இன்றுதானே காலேஜ் திறந்து முதல் நாள்! நம்மையெல்லாம் 'சர்ப்ரைஸ்' பண்ணப் பார்க்கிறாள் போலிருக்கிறது. எல்லாரும் ஹாலுக்குள் போயிருப்போம். அவள் உள்ளே வந்ததும் கைதட்டி வரவேற்போம். 'ஹெலன்' என்று கூவி அவளையே "சர்ப்ரைஸ்" பண்ணி விடுவோம்."

"ஐடியா! பிரமாதமான ஐடியா!" அமீதா மூக்குக் கண்ணாடியை நிமிர்த்தி விட்டுச் சொன்னதைத் தொடர்ந்து அனைவரும் லெக்சர் ஹாலில் நுழைந்து கொண்டார்கள்; மறைந்து நின்றார்கள். சற்றைக்கெல்லாம்...

"ஏய்! இவள்களே! யாரடி இங்கே நோட் புக்கைப் போட்டு வைத்திருப்பது?" என்ற ஹெலனின் குரல் கேட்டதும், குலுக் குலுக்கென்ற சிரிப்புடன் படபடவென்று கையைத் தட்ட ஓங்கியவர்கள் அந்த ஹெலன் உள்ளே நுழைந்ததும், ஓங்கிய கை ஓங்கியே இருக்க, திறந்த வாய் திறந்தபடியிருக்க, 'பே' என்று விழித்தார்கள். காரணம்?

அந்த ஹெலன் ஹெலனாகவே யிருந்தது தான். அதே கையில்லாத கவுன், அதே குதிரை வால் கொண்டையும், வெற்று நெற்றியும்!

"இந்தாடி பாலு!" என்று ஒருத்தியிடம் நோட் புக்கை நீட்டிய ஹெலனைக் கேட்டார்கள் அனைவரும். "ஏண்டி இவளே! எங்கே போய் டிரஸ் மாற்றிக் கொண்டாய்? ஏன் மாற்றினாய்? நாங்களெல்லாம் வாருவோமென்றா?"

"வாருவதா? டிரஸ் மாற்றிக் கொண்டேனா? என்னடி இது? வழக்கம் போலத் தானே போட்டுக்கொண்டு வந்திருக்கிறேன்?"

"பொய்!" கோரஸ் எழுந்தது. "நாங்கள் தான் பார்த்தோமே! பாவாடையும் தாவணியும், ரெட்டைப் பின்னலுமாக வந்து கொண்டிருந்தாயே!"

"ஓ மை காட்! ரெட்டைப் பின்னலா? பாவாடை தாவணியா? இப்பொழுதான்?" ஹெலன் சொன்னாள்: "[illegible] தான் ஞாபகம் வர்றது [illegible] ஹைஸ்கூலில் படிக்கிறப்ப ஒரு ஹெட்மிஸ்ட்ரஸ் இருந்தாங்க. ஒரு நாள்-என்னைக் கூப்பிட்டு 'இந்த டிரஸ் ரொம்பவும் 'செக்ஸி'யாயிருக்கு. பாவாடை தாவணியோட வா அப்படின்னாள். அதைப் போய் அப்பாவிடம் சொன்னேன். அவருக்கு வந்ததே கோபம். மறு நாள் ஸ்கூலுக்கு வந்து ஹெட்மிஸ்ட்ரஸைப் பார்த்து, 'என் பெண்ணை மதம் மாற்றப் பார்க்கிறீங்களா? அப்படி இப்படியென்று பேசி விட்டார் பாரேன். டோஸ்...'" கலகலவென ஆச்சரியத்தில் ஆரம்பித்து, பேச்சின் தொடர்ந்து, சிரிப்பில் முடித்தாள் ஹெலன்.

மற்றப் பெண்கள் அதை ரசிக்கவில்லை. சிரிக்கவுமில்லை. "அப்போ நம்ம இத்தனை பேர் கண்ணுமா பொய் சொல்லும்?" "நாங்கள்தான் பார்த்தோமே!" தமக்குத் தமே கூவினார்கள். "உன்னை மாதிரியே இருந்தது." "அச்சு, அசல் நீயேதான்!"

"அப்படியா?" ஹெலனுக்கு ஆச்சரியமாகி விட்டது. "அது யாரடி நம் 'டியூப்ளிகேட்?'"

"தெரியலையே!" என்று அவர்கள் கையைப் பிசைந்தார்கள்.

மத்தியானம் உணவு நேரத்தில்தான் அந்தப் பெண்ணைச் சந்தித்தார்கள்.

சாப்பிட்டுவிட்டுக் குழாயில் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த அவளைக் கைதட்டி அழைத்தார்கள். நெருங்கி வந்த அந்தப் பெண்ணும் ஹெலனைப் பார்த்ததும் ஒரு விநாடி நடுங்கிப் போய்விட்டாள். "என்ன ஆச்சரியம்?" என்று வியந்தாள்.

"ஏண்டி இவளே!" பூமா கேட்டாள், "நீ என்ன நியூ அட்மிஷனா?"

"ஆமாம்! போன வருஷம் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் பண்ணினேன். பி. யூ. ஸி. யில் முதல் வருஷம்! நீங்கள் எல்லாம்?"

"நீ பி.யூ.ஸி!" கோரஸில் கூவினார்கள்: "நாங்கள் பி.எஸ்ஸி.! உன் பேர்?"

"துளசி!"

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அந்தப் பெண், இவர்களுக்கு நெருங்கிய தோழியாகி விட்டாள், சளசளவென்ற அரட்டையின் நடுவில்...

"இவள்களே! ஒரு ஐடியா!" என்றாள் எழில்விழி. "ஹெலன் டிரஸை நீயும், துளசி டிரஸை நீயும் மாற்றிக் கொள்ளுங்களேன்! எப்படி யிருக்குன்னுதான் பார்ப்போமே!"

"எனக்கும் இந்த மாதிரி கவுன் போட ஆசைதான்" என்றாள் துளசி.

"எனக்கும் இந்த மாதிரி டிரஸ் போட்டுக் கொள்ள ஆசை" என்றாள் ஹெலன்.

"அப்புறமென்ன? அதோ அந்தப் பிரார்த்தனை ஹால் சுவருக்குப் பின்னால் போய் டிரஸ் மாற்றிக்கொள்ளுங்க" என்று அனைவரும் உற்சாகமூட்டினர்.

துளசியை இழுத்துக் கொண்டு ஓடினாள் ஹெலன். பத்து நிமிஷங்கள் கழித்து....

கூச்சத்துடன் கவுனை இழுத்து இழுத்து விட்டவாறு துளசியும், தாவணியைத் [illegible] அடிக்கடி தடுக்கி அமோ[illegible]று ஹெலனும் வந்தார்கள். "ஹோஹ்!" என்று ஒரே ஆரவாரம். "வித்தியாசமே தெரியலையடி!" "அசல் துளசி மாதிரியே இருக்கு!", "அச்சு அசல் ஹெலனேதான்!", "உட் கார்ங்கடி இவள்களா."

"பிரார்த்தனைக்காகத் திரும்பிப் போயிருந்தோம். வயசுப் பெண்ணுயிருந்தே என்று

மொட்டை அடிக்காமல் பாப் மட்டும் பண்ணி விட்டார்கள். அதுவும் எவ்வளவு சௌகரியமாகப் போயிற்று'' என்று தனது "போனி டெய்லி"ப் பிரியத்துடன் வருடிக் கொண்டாள் துளசி.

உண்மையில் அவர்கள் இருக்கும் உருவத்திலாகட்டும், உயரத்திலாகட்டும் வித்தியாசமே கிடையாது. ஹேமலனுக்குச் சிரித்தால் தெற்றுப் பல் கொஞ்சம் எடுப்பாகத் தெரியும். துளசிக்கு அது கிடையாது. அதுதான் வித்தியாசம்! ஆண்டவன் படைப்பில்தான் எத்தனை விநோதம்!

''மத்தியானம் இரண்டாம் ஆண்டு பி. எஸ்ஸி. பெண்கள் என் வகுப்புப் பெண்களை 'ராகிங்' பண்ணப் போகிறார்களாம்! ஏண்டி இவள்களே 'ராகிங்' என்றால் என்னடி?''

'' 'ராகிங்' என்றால் மண்டகப்படி.'' நர்மதாவும் நிம்மியும் போட்டி போட்டு விளக்கினார்கள் ''புதிய பெண்களுக்கு, பழைய பெண்கள் நடத்தும் மண்டகப்படி. உங்களை ஏதாவது கேள்வி கேட்டுத் திணற வைப்பார்கள். பதில் சொல்லாவிட்டால் அவர்கள் இஷ்டப்படி நீங்கள் ஆட வேண்டும். பாடச் சொன்னால் பாட வேண்டும். தண்ணீரைத் தலையில் கொட்டி, பாவாடையில் மையை ஊற்றி, அரை குறை உயிரோடு வீட்டுக்கு விரட்டுவார்கள்.''

''ஐயையோ! பயம்மாயிருக்கே'' என்று பயந்தாள் துளசி.

அடுத்துத் தங்களுக்குத் தமே 'ராகிங்'கைப் பற்றிச் சளசள பளபளவென்று பேசிப் பய மூறுத்தி அவளை அப்போதே பாதி உயிரை வாங்கி விட்டார்கள்.

'டிங்' என்று முதல் மணி அடித்ததும் பதறிப் போய் எழுந்தார்கள். ''சீக்கிரம் போய் டிரஸை மாற்றுங்களடி'' என்று சாந்தி கூறினாள்.

ஹேமலன் இழுத்து நாலு அடி ஓடிய துளசி நின்றாள். ''இவளே! ஒரு 'ஹெல்ப்' பண்ணேன்! உனக்குத்தான் இந்த காலேஜ் 'ராகிங்' விவரம் முழுதும் தெரியுமே! இதே டிரஸ்ஸோடு என் வகுப்புக்குப் போய்ச் சமாளியேன். நான் சமர்த்தாக உன்னோட கிளாஸுக்குப் போய்விடறேன்.''

''ஆஹா பிரமாதமான ஐடியா!'' என்ற ஹேமலன் கேட்டாள்: ''காலையில் நீ உட்கார்ந்திருந்த ஸீட் எது? எல்லாரையும் நான் முட்டாளாக்கி விடுகிறேன். சாயங்காலம் டிரஸை மாற்றிக் கொள்வோம்.''

தனது இடத்தை விவரித்து முடித்த துளசி கவுனுடன், போனி டெயிலுடன், பி. எஸ்ஸி., நண்பிகளுடன் புறப்பட்டுப் போனாள்.

''வாங்கடி வெளியே!'' என்ற கோரஸ் குரல் வெளியே கேட்டதும், முதலாண்டுப் புது மாணவிகள் நடுங்கிப் போனார்கள். சிலர் கையைப் பிசைந்தனர். இன்னும் பலர் அழவே ஆரம்பித்து விட்டனர்.

''அடி ஏண்டி பயப்படறீங்க?'' துளசி(!) கூறினாள். தைரியமாக வெளியே வாங்க. உங்களை நான் காப்பாற்றுகிறேன்'' என்று அவர்கள் பின்தொடர வெளியே வந்தாள்.

''என்னடி குழந்தைகளா? என்னடி மம்மா விஷயம்?'' என்று அவர்களைச் சீண்டினாள்.

''குழந்தைகளா?'' இரண்டாம் ஆண்டு பி. எஸ்ஸி. அயர்ந்து போயிற்று. ''யாரைப் பார்த்தடி அப்படிச் சொல்றே! நாங்கள் ராகிங் பண்ண வந்திருக்கோம்.''

''பண்ணுங்க, பண்ணுங்க!'' பலமாகத் தலையாட்டினாள் துளசியாக மாறிய ஹேமலன். ''என்ன பண்ணுவீங்கன்னு எனக்குக் கொஞ்சம் சொல்ல முடியுமா?''

''நாங்கள் ஒரு கேள்வி கேட்போம். கரெக்டா பதில் சொல்லாவிட்டால் இன்று முழுதும் நீங்க எங்களுக்கு அடிமைங்க. நாங்கள் சொன்னதே சட்டம்!''

''பதில் சொல்...விட்டா?'' அழுத்தமாகக் கேட்டாள் ஹேமலன். ''நீங்க எங்க அடிமைகளா?''

''ஓ! எஸ்'' என்றார்கள் துணிவுடன். 'நாம் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்லி ஆன பிறகு சமாசாரம்தானே?' என்ற தைரியம் அவர்களுக்கு. முதல் ஆண்டு இறுதியில் வரப்போகும் ரசாயனத்தைப் பற்றிக் கேட்டார்கள் ஒரு கேள்வி.

''இத்தனை புதுப் பெண்களுக்கும் நான் தான் பிரதிநிதி'' என்று ஹேமலன் கூறினாள். ''நான்தான் பதில் சொல்லுவேன்'' என்றவள் கேள்விக்குப் புள்ளி விவரக் குறிப்புகளுடன் 'டாணெ'ன்று பதில் தந்தாள்.

அயர்ந்து போயிற்று இரண்டாம் ஆண்டு பி.எஸ்ஸி. அடுத்துக் கேள்வி கேட்ட ஹேமலன் வேண்டுமென்றே இரண்டாம் ஆண்டு இறுதிப் பரீட்சைக் கேள்வியைப் போட்டுத் திணற அடித்தாள். பிறகு... ''கஷ்டமா யிருக்கா? பாவம் போகட்டும்! ஸிம்பிளா கேட்கிறேன் ஒரு கேள்வி. இந்த வருஷம் பிப்ரவரி இருபத் தொன்பது என்ன கிழமையில் வந்தது?''

குருட்டாம் போக்கில் ''வியாழன்''..., ''இல்லே, சனி'', ''ஞாயிறுதான்'' என்று கூவ, கலகலவென்று சிரித்தாள் ஹேமலன்.





"மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, மாம்பலம் ஜார்ஜ் டவுன், செனாய் நகர்..."

"என்ன சார்? இங்கே எல்லாம் நீங்கள் போகணுமா?"

"இல்லே! அங்கே எல்லாம் நீ சவாரி போவி றயே, எங்கேயாவது போர்ஷன் காலி இருந் தால் சொல்லேன்!"

"நான் சொல்றேன் பதிலே! எந்தக் கிழமை யிலும் வரல்லே. காரணம் அந்தத் தேதியே கிடையாது! இதென்ன லீப் வருஷமா?"

முதல் ஆண்டு உற்சாகத்துடன் கூச்சலிட, இரண்டாம் ஆண்டு நகைக் குவிவுடன் சென்று மறைந்தது.

"துளசி... இவனே துளசி" என்று 'முதல் ஆண்டு' கூவ, சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு, "என்னையா?" என்றான். "என் னையா கூப்பிட்டீங்க?"

"உன்னையேதானடா துளசி" என்று அவர்கள் கூறியதும்தான் சட்டென்று உறைத்தது அந்த தெறலனுக்கு. "ஓ! நான் இப்ப துளசியா?" என்று எண்ணியவாறு அவர்களை நோக்கி நடந்தான்.

நான் துளசி என்பது அடிக்கடி மறந்து போய்க்கொண்டிருந்தது அவனுக்கு.

"ஆச்சரியமா யிருக்கே!"

பி. யூ. ஸி. முதல் ஆண்டுக்கு வந்த லெக் சரர் மிஸஸ் சிந்தாமணி வியந்தாள். "அசல் தெறலன் மாதிரியே இருக்கே!"

"தெறலனு?" புரியாதவன் மாதிரி கேட் டான் துளசியாக மாறிய தெறலன். "அது யார் மிஸ்?"

"உனக்குத் தெரியாது. அது ஒரு பெரிய இரட்டை வால் அரட்டை" என்றபோது பல்லை நறநறவென்று கடித்தான் தெறலன். பிறகு நடந்த முதல்நாள் ஆரம்ப பாடங்களில் 'டான் டான்' என்று பதில் சொல்லும் அந்தப் புதிய பெண்ணைப் பார்த்துச் சிந்தா மணி வியந்து கொண்டிருந்த அதே நேரத்தில், "நல்ல புத்திசாலியான இந்த தெறலன் ஏன் எதைக் கேட்டாலும் திருதிருவென்று விழிக்கிறான்?" என்று வியந்து கொண்டிருந் தான் பி. எஸ்ஸி.க்கு வந்த புரபசர் ஒருவர்.

மூன்று மணி குமாருக்குத்தான் சிக்கல் வந்தது.

கொஞ்சம்கூடப் புரியாத பி. எஸ்ஸி. பாடங்கள் போரடித்தன துளசிக்கு. கண் ணில் தூக்கம் வந்து சொக்க வைத்தது. முகம் கழுவி, அப்படியே கான்டீனில் ஒரு கப் காப்பியும் குடித்து விட்டு வரலாம் என்று கீழே இறங்கி வந்தான். வாசல் போர்டி கோவைக் கடக்கும்போது... -"ஏ...ஸன்... ஏஸன்" என்று ஒரு குரல் அழைக்கத் திரும் பிப் பார்த்தான்.

பெரிய படகுக் காரில் அமர்ந்திருந்த அந்த ஆங்கிலேயர் சுட்டு விரலையசைத்து. அழைப்பதைக் கண்டு சுற்று முற்றும் பார்த்து "என்னையா?" என்று கேட்டான்.

"எஸ்...யூ! கமான்."

துளசிக்குச் சிரிப்பு வந்தது. 'தெறலன் என்று நினைத்துவிட்டார் போலிருக்கிறது. கொஞ்சம் தமாஷ் பண்ணுவோம்' என்று நினைத்த மாத்திரத்தில் தூக்கக் கலக்கம் போன இடம் தெரியவில்லை. சுறுசுறுப்புடன் நெருங்கி வந்து கேட்டான். "யார் ஸார் நீங்க?"

"யூ லிட்டில் கூஸ்" வந்தவருக்குக் கோபம் வந்து. சிவந்த அவரது மூக்கு நுனி மேலும் சிவந்து கோபம் சுடர் விட்டது. "டாடி யைப் பார்த்துக் கேட்கிற கேள்வியா இது?"

'ப்பூ' என்று ஊதியிருந்தால் பத்துக் குட்டிக்கரணம் போட்டு விழுந்திருப்பான் அவன். இருந்தாலும் சமாளித்து, "ஹாய்! டாடி! எப்படி என் தமாஷ்?" என்று இளித்தான்.

"பொண்ணுன்டோ வீட்டுக் கல்யாணத் துக்கு சர்ச்சுக்குப் போகணுங்கறதை அடி யோட மறந்துட்டியா? மத்தியானம் சாப் பிட்டானதும் புறப்பட்டு வரச் சொன் னேனே...?"

"இது வேறு வம்பா?" என்று நினைத்துக் கொண்ட துளசி "மறந்தே போயிட்டேன் டாடி! இதோ போய்ப் புத்தகங்களை எடுத்து வரேன்" என்று கிளம்பினான்.

'மேலே போய் தெறலனை இழுத்து வந்து. உடனே டிரஸ் மாற்றி...' என்ற அவன் கற்பனைகளெல்லாம் பொல பொலவென்று உதிர்ந்தும் சரிந்தும் போயின. ப்யூன் ஒரு வன் புஸ்தகங்களை நீட்டி, "நானே கொணர்ந் துட்டேன் ஸார்" என்று பல்லை இளித்தான். அவன் இளிப்புக்குக் 'கைமேல்' பலன் கிடைத்தது.

"இருங்க டாடி... வந்து... நான் வந்து" என்று துளசி திணற, "யூ ஸில்லி லிட்டில் மங்கி கமான்" என்று அவர் கையைப் பிடித்து இழுக்க, "யான்...ன்... நான் உங்க தெறலன் இல்லே" என்று கத்த வாயைத் திறந்தவன் ஜன்னல் வழியே எக்கிப் பார்த்த பிரின்ஸிபால் தலையைக் கண்டதும் பட் டென்று அடங்கிப் போனான்.

'-தெறல்...லோ' என்று பிரின்ஸிபாலுக்கு 'டாடா' கூறியவாறு தெறலனை(!) காரில் தள்ளித் திணித்துவிட்டு, புறப்பட்டே விட்

டார். கார் மறைந்த கொஞ்ச நேரத்துக் கெல்லாம்....

பாவாடை தாவணி யணிந்த ஹெலன் பி. எஸ்ஸி. ஹாலுக்கு முன் வந்து நின்றாள். ஜாடை புரிந்து கொண்ட சாந்தியும், மலர் விழியும் வெளியே வந்தார்கள். "என்னடி துளசி இவளே!" என்றார்கள் கிண்டலாக.

"நானும் ஆச்சு, ஆியும் ஆச்சு!" பதறி னாள் ஹெலன். "எங்கேடி அந்தப் பெண்?"

"ஏன்டி?"

"ஒரு பேரேஜுக்குப் போக வேண்டி யிருந்தது. மத்தியானம் மட்டும் போட்டு விட்டு வா என்றார் அப்பா. மறந்தே போயிட் டேன். எங்கேடி அவள்?"

"எதுக்கோ கீழே இறங்கிப் போனாள் வந்து விடுவாள் இரு."

ஹெலன் சங்கடத்துடன் கையைப் பிசைந்து கொண்டிருந்தாள்.

காரில் போகும்போதெல்லாம் அந்த 'டாடி' திட்டிக் கொண்டே வந்ததினால் பலதரம் வாயைத் திறந்தும், ஒன்றும் சொல்ல முடியாமல் போய்விட்டது துள சிக்கு. அதோடு பயமாக வேறு இருந்தது. பங்களா வாசலில் கார் நின்றதும்தான் அவர் திட்டுவதும் ஓய்ந்தது. "சீக்கிரம் அறைக்குப் போய் சர்ச் டிரஸ் போட்டுக்கொண்டு வா" என்றதோடு ஆணை விட்டார்.

பங்களாவில் நுழைந்த துளசிக்குக் கண் ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந் தது. ஹெலனைச் சபித்தாள். ஒவ்வோர் அறையிலும் புகுந்து புறப்பட்டு வந்தாள். எப்படியோ ஒரு வழியாகச் சிதறிக் கிடந்த புத்தகங்களையும், கவுன்களையும்கொண்டு அந்த அறையை அடையாளம் கண்டுபிடித்தாள். ஆனாலும் பிரச்னை தீரவில்லை. 'சர்ச் டிரஸ்' என்றாரே அது எதுவோ? பீரோவைத் திறந்து துணிகளை இழுத்து இழுத்துத் தரையில் எறிந்து தேடினாள்.

நல்ல வேளையாக வேலைக்கார ஆயாள் உள்ளே வந்தாள். "என்ன பேபி? என்ன தேடறே?"

"என் சர்ச் டிரஸ் காணுமே!" என்றாள் துணிக் குவியலுக்குப் பக்கத்தில் நின்றபடி.

"இதோ உன் காலடியிலேயே கிடக்கே!" என்று எடுத்துத் தந்த ஆயா, "நீயே போட்டு விடேன்" என்று கூறிக் கொஞ்சம் ஹெலனைப் பார்த்து விழித்தாள். ஆடைகளையோ, தன் உடம்பையோ தொடவே விடாத சின்ன எஜமானியா இப்படிக் கேட்பது? என்று வியந்து போனாள்.

சர்ச்சுக்குப் போனார்கள். அங்கே மற்ற வர்கள் நிற்கும்போது நின்று, அமரும்போது தானும் அமர்ந்து, எழுந்து எப்படியோ சமா ளித்துக் கொண்டிருந்தாள் துளசி.

இங்கே...

நாலரை மணிக்கு மணியடித்துவிட்டதும் ஹெலனுக்குப் பதற்றம் தாங்கவில்லை. "எங்கே தொலைஞ்சாளோ! இப்ப நான் என்னடி பண்ணுவேன்! இந்த டிரஸ்ஸோட வீட்டுக்குப் போனா அப்பா ஷூட் பண்ணி விடுவாரே! ஒருவேளை வீட்டிலிருந்து யாரா வது வந்து அழைத்துப்போயிருப்பார்களோ?"

"ஆமான்டி!" பட்டென்று கையடித்து ஒதுங்கினாள் அமீதா. "பியூன் மூலம் வந்து ஹெலனோடு புத்தகங்களைக் கொடுன்றாள். நான் கொண்டு போய்க் கொடுத்துவிட் டேனே!" என்றாள்.

'அடப் பாவி' என்ற கோரஸுடன் சிலர் திட்டினார்கள். பலர் குட்டினார்கள். நர்மதா என்ற பெண் மட்டும் போய் பியூன் மூலமே விசாரித்துவிட்டு வந்தாள். அவள் கூறியதைக் கேட்டு....

"ஆ...ம்" என்று கண்ணைப் பிசையவே ஆரம்பித்து விட்டாள் ஹெலன். "அப்பா தான் வந்திருப்பார். நான் செய்த ஜூம் புத்தனம் தெரிஞ்சா உடனே 'ரைபிளை'த் தேடுவாரே!"

"அவருக்கென்டி தெரியப் போறது?" சாந்தி கூறினாள். "நான் தரேன் பெஸ்ட் ஐடியா. பேசாமல் என்கூட வந்து எங்க வீட்டி லேயே ராத்திரி தங்கியிரு. நாளைக்கு அவள் எப்படியும் காலேஜுக்கு வரத்தான் போகி றாள், பார்த்துக்குவோம்."

"சரி" என்று கும்பலாக நாலு நடை நடந்தவர்களை 'ஸ்டாப்' என்று கூவிச் சட் டென்று நிறுத்தினாள் பூமா. "அதிலேயும் ஒரு சங்கடமிருக்கே! உன்வீட்டிலே 'ஹெலன்' இருப்பாள் சரி. ஆனால் அவள் வீட்டிலே துளசி இருக்க மாட்டாளே! பெண்ணைக் காணும்னு அவங்க வீட்டார் போலீஸிலே ரிப்போர்ட் பண்ணிவிட்டால்?"

"போலீஸ்"... நடுநடுங்கிப் போனார்கள்:

"சரி சரி... யோசிக்க நேரமில்லே." சாந்தி சொன்னாள். "அடியே ஹெலன், எப்படி அந்தத் துளசி உங்க வீட்டிலே ஹெலனாக நடிக்கிறாளோ அதே மாதிரி அவங்க வீட்டிலே துளசியாக நீ நடித்தாக ணும். வேறு வழியேயில்லே! ஆனால் அவள் வீடு எங்கேயோ தெரியலையே!"

"என்னைக் கேளுங்களேன்!" ஸ்தலத்துக்கு விரைந்தாள் பூமா. "பேச்சு வாக்கில் அப்போ விசாரிச்சேன்! நம்பர் நாலு, வடக்கு மாட வீதி."

"நல்ல வேளை! கை கொடுத்தாயே!" என்ற ஹெலன், "மாட வீதியா? ஐயோ! ஐயங்கார் வீட்டுப் பொண்ணாயிருக்கும்போலி ருக்கே! அவங்க பழக்க வழக்கமெல்லாம் எனக்குத் தெரியாதே!" என்றாள்.

"இப்ப நான் கைகொடுக்கிறேன்." அமீதா சொன்னாள். "முதல்லே என் வீட்டுக்கு வா: என் அம்மாகிட்டே உங்க வீட்டில் சிலே ஷம்னு ரூப் அடிச்சிட்டு உனக்குத் துணையாக வந்துடறேன்."

"அங்கே அவங்க வீட்டிலே கேட்டால்?"

"சமயத்துக்கு ஏற்றதுபோல ஏதாச்சும் அட்ஜஸ்ட் பண்ணுவோம். யூ டோன்ட் வொரி!"

அந்த வீட்டு வாசலில் நின்றிருந்த கனத்த உருவமொன்று ஹெலனைக் கண்டதும் "அட கடங்காரி! காலேஜ் விட்டு வீட்டுக்கு வர இத்தனை நாழியா? உள்ளே வா உன் தோலை உரிக்கிறேன்" என்று அடித் தொண்டையில் கத்தியது.

"அவங்கதான் உங்கம்மா போலிருக்கு" என்றாள் அமீதா ரகசியமாய். உடனே அந்த ஹெலனுக்குப் பாசம் பிறந்துவிட்டது:

"ஹாய், அம்மா!" என்று ஓடிப்போய்க் கட்டிப் பிடித்துக் கொண்டு விட்டாள்: உடனே தழல் பட்டு விட்டதைப் போல்



''உன்னுடைய கால் அடுப்பை இரவல் தருகிறாயா? இல்லே; சாமானெல்லாம் இங்கேயே கொண்டு வந்து, சமையல் செய் தெரிந்தும் போகலாமா?''

''ஐயோ... ஐயோ!'' என்று அலறியவாறு பின்வாங்கினாள் அந்த மாமி. ''நாசமாப் போனவளே! குளிச்சு மடியோட இருந்தேன்; வெளியே போய் வந்த கையாலே தொட்டுக் கொண்டு விட்டாயே! உள்ளே வா சொல்றேன் உன்னே!'' என்று பொரிந்து தள்ளி விட்டுக் கேட்டாள். ''ஆமா! யாருடி இந்தச் சின்னப் பொண்?''

''அபிதா! என் காலேஜ்மேட்'' என்று அறிமுகப்படுத்தினாள் அந்த ஹேமலன். ''அவங்க வீட்டிலே எல்லோரும் இவளே விட்டு விட்டு வெளியூர் போயிட்டாங்களாம். தனியாயிருக்கப் பயமாயிருக்குன்னாள். என்கூட இருன்னு அழைச்சிண்டு வந்தேன்.''

அந்த மாமி சந்தேகத்துடன் அபிதாவைப் பார்த்த விதத்தை இருவரும் ரசிக்கவில்லை. ''யார் வீட்டுக் குழந்தேடி நீ'' அம்மாமி கேட்டாள். ''உங்க வீடு எங்கே இருக்கு?''

''காக்காத்தான் தெரு, நம்பர் பதிமூணு!'' என்று அபிதா முடித்ததும்,

''அடேடே! நம்ம சோமசு வீட்டுப் பொண்ணா நீ! அவனுக்கு என்ன மூளே மழுங்கிப் போச்சா? வயசு வந்த பொண்ணைத் தனியா விட்டுட்டுப் போறதாவது? வரட்டும் அவன் கேட்கிறேன்!''

திருதிருவென விழித்தார்கள் இருவரும்.

''ஹலோ ஹேமலன்!''

தனது கையைப் பற்றிக் குலுக்கும் அந்த வாலிபனைப் பார்த்து முறைத்தாள் துளசி.

''மாப்பிள்ளை பொன்னுஸ்வாமியின் ஸன்! ஒரே பிள்ளே'' என்று அந்த டாடி அறிமுகப் படுத்தியதும், மூச்சே நின்றுவிடும் போலாகி விட்டது அவளுக்கு. இவ்வளவு பெரிய பையனா? அப்படியானால் மேடையில் சுற்றிச் சுற்றி வரும் அந்தக் கிழட்டுத் தம்பதிகள்தான் மாப்பிள்ளையும் பெண்ணுமா? மாப்பிள்ளையின் அப்பா அம்மா என்றல்லவா நினைத்திருந்தாள். இரண்டாவதோ, நாலாவதோ கல்யாணம் போலிருக்கிறது.

சின்னச் சின்னக் கண்ணாடிக் கோப்பையில் எதுவோ கொண்டு வந்து நீட்டினார்கள். முகர்ந்து பார்த்து அவளுக்குக் குமட்டல் வந்தது. மேஜை மீதிருந்த புதிய பூச்சட்டியை எடுத்து அழகு பார்ப்பதுபோல் பார்த்து யாரும் கவனிக்கவில்லை என்று தெரிந்ததும் சட்டென்று அதில் கொட்டி விட்டாள்.

''காப்பி சாப்பிட வாங்கடி!'' என்று கூறிய அந்த அம்மாள் இரண்டு டபரா டம்ளர்களை மேஜை மேல் 'டொக்'கென்று வைத்துவிட்டு நகர்ந்தாள். ''சுருக்கக் குடிச்சுட்டு வீணை சாதகம் பண்ணு!'' என்று ஆணையிட்டவாறு.

காப்பி தரமாக இருந்தது.. கடைசிச் சொட்டையும் நாவில் விட்டுக் கொண்டு, ரசித்தாள் ஹேமலன். மறுபடியும் அந்தம்மாள் ''வீணை...சாதகம்'' என்று இரையவே, இரண்டு பேருமாகச் சேர்ந்து கஷ்டப்பட்டு வீணையைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள். ''வீணையை எப்படியடி வைச்சுக்கிறது?'' என்று ஹேமலன் கேட்க, ''தெரியாதே'' என்று அபிதா பதில் கூற, ''போயும் போயும் உன்னேப் போய் 'கைடா'க அழைத்து வந்தேனே'' என்று ஹேமலன் அடித்துக் கொள்ளும்போது கண்ணில் பட்டது பூஜையறையில் சரஸ்வதி படம். உடனே சோபாவில் அமர்ந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டு வீணையைத் தோளுக்கும் துடைக்குமாக வைத்துக் கொண்டு ''டொய்ங்.... டொய்ங்'' என்று மீட்டலானாள்.

நாலாவது 'டொய்ங்கு'க்குத் தந்தி அறுந்து போயிற்று.

''அடிப் பாவி!'' உள்ளே யிருந்து அடித் தொண்டையில் கத்தினாள் அம்மாமி. ''நேத்துத்தானே புதுத் தந்தி போட்டது. அதனுள் அறுத்து விட்டாயேடி! சரி சரி.—உன்னுடைய இடத்திலே போய்ச் சமர்த்தா உட்கார்ந்து படி!''

''அவ இடமாமே எதுவோ?''

''காலேஜ் படிக்கிற பெண் வேறே எங்கேடி உட்காரும்? அதோ அந்த மேஜைக்குப் பக்கத்தில்தான் உட்கார்ந்து படிப்பாள்'' என்ற அபிதாவோடு சேர்ந்து மேஜையை அடைந்து... அதை இழுத்தார்கள். இதை மூடினார்கள். இன்னொன்றைப் பிடுங்கி, மற்றதைத் தள்ளினார்கள். பிறகு 'அச்சச்சோ!' என்றார்கள்.

''இங்கி கொட்டிப் போச்சேடி!'' என்று அலறியவர்கள், ''சீக்கிரம்'' என்று கண்ணில் பட்ட ஒரு விலை உயர்ந்த கர்சீபை எடுத்து மசியை அவசரம் அவசரமாகத் துடைக்கலானார்கள்.

'பளார்' என்று ஓர் அறை ஹேமலனின் முதுகில் விழுந்தது. அறைந்தவன் துளசியின் அண்ணன். ''ராஸ்கல்! ஏன்டி என் டேபிளைக் குடைஞ்சே?''

சுறுசுறுவென்று எரியும் நடு முதுகைத் தேய்க்க முடியாமல் தவித்த ஹேமலனுக்குத் தாங்கவில்லை. ஆத்திரத்தோடு அவன் மார்பைப் பார்த்து ஓங்கி ஒரு குத்து விட்டாள்.

எதிர்பாராத பேரடியால் தாக்குண்ட அவன், 'எப்போது அடித்தாலும் 'ஓ'வென்று அழும் துளசியா இது?' என்று விழித்தான்.

அறுபது வயதுக் கிழவர்கள் முதல், ஆறு வயதுப் பையன்கள் வரை 'தை தை' என்று டான்ஸ் ஆடுவதை அருவருப்புடன் பார்த்துக்கொண்டிருந்த துளசியிடம் வந்தான்

அந்த பொன்னுஸ்டோனின் பையன்; ஆட அழைத்தான்.

பரிதாபமாகத் தன்னைப் பார்ப்பதை கண்ட, அந்த 'டாடி', "நீ விட்டுக் பபர் ஆடேன். நான் ஒன்றும் வித்தியாசமாக நினைத்துக் கொள்ள மாட்டேன்" ௭ ஞர்.

"நாசமாய்ப் போச்சு" என்று நினைத்துக் கொண்டவன் எழுந்து காலை விந்தி விந்தி நடப்பதைக் கண்டு 'டாடி' கேட்டார்: "ஏ....லன்! என்ன உன் காலுக்கு? ஏன் நொண்டறே?"

"மந்திரவாளம் தொண்டியாடினேன். டாடி. கால் சுளுக்கிக் கொண்டு விட்டது!"

"ஏன் அந்த நான்லென்லெல்லாம் ஆடறே நீ? சரி சரி. வந்து உட்கார்" என்றார். அந்த பொன்னுஸ்டோனின் பையன் ஏமாற்றத்துடன் போய் விட்டான்.

அப்போதைக்குச் சமாளித்தாலும் புன்னை நின்போது தவித்துப் போய்விட்டான் அவன்.

'உர்' என்று முறைக்கும் 'டாடி'யைப் பார்த்து 'வயிறு சரியில்லே' என்று முணு முணுப்பாகப் பதில் தந்துவிட்டு, அசடும், ஏமாற்றமும் வழியச் சிரித்தான்.

"ஹா!" — வயிற்றைப் பிடித்துக்கொண்டான் ஜெறலன். "அடியே அபீதா! பசிடி."

"கொஞ்சம் பொறு. இலே போடுவாங்க."

"சீ...சீ.. இலையைத் தின்ன நானென்ன ஆடா, மாடா?"

"இல்லேடி!" அபீதா சிரித்தாள். "வாழை இலையைப் போட்டு, அதிலே சாதம் வைத்துச் சாம்பாரும், கூட்டும், பொரியலும் அப்பளமும் போட்டு...." விவரித்துக்கொண்டே வந்த அபீதா "ஹா" என்று அலறினாள்.

"ஏன்டி? உனக்கும் பசியா?"

"இல்லேடி! அதோ ''ங்கப்பா வரார்." அவன் சொல்லி வா...ய மூடு முன்...

"ஏய் அபீதா! நீ இங்கேயா இருக்கே? இவங்க விட்டிலேயா விசேஷம்? அதை முதலிலேயே சொல்லி யிருந்தால் நம்ம விட்டில் அநாவசியமா சமையல் பண்ணத் தேவை யிருந்திருக்காதே!" என்றார் அந்தக் கஞ்சமா பாதகர்.

"அதெல்லாம் ஒன்னுமில்லே! வாங்கப்பா போகலாம்" என்று அவரைப் பிடித்து இழுத்தாள் அபீதா. அவளுக்குப் பயம், எங்கே அந்த அம்மாமி வெளியே வந்து எதையாவது கேட்டு வைப்பாளோ என்று'

"கொஞ்சம் பொறும்மா. இங்கே கொசம் தண்டல் பணம் வரணும்...."

"அதெல்லாம் அப்புறம். வாங்கப்பான்னு" என்று தந்தையை இழுத்துக் கொண்டு ஜெறலன் தவிக்கத் தவிக்க, போயே போய் விட்டாள்.

ஒரு வழியாக இலே போட்டாயிற்று.

ஜெறலனின் பக்கத்திலேயே, அந்தத் துளசி யின் அண்ணனுக்கும் இலே போட்டிருந்தது. ஆனால் அவன் ஜெறலனின் முறைப்புக்குப் பயந்து இலையையும் மனையும் இழுத்துத் தூரப் போய் விட்டான்.

"ஸ்போர்க் ஸ்பூனில்லாம எனக்குச் சாப் பிட வராதே!"

"அடி, கடங்காரி! அடி கட்டாலே போறவளே! நீ நாசமாய்ப் போக...." என் றெல்லாம் அந்த அம்மாள் அலற, அப்போது தான் வீடு திரும்பி, வாசலில் செருப்பைக் கழற்றிப் போட்டுக் கொண்டிருந்த துளசி யின் அப்பா, "என்ன அங்கே ரோதனே?" என்று கத்த, "பாருங்களேன், இந்த அக்கிர மத்தை!" என்று அம்மாமி அழ, "அடி, செருப்பாலே!" என்று அவர் சீறி விழுந்தார்;

"திருந்துங்க ஸார்!" சிலிர்த்தெழுந்தான் ஜெறலன், "எங்கப்பாகூட என்னை இப் படித் திட்டியதில்லே."

"உங்கப்பாவா?" என்று அனைவரும் அசந்து போனதும்தா.., ஜெறலனுக்குச் 'சட்'டென்று உறைத்தது. "நான் இப்ப துளசியா?" என்று நாக்கை இழுத்துக் கொண்டான்.

அந்த பதினைந்தாவது நிமிடம் அறை ஒன்றில் பூட்டப்பட்டிருந்தான் அவன். வெளியே ஹாலில் அவனுக்குப் பிடித்திருக் கும் பேயை விரட்ட எந்தப் பூசாரியை அழைப்பது என்பது பற்றி ஆலோசனை நடந்து கொண்டிருந்தது. நல்ல வேளை! திறந்திருந்த ஜன்னல் வழியே குதித்துத் தப்பியோடி விட்டான் ஜெறலன்.

"ஹல்லோ ஜெறலன்."

ஓடி வந்த அந்த இளைஞன் துளசியை அடைந்ததும் இறுகத் தழுவி, கன்னத்தில் முத்தமிட்டு விட்டான். பளாரென்று ஓர் அறை விட்டாள் அவன் கன்னத்தில்.

"யூ ஸில்லி கேர்ல்! ஏன் உங்க அண்ணனை அடிச்சே?" என்று டாடி சீற.....

"அண்ணனுமில்லே.... கண்ணனுமில்லே; நான் உங்க ஜெறலனேயில்லே..... பாவ்...." என்று அழுதவாறு, 'சர்ச்சை' விட்டுவெளியே ஓடலானான். மாந்தோப்பில் புகுந்து ஓடினான்.

"காட்ச்.... காட்ச் ஹர்" என்று காச்சு மூச்சென்று டாடி கத்தித் துரத்த, கண்மண் தெரியாமல் மாந்தோப்பு இருட்டில் ஓடியவன் யார் மீதோ மோதிக் கொண்டு கீழே விழுந்தான். "நான்சென்ஸ்" என்று இவன் கத்த, அந்த உருவமும், 'நான்சென்ஸ்' என்றது.

கூர்ந்து கவனித்த பிறகு இருவரும், "நீயா!" என்று கூவிவிட்டார்கள். "சீக் கிரம் சீக்கிரம்! நல்ல வேளையா கிடைச்சியே!" என்று அந்த இருட்டிலேயே அவர்கள் உடை களை மாற்றிக் கொண்டு விட்டார்கள்.

"பிஸ்க்" என்ற ஹைதலோடு வந்து நின்ற படகுக் காரிலிருந்து இறங்கிய டாடி இந்த இருவரையும் கண்டு 'க்வாக்' என்று அலறி, அசந்து போய் நின்றார்.

மறு நாள்...:

"என்ன காரியம் செய்தேடி துளசி! அந்த ஜெறலன் வந்ததும், டிரஸ்ஸைச் சீக்கிரம் மாற்றிக் கொண்டு விடு: பாவம் நேற்று ரொம்பவும் சிரமப்பட்டுத் தவித்துப் போய் விட்டான்" என்று கல்லூரியில் சிநேகிதைகள் கூறிய போது...

"ஆங்! மண்ணுங்கட்டி." என்று எடுப் பான தெற்றுப் பல் தெரியப் பல்லைக் கடித் தாள் ஜெறலன்!



ஹ்யூலெட்ஸ் மிக்சர்

அருந்தி விரைவில் நிவாரணம் பெறுங்கள்

வேலை மும்முரமும் கவலையும் ஜீரணத்தை பாதிக்கின்றன; பசியை மந்திக்கச்செய்து, தளர்ச்சியூட்டுகின்றன. ஹ்யூலெட்ஸ் மிக்சர் விரைவில் நீடித்த பரிகாரம் அளிக்கிறது. ஹ்யூலெட்ஸ் மிக்சர் வயிற்று உபாதையை விரைவில் போக்கி, நிரந்தரமாக குணமளிக்கிறது. வலியுண்டாக்கும் அமிலங்களை அகற்றி, ஜீரண கோசத்திற்கு அதன் வேலையை சரிவர செய்வதற்கேற்ப பாதுகாப்பளிக்கிறது. ஹ்யூலெட்ஸ் மிக்சர் குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளுக்கும் கூட சிறந்தது. வயிற்றுப்போக்குக்கு அபினிசேர்த்த ஹ்யூலெட்ஸ் மிக்சர் குணமளிக்கும்

ஹ்யூலெட்ஸ் மிக்சர் ஜீரணத்திற்கு சிறந்தது.




C. J. ஹ்யூலெட் & ஸன் (இந்தியா)-பிரைவேட் லிமிடெட்
85 A, தைனியப்ப நாயக் தெரு, மதராஸ் 3

சலசலப்பும் சங்கடமும்

எஸ். பத்மாவதி





சலசலப்பு :

லலிதா எழுதிய முதல் கதை ஒரு பிரபலமான பத்திரிகையில் பிரசுரமானது, யாரும் எதிர்பாராத நிகழ்ச்சிதான். பிரசுரமானதுடன், அவளுக்கு அதற்காக ஐம்பது ரூபாய் அன்பளிப்பும் கிடைத்தது; அதைத் தொடர்ந்து அவளுக்கு நேரிடையாகவும், மறைமுகமாகவும் கடிதம் மூலமும் பாராட்டுதல்கள் வந்தன. இந்த நிகழ்ச்சி அவளைச் சேர்ந்தவர்கள் மத்தியில் சிறு சலசலப்பை உண்டாக்கியது.

கணவன்: என் லலி இவ்வளவு புத்திசாலியென்று இப்பொழுதுதானே தெரிகிறது.....லலி....இனிமேல் மாடி 'ரூம்' உன்னுடையது. உனக்கு ஒரு சிறிய மேஜையும், நாற்காலியும் வாங்கிக் கொடுத்து விடுகிறேன். தனிமையில் உட்கார்ந்து எழுதச் சௌகரியமாக இருக்கும். உன் பேனா ஒழுகுகிறது என்று சொன்னாயே.....தூக்கி எறிந்து விட்டு நல்ல பேனாவாக ஒன்று வாங்கிக் கொண்டு விடு. இனிமேல் உனக்கென்ன கவலை.....? உன் பணத்தில் விதம் விதமான புடவைகளும், நகைகளும், என் தயவில்லாமலேயே வாங்கிக் கொள்ளலாம். ஏன்....... சும்மா நின்று கொண்டிருக்கிறாய்? போய்க் கதை எழுதுகிறதுதானே? நான் இப்படி ஒரு சுற்றுச் சுற்றி நமக்குத் தெரிந்தவர்கள் எல்லோருடைய காதிலேயும் உன் கதை வந்திருக்கும் சமாசாரத்தைப் போட்டுவிட்டு வருகிறேன். டேய்... வாண்டுகளா! அவள் எழுதும்போது யாரும் போய்த் தொந்தரவு செய்யக் கூடாது!

மாமியார் : உம்...... என்னமோ பேனா கையில் கிடைத்ததென்று எல்லோரும் எழுத ஆரம்பித்து விடறா....பத்திரிகைக்காரனும் போட்டுடறான். வீட்டுக்குச் சவரணையா....இடுப்பை வளைச்சு....நாலு காரியம் முழுசாச் செய்யத் தெரியல்லே... இதிலே கதை எழுதறாளாம் கதை! என்ன வேண்டிக் கிடக்கு.....! எப்போ பார்த்தாலும் குழந்தைகளைக் கதற விட்டுட்டுக் கதை எழுதறாட்டா... என்ன பாழாய்ப் போறது? பரட்டைத் தலையும், ஊளை மூக்குமா மண்ணுலே புரண்டுண்டு கிடக்கிற குழந்தைகளைக் கவனிச்சுக் குடும்பப் பொறுப்போட நடத்துண்டா ஆயிரம் கதை எழுதினதுக்குச் சமமாகாதோ.....! குடும்பப் பெண்களுக்கு இதெல்லாம் எதுக்கு? இவ....கதை எழுதறதாம்....... அதை ஊருலே இருக்கிறவாளெல்லாம் படிக்கிறதாம்; ஐம்பது ரூபாயைக் கண்ணுலே கண்டதும், குதியாக் குதிக்கிறா. முன்னே பின்னே காசைப் பார்த்திருந்தால்தானே....! இந்த லட்சணத்தில் இவன் வேறே இவளைத் தலையில் வைச்சுண்டு கூத்தாடறான். பிரமாதமா இதைப் போய்ப் பறைசாத்தக் கிளம்பிவிட்டான் வீடு வீடா...தனக்கு வந்து வாய்ச்ச மாட்டுப்பெண்தான் இப்படின்னு..... என் வயத்துலே பொறந்தது கூடவா இப்படி ரெண்டுங் கெட்டானுப் போகணும்...... ராமா! ராமா!

மாமனார் : ஏம்மா, லலிதா! உனக்கு இவ்வளவு நன்றாக எழுதத் தெரியும்னு எனக்குத் தெரியவே தெரியாதே......ஆமாம்! உனக்குத்தான் காலையிலிருந்து இரவுவரை காரியம் கையை ஒடிக்கிறதே.... இதுலே கதை எழுத எங்கே நேரம் கிடைக்கிறது? இனி மேல் சாயந்திரம் இந்தப் பசங்களை நான் வெளியே உலாவ அழைச்சிண்டு போயிடறேன். நீ கொஞ்ச நேரம் நிம்மதியா எழுது. இந்தாம்மா லலிதா! இந்த ஐம்பது ரூபாயையும் உனக்கு வந்த ரூபாயோட சேர்த்து நீ ஆசைப்பட்ட பச்சைப் பனாரஸ் புடவையை வாங்கிக் கொள். அதோ! உன் மாமியார் வரா..... லலிதா! ரொம்பத் தாகமா இருக்கு. சீக்கிரம் ஒரு டம்ளர் ஜலம் கொண்டு வா....

நாத்தனார் : ஏன், மன்னி! நிஜம்மா நீ எழுதின கதையா இது? என்னால் நம்பவே முடியலையே! ஒரே வீட்டுலே இருந்தும் நீ எழுதினதை நான் பார்க்கவே இல்லையே! ஏன் மன்னி! நீதான் படிச்சிருக்கையே! உன்கதையை விட என் கதையெல்லாம் என்ன குறைந்து விட்டன? உடனே திருப்பி அனுப்பிச்சுடறான்களே? அது சரி, மன்னி! பணத்தை அண்ணாகிட்டே கொடுத்துடாதே! புதுசு புதுசா அடுத்தவாரம் நிறைய நல்ல நல்ல சினிமா வெல்லாம் 'ரிலீஸ்' ஆகிறது. பணத்துக்காக யார் கிட்டேயும் பல்லைக் காட்டாம நாம 'ஜாலி'யாகப் போய்விட்டு வரலாம். குழந்தைகளைப் பற்றிக் கவலைப் படாதே....நான் அம்மாகிட்டே சொல்லிப் பார்த்துக்கச் சொல்லறேன். இல்லாவிட்டால் உங்க அம்மா வீட்டில் கொண்டு விட்டு விட்டுப் போகலாம்.

மைத்துனன்: ஆமாம், மன்னி! உங்கள் கதை நன்றாயிருந்தாலும் 'சஸ்பென்ஸ்' 'சப்'பென்று இருக்கிறது. என்கிட்டே ஒரு வார்த்தை கேட்டிருந்தேனானால் நான் இதை விடப் 'பேஷான' முடிவைச் சொல்லியிருப்பேன்; அதனாலே கெட்டுப் போகலே........அடுத்த தடவை கதை எழுதினதும் என்னிடம் ஒரு தடவை காண்பித்து விட்டு அனுப்புங்கள். எல்லோரும் திகைக்க, நின்னுடறாப் போல முடிவை மாத்தித் தரேன். அவசரமா வெளியிலே போகணும்......ஒரு பத்து ரூபா தாங்களேன். அம்மாகிட்டே கேட்டால் தரமாட்டாள்.

அப்பா : ஏம்மா, குழந்தே! உன் கதை ரொம்ப ரொம்பப் பிரமாதம் போ! நீ பள்ளியில் படிக்கும் போதே எனக்குத் தெரியும் உன் சாமர்த்தியம். இந்தக் கதைக்கு நூறு ரூபாய் கொடுத்திருக்கணும். ஐம்பது ரூபாய் ரொம்பக் கம்மி.

அம்மா : லல்லி! இப்படி வந்து கிழக்கும் பார்த்து உட்காரு. திருஷ்டி சுத்திப் போடறேன். எல்லோர் கண்ணும் ஒரே மாதிரி இருக்குமா? செவ்வாய், வெள்ளி தவறாமல் எண்ணெய் தேய்த்துக் குளி. தலை சூடு குறையும். ராத்திரி படுக்கும்போது ஞாபகமா கண்ணுலே இரண்டு சொட்டு விளக்கெண்ணெய் விட்டுக் கொள். உனக்கு எப்போ எழுதணும்னு தோணறதோ அப்போ அங்கே, நம்ப வீட்டுக்கு வந்துவிடு. நிறையச் சீடை பக்ஷணம் வைக்கிறேன். எழுதும் போது தின்னுண்டே எழுதலாம்.

குறும்புக்கார அண்ணன்: ஏய் லல்லி! உன்னைக் கொல்லணும்! நான் எழுதணும்னு வைச்சிருந்த 'ஐடியா'வை நீ திருடிண்டுட்டே! நான் சொன்ன கதையை நான் எழுதறதுக்கு முன்னே எழுதி அனுப்பி 'லட்டு'போல் பரிசைத் தட்டிட்டே! அதனால் பாதிப் பணம் எனக்குச் சேரணும்.

அக்கா : ஏண்டி லல்லி! எனக்கு ஒரு கடிதம் எழுதறதுன்னு உனக்கு நேரமிருக்காது. கதை எழுத மட்டும் எங்கிருந்து நேரம் கிடைத்ததாம்? போனால் போகட்டும். இந்தத் தடவை மன்னித்தேன். எனக்கு ஒழுங்காகக் கடிதம் போட்டால்தான் இனி மேல் உன் கதைகளைப் படிப்பேன். இல்லாவிட்டால் நிச்சயம் படிக்கவே மாட்டேன். தெரிந்து கொள்! உன் அத்திம்பேர் ஒரு பெரிய 'கிரிடிக்' என்று தெரியுமே. அவர் கூடக் கதை பேஷா இருக்கிறதென்று சொல்லி விட்டார். ஆனால்... உன்னாலே எனக்குக் கெட்ட பெயர். 'உன் தங்கை கதை எழுதியிருக்கிறாள். நீயும் இருக்கிறாயே, மட்டி!' என்று அவர் திட்டுகிறாரடி.

தம்பி : என்ன லல்லியக்கா! நான் எவ்வளவு நாளா நாங்க நடத்தற கையெழுத்துப் பத்திரிகைக்கு ஒரு கதை எழுதிக் கொடுன்னு கேட்டுண்டிருக்கேன். எங்க பத்திரிகையை விட அந்தப் பத்திரிகை ரொம்ப ஒசத்தின்னு எண்ணமோ?

பாட்டி : லலிதாம்பா! இங்கே வந்து இரண்டு நிமிஷம் உட்கார்ந்து நீ எழுதின கதையைப் படிக்கக் காட்டக் கூடாதோ? எனக்குத்தான் 'சாளேசுவரம்' வந்துடுத்து. இப்ப உங்க தாத்தா இருந்தால் அப்படியே பூரித்துப் போயிடுவார். தாத்தாவுக்கு வாரிசு நான்தான்னு நீ எழுதக் கிளம்பிட்டே..... அந்த நாள்லே உங்க தாத்தா எழுதினதையெல்லாம் நீ படிச்சதில்லே. முதல்லே எனக்குத்தான் படிக்கக் காட்டுவார். நான் சரின்னு சொன்னால்தான் பத்திரிகைக்கு அனுப்புவார். உம்... பேரன்களெல்லாம் அவரைக் கொள்ளாததற்கு, பேத்தி நீயாவது கொண்டிருக்கியே!

பக்கத்து வீட்டு மாட்டுப் பெண் (தன் மாமியாரிடம்): இந்த லல்லி எப்பவுமே கர்வம் பிடிச்சவள். சரியா யாரிடமும் பேச மாட்டாள். இனி மேல் கேட்க வேண்டுமா?

சிநேகிதி: என்னடியம்மா லல்லி! இனி மேல் உனக்கு எங்களையெல்லாம் நினைவிருக்குமா? பெரிய எழுத்தாளியாகி விட்டாய். இனி மேல் உன்னைப் 'பேட்டி' காணுவதே அரிதாகி விடும்.

லல்லியின் ஒரு வயதுப் பிள்ளை (தனக்குள்): பாவம் அம்மா! எல்லோரும் நன்னா ஏமாத்திட்டா. நீ எழுதின கதை 'ஜோரா' இருக்கு, 'பேஷா' இருக்கு, சுவையா இருக்கு அப்படின்னு சொல்றா. ஆனா நான்தான் பார்த்துண்டே இருக்கேனே! ஒருத்தர்கூட அதை நக்கிக்கூடப் பார்க்கல்லே. என் கையிலே அந்தப் புக்கு கிடைச்சா, நிஜம்மா எப்படி இருக்குன்னு வாயிலே போட்டுச் சப்பி விட்டுச் சொல்லுவேன். என் கையிலே எட்டாத உசரத்துலே வைச்சிருக்காளே....

சங்கடம்

லீலா : என்ன! எப்படி இருக்கு என் கதை?

கோபு: நன்னாத்தான் இருக்கு.....ஆனா....

லீலா : என்ன! ஆனா...ன்னு இழுக்கறேள்?

கோபு: கோபிக்காதே, லீலா! உன் முதல் கதை பிரசுரமானதை வைச்சுண்டு இந்தக் கதை எழுதியிருக்கேன்னு நன்னாத் தெரியறது. ஆனால் நிஜம்மா நடந்ததை எழுதாமல் எல்லாம் மாத்தி எழுதிட்டே? இனி மேல் உன் பணத்துலேதான் நீ புடவை, நகையெல்லாம் வாங்கிக்கணும்னு நான் எப்போ சொன்னேன்? அது போகட்டும். எங்கம்மாதானே உன் கதை ரொம்ப நன்னாயிருக்குன்னு அதிக சந்தோஷப்பட்டு, வரவா போறவாகிட்டே எல்லாம் சொல்லிப் பெருமைப்பட்டுக்கறா. கதை எழுதின கைக்குக் 'கல் வளை' வேறு செய்ய ஆர்டர் கொடுத்திருக்கிறாள். நீ வந்து இப்படி மாமியாரைப் பத்தி எழுதியிருப்பதைப் படித்தால் மனசு சங்கடப்படமாட்டாளா?

லீலா: ஐயய்யோ! இந்தச் 'சலசலப்பு' என்னைச் சங்கடத்துலே கொண்டு விட்டுவிடும் போல இருக்கே. இதிலே எழுதினது எல்லாம் நிஜம்னு நீங்க ஏன் எடுத்துக்கணும்? இது கதைன்னுதானே சொன்னேன். பொதுவா எப்படி எழுதினா படிக்கிறவாளுக்குச் சுவாரசியமாக இருக்கும் என்று யோசிச்சு எழுதினேன். என் 'மாமியார்' ஆயிரத்தில் ஒருவர். அவர் மாதிரியே எல்லோரும் இருப்பார்களா என்ன?

கோபு: ஆமாம், எல்லாம் கதை சுவாரசியத்துக்குன்னு புரிஞ்சு போச்சு. ஆனா கடைசியில் என் சுவாரஸ்யத்தைத் தூண்டி விடறதுக்கு ஒரு குட்டி ஆசை கிளப்பியிருக்கியே. அது எப்போ நிஜமாகப் போறது?

லீலா : ஐயோ! போதுமே..... அம்மா வரார். காதுலே விழப் போறது. உம்..... இப்போ நீங்க இதை 'போஸ்ட்' செய்யப் போறேளா..... அல்லது நான் போகட்டுமா?

கோபு: என்னைத் துரத்தணும்னு பார்க்கிறாயா? அதெல்லாம் முடியாது. நீ தனியாகப் போவானேன்? நானும் வரேன். 'போஸ்ட்' செய்து விட்டு அப்படியே பீச்சுக்குப் போய் மேலே பேச்சைத் தொடரலாம்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.





வெள்ளை டெட் பவுடரினால் மட்டும்தான் உங்கள் வெள்ளைத் துணிகளை பளிச்சிடும் வெண்மையுடனும் வண்ண நிறத் துணிகளை துப்புரவாகவும் வெளுக்க முடியும். நவீன டெட் ஒன்றுதான் துணிகள் பாழாகாமல் சலவை செய்ய உதவுகிறது.

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட் பம்பாய்

Shilpi SOM 23 Tam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

